
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16 - 30 ஜூன் '90 5/15 விலை ரூ.2

டி.வி.எஸ். பார்ப்பன முதலாளியும் 'சூத்திர' ஆட்சியும் கூட்டு

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு




## கருணாநிதியின் இனத் துரோகம்

படிப்பகம்

www.padippakam.com



# புனிதப் போர்வை

ஆழ்ந்த சிந்தனை வயப்பட்டது போல குப்பைத்தொட்டியில் படுத்திருக்கும் நாயைப் பார்த்திருக்கிறீர்களா? அதற்கு ஒரு கதை சொல்வார்கள். ''முற்பிறவியில் அரச குலத்தில் பிறந்து சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த நாம் இப்பிறவியில் நாயாய்ப் பிறந்து குப்பைத்தொட்டியில் வாசம் செய்யும் நிலைமையாகிவிட்டது'' என்று நினைத்துக் கொள்ளுமாம். இப்படி நினைத்த மறுகணம் விருட்டென்று எழுந்து ஓடுமாம். அடுத்த குப்பைத் தொட்டி கிடைத்தவுடனே... மீண்டும் பழைய கதைதான்! முன்னாள் மத்திய அமைச்சரான கே.கே.திவாரி, ராஜ்யசபா சபாநாயகர் சங்கர் தயாள் சர்மாவை கீழ்த்தரமாகப் பேசியதற்காக 'மாண்புமிகு' மேலவை உறுப்பினர்களும், பத்திரிக்கைகளும் வெகுவாக அங்கலாய்த்துக் கொள்வதும், பாராளுமன்ற மரபுகளும் தரமும் இதனால் கெட்டுவிட்டதாகப் புலம்புவதும் நாய்க்குத் தோன்றிய ஞானோதயத்தைத்தான் நினைவுபடுத்துகின்றன.

மே-22 ம்தேதி - கேள்வி நேரத்தை ரத்து செய்துவிட்டு மௌல்வி படுகொலை செய்யப்பட்டதையொட்டி காஷ்மீர் விவகாரம் பற்றி பேச காங்கிரஸ் கோரி அனுமதி மறுக்கப்பட்டது. உடனே காங்கிரஸ் உறுப்பினர்கள் வி.பி.சிங் எதிர்ப்பு கோஷம் போட்டுக் கொண்டே சபாநாயகரை நோக்கி ஊர்வலமாக வரத் தொடங்கினர். ''உங்களுடைய நடத்தையை இந்த நாடு மன்னிக்காது. எல்லாவற்றுக்குமே ஒரு எல்லை உண்டு. நீங்கள் ஜனநாயகத்தைப் படுகொலை செய்ய முயல்கிறீர்கள்; நான் இங்கே இருக்கும்வரை அது நடக்காது'' என்று எழுந்து நின்று கத்தத் தொடங்கினார் சபாநாயகர்.

''எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்; இன்று நாம் இங்கே இருக்கிறோம். நாளை இருக்க மாட்டோம். இந்த அவையை கேலிக் கூத்தாக்கி விடாதீர்கள்'' என்று மன்றாடிப் பார்த்தார். அதற்கும் காங்கிரசார் அசைய மறுக்கவே எழுந்து நின்று இரு கைகளையும் அகலவிரித்து ''வாங்க... என் மென்னியை நெரிச்சு கொல்லுங்க'' என்று ஆற்றாமையால் புலம்பினார். உட்கார்ந்து அழத் தொடங்கினார்.

நவரசங்களின் எல்லையையும் நாடாளுமன்றம் தொட்டிருந்தபோதிலும் இத்தகைய சோகக்காட்சி ஒரு புதுமை என்பதால் காங்கிரஸ், ஜனதாதளம் உள்ளிட்ட சர்வ கட்சி ஜாம்பவான்கள் சபாநாயகரை சமாதானம் செய்தனர். மதியத்திற்கு மேல் அவையை துணைத்தலைவர் நஜ்மா ஹெப்துல்லா நடத்தினார். அவர் நிகழ்ச்சி நிரலைப் படிக்கத் தொடங்கியவுடனே ஓடிவந்து அதைப் பிடுங்கினார் காங்கிரஸ் எம்.பி. அலுவாலியா உடனே அவையை ஒத்தி வைத்து விட்டு தப்பித்தார் நஜ்மா ஹெப்துல்லா.

மே. 22ம்தேதி நடைபெற்ற இந்த சம்பவங்களைப் பற்றி கருத்து தெரிவித்த கே.கே. திவாரி, சங்கர் தயாள் சர்மா காங்கிரஸ் உறுப்பினர்களைத் தரக் குறைவாகப் பேசியதும், தான் அழுததையும் சபைக் குறிப்பில் எழுதச் சொல்லியதும் அவர் அந்த பதவிக்கு லாயக்கற்றவர் என்பதை நிரூபிப்பதாகக் கூறினார். சர்மாவை ஆளும் கட்சியின் ஜால்ரா என்று சாடினார்.

இதற்குத்தான் இவ்வளவு பரபரப்பு. திவாரியை 'வன்மையாகக் கண்டிக்க' வேண்டும் என்பதை காங்கிரஸ் உள்ளிட்டு அனைத்துக் கட்சிகளும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டன. ''மே-31ம் தேதி ராஜ்யசபையில் அவர் ஆஜராக வேண்டும்'' என்று உத்தரவு அனுப்பப்பட்டது. தான் அவ்வாறு பேசியது உண்மைதான் என்று ஏற்றுக் கொண்ட திவாரி எந்த சூழ்நிலையில் தான் அவ்வாறு பேச நேர்ந்தது என்பதை விளக்க தனக்கு வாய்ப்பளிக்காமலேயே தன்னை ராஜ்யசபை தண்டனைக்குள்ளாக்குவது நீதிக்குப் புறம்பானது என்று சுப்ரீம் கோர்ட்டில் மனுச் செய்தார்.

தமிழகத்தில் முன்னாள் சபாநாயகர் பாண்டியனும் நாகாலாந்தில் உயர்நீதிமன்றத் தீர்ப்பும் கிளறிவிட்ட அந்த முடிவுபெறாத 'மாபெரும்' சர்ச்சை - நீதிமன்றமா? - மக்களவையா எது பெரியது என்ற விவகாரம் - திவாரியின் கோரிக்கையை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்ததால் மீண்டும் எழும்பாமல் போனது.

ஜூன் 1ம்தேதி - இந்திய நாடாளுமன்ற வரலாற்றிலேயே முதன் முறையாக இடம் பெற போகும் அந்த காட்சியைக் காண அவையில் ஏக கூட்டம். இதற்காகவே விசேடமாக அமைக்கப்பட்ட கூண்டில் திவாரியை நிறுத்தி அதிகாரபூர்வமாகத் தனது கண்டனத்தைத் தெரிவித்த நஜ்மா ஹெப்துல்லா ''நாடாளுமன்ற ஜனநாயகம் என்னும் புனிதமான அமைப்பு முறைக்கெதிராக நீங்கள் புரிந்துள்ள குற்றத்தை உணர்ந்து திருத்திக்கொள்ளுங்கள்'' என்று உபதேசம் செய்தார். தங்களது மாபெரும் சாதனை குறித்து 'ஜனநாயகவாதிகள்' மகிழ்ந்து கொண்டிருக்கும்போதே, சிறிதும் குற்ற உணர்வின்றி தொழில் முறைக் கிரிமினலுக்கே உரிய 'கம்பீரத்தோடு' அவையை விட்டு வெளியேறினார் திவாரி.

பாராளுமன்றத்தில் 'தண்டனை' பெற்ற கே.கே.திவாரி தலைகுனிவு யாருக்கு?



இச்சம்பவத்தை மட்டும் தனித்துப் பார்ப்பவர்களுக்கு வேண்டுமானால் இந்திய நாடாளுமன்றத்தின் தகுதி பிரமிக்கத் தக்கதாகத் தோன்றலாம்; ஆனால் நமக்கோ திடீரென்று இவர்கள் போடும் 'பத்தினி வேடம்' அருவெறுப்பைத் தருகிறது. சொல்லப்போனால் உண்மையைப் பேசியதற்காக திவாரி தண்டிக்கப் பட்டிருக்கிறார். காங்கிரஸின் பொதுச் செயலராக இருந்து நேரு பரம்பரைக்கு ஊழியம் செய்து தனது விசுவாசத்திற்கு சன்மானமாக சங்கர் தயாள் சர்மா பெற்றதுதான் துணை குடியரசுத்தலைவர் - சபாநாயகர் பதவி. சொல்லிக் கொள்ளப்படும் நாடாளுமன்ற நடைமுறைகளிலும் தேர்ச்சியோ அனுபவமோ இல்லாத, கோயில், குளங்களைச் சுற்றுவதைத்தவிர வேறொன்றும் அறியாத பார்ப்பனப் பண்டாரமான சர்மா தனது தகுதியையும் யோக்கியதையையும் மறந்து 'ஜனநாயகம்' அது இது வென்று பேசத் தொடங்கியவுடனே திவாரிக்கு ஆத்திரமேற்பட்டதில் ஆச்சரியமல்ல.

செருப்பு வீச்சு, அடிதடி, ரத்தக்காயம், வேட்டி அவிழ்த்தல், ஆபாச சேட்டைகள், ஊளையிடுதல், பொய் சொல்லுதல் ஆகியவற்றால் கெட்டுப்போகாத நாடாளுமன்றத்தின் புனிதம் திவாரியின் பேச்சால் கெட்டுவிட்டதாகக் கூறுவது நல்ல பம்மாத்து.

இந்த லட்சணத்தில் நாடாளுமன்ற புனிதர்களின் குருபீடமான இந்தியன் எக்ஸ்பிரஸ் ''இனி நாடாளுமன்ற நிகழ்ச்சிகளை ஒளிபரப்பவேண்டும். அப்போது தான் மக்கள் பார்த்துவிடப் போகிறார்களேயென்று உறுப்பினர்கள் ஒழுங்காக நடந்து கொள்வார்கள்'' என்று ஆலோசனை வழங்கியிருக்கிறது. ஓட்டுச் சாவடியைக் கைப்பற்றி கள்ள ஓட்டு போடுவதை நேரில் படம் பிடித்துக் காட்டியவுடனே அடுத்த தேர்தலில் ஓட்டுக்கட்சிகள் திருந்திவிட்டனரா என்ன? இன்னும் தைரியமாகவும் வெளிப்படையாகவும் செய்யத் தொடங்கினர்.

உண்மையைச் சொல்லப் போனால் ஜனநாயகத்துக்கும் கண்ணியத்துக்கும் இந்த ஓட்டுப் பொறுக்கிகளுக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. கொள்கை - லட்சியங்களை மூட்டை கட்டி வைத்துவிட்டு பிழைப்புவாதத்தைக் கொண்டு பொறுக்கி அரசியல் நடத்தக் கிளம்பிவிட்ட இவர்களுக்கு இத்தகைய ரௌடித்தனங்களும் கேலிக்கூத்துக்களும் அவசியமாகிவிட்டன. நாடாளுமன்ற அராஜகங்கள் மூலம் தமது வீரதீர சாதனைகளைக் காட்டியும், அனுதாபங்களைப் பெற்றும்தான் அவர்களால் அரசியல் நடத்த முடியும் என்ற அளவுக்கு இழிந்து போய்விட்டார்கள்.

● அஜித்

படிப்பகம்

www.padippakam.com

**புதிய ஜனநாயகம்**

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஐந்தாமாண்டு

**15**

16 - 30 ஜூன் '90

உள்நாடு
தனிஇதழ் : ரூ.2.
ஆண்டு சந்தா : ரூ.48

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுசந்தா : US$ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

# கருணாநிதியின் தமிழினத் துரோகம்

தமிழர் தன்னுரிமை இயக்கத்தின் மீது தாக்குதலை ஏவிவிட்டிருக்கிறது. தமிழினத் தலைவர் எனக் கூறிக் கொள்ளும் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. அரசு. அதற்கு எதிராக ஒரு சொல்லும் கூறத் துணியாது, கருணாநிதியுடன் கூடி விருந்தும் விழாவும் நடத்திக் கொண்டிருக்கிறது. தமிழினத் தளபதி எனக் கூறிக் கொள்ளும் வீரமணி தலைமையிலான தி.க. இதன்மூலம் அவர்கள் தமிழினத்தின் துரோகிகள் என்று தம்மைப் பகிரங்கப்படுத்திக் கொண்டுள்ளார்கள்.

இம்மாதம் 9, 10 தேதிகளில், தஞ்சையில் பாரதிதாசன் நூற்றாண்டுவிழா, தமிழர் தன்னுரிமை பிரகடன மாநாடு மற்றும் நெடுமாறன் தலைமையிலான தமிழர் தேசிய இயக்க மாநாடுகள் நடத்துவதென்று அந்த இயக்கத்தினர் அனுமதி பெற்று ஏற்பாடுகள் செய்து வந்தனர். மாநாட்டை ஒட்டி தமிழர் வாழ்வியல் மற்றும் ஈழத்தில் இந்திய இராணுவத்தின் அட்டூழியங்கள் பற்றிய புகைப்படக் காட்சி துவங்கியிருந்தது. ஆனால் 6-ந்தேதி, மாநாட்டு அனுமதியை ரத்து செய்து தடை விதிக்கப்பட்டது. காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த புகைப்படங்களுடன் மாநாட்டுப் பொருட்களைப் போலீசு பறிமுதல் செய்தது. மாநாட்டுக் குழுவினரைக் கைது செய்து 124-ஏ பிரிவின் கீழ் தேச துரோக வழக்குப் போட்டு சிறையில் அடைத்தது.

தடையை மீறி மாநாடு நடக்குமென நெடுமாறன் அறிவித்தார். உடனே போலீசு தனது அராஜக அடாவடித்தனங்களை முடுக்கிவிட்டது. ஒப்பந்தக்காரர்களை மிரட்டி மாநாட்டுப் பந்தலைப் பிரித்து, திடலை இழுத்து மூடி தடை அறிவிப்பு அறிக்கை எழுதி ஒட்டியது. தஞ்சையில் உள்ள தங்கும் விடுதிகளைச் சோதனையிட்டு மாநாட்டுக்கு வந்திருந்த பலரைக் கைது செய்தது. பொது மக்கள் பலரையும் மிரட்டி, தொல்லைப்படுத்தி, நள்ளிரவிலேயே வெளியேற்றியது. 200க்கும் மேற்பட்ட துப்பாக்கி ஏந்திய போலீசை நிறுத்தி பயபீதியூட்டி, ஊரடங்கு உத்திரவு போட்டு மக்களை விரட்டியது. தடையை மீறி சாலையில் அமர்ந்து கூட்டம் நடத்தி முழக்கமிட்டதற்காக நெடுமாறன் உட்பட தமிழர் தேசிய இயக்கம், அறிவியக்கப் பேரவை, உலகத் தமிழர் முன்னேற்றக் கழகம், மார்க்சிய பொதுவுடமைக் கட்சி ஆகிய குழுக்களின் தலைவர்கள், அணிகள் மற்றும் தெலுங்கு தேச விடுதலை இயக்கத் தலைவர் ஆகிய 88 பேர் கைது செய்யப்பட்டனர்.

கருணாநிதி அரசின் இந்த நடவடிக்கைகளுக்காக மகிழ்ந்து, பகிரங்கமாகவே பாராட்டுகின்றன, ஆர்.எஸ்.எஸ், பாரதீய ஜனதா, இந்து முன்னணி மற்றும் பார்ப்பனப் பத்திரிக்கைகள். இந்தக் கும்பலைப் போலவே, திராவிட இயக்கத்துக்கு எதிராக நீண்டகாலமாகவே பிரிவினைவாத பீதி - பூச்சாண்டி காட்டி வருகின்றன, காங்கிரசு, அ.தி.மு.க. மற்றும் போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகள். ஓட்டுப் பொறுக்குவது மட்டும் இதற்குக் காரணமல்ல. மதவெறி, 'தேசிய' வெறி, ஆக்கிரமிப்பு - ஆதிக்க வெறியோடு தேசிய இன ஒடுக்குமுறையும் அவர்களின் கொள்கை - நோக்கமாக இருக்கிறது. தி.க.வின் பார்ப்பன எதிர்ப்பை முறியடிக்கவும் அவர்களுக்கு அது அவசியமாக இருக்கிறது.

இலங்கை - ஈழத்தின் மீதான அவர்களது ஆக்கிரமிப்பு - ஆதிக்க நோக்கங்கள் - கொள்கைகள் படுதோல்வி கண்டு விட்டன. அதைச் சரிக்கட்டவும் வேண்டியுள்ளதால், ''தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் அட்டகாசம்; தி.மு.க. அரசு மற்றும் தி.க. ஆதரவோடு விடுதலைப் புலிகளின் முகாம்கள் தமிழ்நாட்டில் உள்ளன. அங்கே தமிழகப் பிரிவினைவாதிகளுக்கு புலிகளின் ஆயுதமும், பயிற்சியும் அளிக்கப்படுகிறது'' என்று இந்து மதவெறி அமைப்புகள், காங்கிரசு மற்றும் பார்ப்பன ஏடுகள் பிரச்சாரம் செய்து வருகின்றன. ஈழ விடுதலைப் போரின் தாக்கம் காரணமாக தமிழர் தன்னுரிமை கோரும் பல சிறுகுழுக்கள் இப்போது கூட்டுச் சேர்ந்து மாநாடுகள், கூட்டங்கள் என்று தமது இயக்கத்தைத் தீவிரப்படுத்தியுள்ளதை அதன் எதிரிகள் ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

குறிப்பாக, தஞ்சை தன்னுரிமை மாநாட்டை எதிர்த்து தடை செய்யக் கோரி பிரதமருக்குத் தந்தி கொடுத்து, உண்ணாவிரதமிருக்கத் திட்டமிட்டிருந்தது பாரதீய ஜனதா, இந்து முன்னணி. ''தமிழர் பிரிவினைப் படையில் சேர்ந்தால் நல்ல உணவு, உடை, பயிற்சியும் ஆயுதங்கள் - பணமும் தருவதாக இளைஞர்களுக்கு நெடுமாறன் கடிதம் எழுதினர். இலங்கை போகும் ஆசையோடு இளைஞர்கள் வந்தார்கள். மாநாடு தடை செய்யப்பட்டதைக் கேட்டு தஞ்சை மக்கள் மகிழ்ச்சி நிம்மதி அடைந்தார்கள்...'' - இப்படி மற்ற பார்ப்பன ஏடுகளை விட அதிகமாகவே அவதூறுகளை எழுதியது தினமலர். தன்னையும் தனது குடும்பத்தையும் பற்றி எழுதினால் பிற பத்திரிக்கைகள் மீது பாயும் கருணாநிதி இந்தப் பார்ப்பன ஏடுகளை எதுவும் செய்யவில்லை. மாறாக, அவர்களது கோரிக்கைகளையும் மத்திய போலீசு - உளவுத்துறையின் உத்திரவுகளையும் ஏற்று தன்னுரிமை இயக்கத்தின் மீது தாக்குதல் தொடுத்துள்ளார்.

அதற்குக் காரணம், கருணாநிதியின் அரசியல் எதிரிகள் கூறுவதுபோல, அவர் புலிகளுடன் நெருங்கிய பிணைப்புடையவரோ, பிரிவினைவாதியோ அல்ல என்பதுதான். புலிகள் முன்பு எம்.ஜி.ஆருடன் கூடிக் குலாவித் தன்னை அவமானப்படுத்தியதற்குப் பழி தீர்க்கும் எண்ணத்தை கருணாநிதி கைவிட மாட்டார். தன்னுடைய அதிகார எல்லைக்குள் இன்னொரு ஆதிக்க சக்தி (புலிகள்) தலையிடுவதையும் அவர் ஏற்கமாட்டார். கருணாநிதி தமிழகப் பிரிவினைக்கோ, தன்னுரிமைக்கோ மட்டுமல்ல, அவரே அறிவித்துள்ள கொள்கையான மாநில சுயாட்சிக்குக் கூட போராடும் துணிச்சலும் நோக்கமும் கொண்டவர் கிடையாது. அவர் இன, மொழி உணர்வு பற்றிப் பேசுவதெல்லாம் ஓட்டுப் பொறுக்கவும், பிழைப்பு வாதத்துக்கும்தான்!

இந்திய ஒருமைப்பாடு, ஐக்கியமே தமது கொள்கை எனப் பலமுறை பிரகடனப்படுத்தியுள்ள கருணாநிதி, போராடும் பிற தேசிய இனங்களை ஒடுக்குவதற்கு ஆயுதப் போலீசு அனுப்புவது உட்பட பல வகையிலும் துணை நிற்கிறார். தமிழ்த் தாய்மொழி கோருவோரை மொழிவெறியர்கள் என்றும், ஆங்கிலப் பாடமொழிக் கல்விக்கு வக்காலத்து வாங்கி அமுலாக்கியும் வருகி

(11-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# அருவெறுப்பான சுயவிளம்பரம்

"இதோ! சென்னை மாநகரம் வழக்கம்போல் விழாக்கோலம் பூணத்தொடங்கிவிட்டது! ஆம்! நம் குடும்ப விழா, குதூகலத் திருவிழா! நம் குலத்தலைவருக்கு 67-வயது பிறந்தநாள் விழா. ஜீன் 1,2,3 ஆகிய மூன்று நாட்களும் அறிவு மணம் கமழும் அற்புத திருவிழா" - கருணாநிதியின் பிறந்தநாளை இந்த ஆண்டு அவருடைய கொம்பூதிகள் இப்படித்தான் பிரச்சாரம் செய்து ஆரம்பித்து வைத்தார்கள்.

பொது வாழ்வில் பொன் விழா தாண்டிய கருணாநிதி இந்த 67 வயதில்தான் உடன் பிறப்புகளுக்கு ஒரு உபதேசம் செய்தார். "எந்த ஒரு ஊரிலும் யாரும் அரசின் செல்வாக்கைப் பயன் படுத்தியோ, அதிகாரத்தை பயன்படுத்தியோ தொழில் அதிபர்கள், வியாபாரிகள் போன்றவர்களிடம் சென்றோ என் பிறந்தநாள் விழாவிற்கு கென்று நிதி வசூலிக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

தானைத் தலைவரின் இந்த தன்னடக்கத்தின் உள்நோக்கத்தை கண்டு அவரது கொம்பூதிகள் புல்லரித்து போனார்கள். இதையே



இரண்டாவது மனைவி தயாளுவுடன் மூன்றாவது முறையாக பிறந்த நாள் விழா கொண்டாடும் கருணாநிதி! புது சரித்திரம்!

பெரிய விளம்பரமாக்கி கருணாநிதிக்கு புகழ் பாடவும் முதலாளிகளுக்கு தகவல் சொல்லவும் பயன் படுத்திக்கொண்டார்கள் உட்கார்ந்த இடத்திலேயே ரூபாய் 20 லட்சத்தை கருணாநிதியின் பிறந்தநாள் நிதியாக சேர்த்தார்கள். இதில் ரூபாய் 7 லட்சம் தான் 'சாதாரண' தொண்டர்கள் கொடுத்தார்கள் மீதி ரூபாய் 13 லட்சத்தை முதலாளிகள், வியாபாரிகள் மனமுவந்து அளித்தார்கள். இது கருணாநிதியே சொன்ன கணக்கு!

கங்கைகொண்டான் கடாரம் வென்றான் போன்ற 'தீர' தமிழ் மன்னர்கள் பெரும் படையெடுத்து சென்று தான் பொன்னும் பொருளும் இன்ன பிறவும் கொண்டு வந்தார்கள். திருவாரூர் கருணாநிதி தனது செங்கோலின் மகிமையால் சகலத்தையும் தனது காலடிக்கு தேடிவர செய்தார்! தங்ககாசு; பணத்தால் செய்யப்பட்ட குதிரைப் பூட்டிய தேர், அம்பும் பணம், வில்லும்பணம், குடையும் பணம், ஆறடி மாலையும் பணம், போர்த்திக்கொள்ளும் சால்வையும் பணம் என்று பணமழையில் நனைந்தார்.

தங்க மாலை, சந்தன மாலை, பொன்னாடை, மலர்கீரிடம் என்று கருணாநிதிக்கு அலங்காரம் செய்தனர்; மங்கள வாத்தியங்கள் முழங்க வாணவெடிகள் வெடிக்க, சென்னை மயிலாப்பூர் கோயில் யானை மாலையிட ஒளிவெள்ளம் நடுவில் அலங்கார மேடையில் தோன்றிய 'கலைஞரை' உணர்ச்சிமயமாக வழிபட்டனர்.

கருணாநிதிக்கு அருகில் சின்ன கருணாநிதி போல வீற்றிருந்த பெரிய உண்டியலில் ஆயிரக்கணக்கில் காணிக்கையும் போட்டுவிட்டு சென்றனர். சுயவிளம்பரம் என்றால் அவ்வளவு அருவெறுப்பான சுயவிளம்பரம்! முகஸ்துதி என்றால் கீழ்த்தரமான முகஸ்துதி! பிணத்தை கொஞ்சுவது போல! உணர்வுள்ள மனிதன் எவனும் வெறுப்பையே உமிழ்வான்!

ஏழையின் சிரிப்பில் இறைவனை கண்ட கருணாநிதி 6 அடி உயர கேக்கை வெட்டி தன் பிறந்தநாள் விழாவைக் கண்டார். 2ந் தேதி இரவு 12 மணிக்கு கலைவாணர் அரங்கில் அண்ணா அறிவாலயம் போன்று அமைக்கப்பட்டிருந்த 6 அடி உயர கேக்கை வெட்டினார். அந்த நள்ளிரவு பிறந்தநாள் விழாவில் மத்திய நிதி அமைச்சர் மது தண்டவதே பொன்னாடை போர்த்தினார். மந்திரி பிரதானிகள், நெருங்கிய நண்பர்கள் வாழ்த்த 3 நாள் விழா கொண்டாட்டத்தின் முதல் தவனை முடிந்தது.

திரும்பவும் மறுநாள் 3ந் தேதி காலை 5 மணிக்கு சென்னை ஆலிவர் சாலையில் கருணாநிதியின் 3வது மனைவி ராஜாத்தி கேக் ஊட்ட இரண்டாவது கட்டத்தைத் தாண்டினார். சிவகாசி தொழிலதிபர் பேரனும் கருணாநிதியின் புது மருமகனுமான அதிபன் போஸ் குடும்பத்தினர் அங்கு கௌரவித்தனர். மந்திரி பிரதானிகள் 2வது முறையாக ராஜாத்தி வீட்டில் கருணாநிதிக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தனர். அங்கு சென்ற தொண்டர்களை கலைவாணர் அரங்கத்துக்கு செல்லும்படி போலீசார் விரட்டி விட்டனர் அங்கிருந்து காரில் புறப்பட்டு கோபாலபுரம் சென்றார் கருணாநிதி அங்கு இரண்டாவது மனைவி தயாளுவுடன் கேக் வெட்டி மூன்றாவது முறையாக பிறந்தநாள் விழா கொண்டாடினார். அங்கும் மந்திரி பிரதானிகள் சொரணையில்லாமல் கருணாநிதிக்கு பிறந்தநாள் வாழ்த்தை மூன்றாவது முறையாக தெரிவித்தனர். 7.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு கலைவாணர் அரங்கம் சென்றார். கடைசியாக அங்குதான் தொண்டர்களுக்கு தரிசனம் தந்தார்.



மூன்றாவது மனைவி ராஜாத்தியுடன் இரண்டாவது முறையாக பிறந்தநாள் விழா கொண்டாடும் கருணாநிதி! சரித்திர நாயகனின் சாதனை!



படிப்பகம்

www.padippakam.com

ஏழைத் தொண்டர்கள் சோறு தண்ணி இல்லாமல் நீண்ட வரிசையில் காத்திருந்து கருணாநிதிக்கு வாழ்த்து தெரிவித்தனர். காரில் வந்திறங்கிய முதலாளிகள், வியாபாரிகள், அரசுக் காண்ட்ராக்ட்காரர்கள், சர்வ கட்சித் தலைவர்கள், தொழிற்சங்கத் தரகர்கள், அரசு உயர் அதிகாரிகள் நேரடியாக மேடைக்கு சென்று பரிசுக் கொடுத்து கருணாநிதியிடம் சிரித்து சிரித்து பேசிவிட்டு சென்றனர்.

குதிரை பந்தய அதிபர் எம்.எம்.ராமசாமி தங்க கடற்கரை நடத்தும் ஐந்து நட்சத்திர 'விபச்சார விடுதி' அதிபர் வி.ஜி.பி. சந்தோஷம் மற்றும் சினிமா கழிசடைகள் என்று பல பிரமுகர்களும் ஒரு சேர தானத்தலைவன் கருணாநிதியை மாலை அணிவித்து வாழ்த்தினார்கள்.

அதே நேரத்தில் மறுபுறம் கலைஞர் ஒரு காவியம் என்ற பெயரில் கருணாநிதி புகழ்பாடும் ஓவியக் காட்சியும். ''கலைஞர்கள் பார்வையில் கலைஞர்'' என்ற தலைப்பில் சினிமா கும்பலும் கருணாநிதியின் புகழ்பரப்பின. ''14 வயதில் திருவாரூர் வீதியில் 'ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள், நீ தேடிவந்த கோழையுள்ள நாடு இதல்லவே' என வீரமுழக்கமிட்ட சிறுவன் பல்வேறு பள்ளங்கள், படுகுழிகளைத்தாண்டி படிப்படியாக உயர்ந்து இன்று தமிழ் இனத்தின் தன்னேரில்லா தலைவராக, முதல்வர் திகழ்கிறார்'' என்று சினிமா பாணியில் புகைப்படக் காட்சி. அதை அசாம் முதல்வர் மகந்தா திறந்து வைத்தார்!

இன்னும் அனனதானம், ரத்ததானம், என்று தானதர்மங்கள் ஒருபக்கம் நடந்தது. மறுபக்கம் கருணாநிதியிடம் மேலோங்கி இருக்கும் திறமை எது என்று வழக்காடுமன்றம், பட்டிமன்றம், கவியரங்கம், கருத்தரங்கம் நடத்தி அடிமைகள் அறிவு மழை பொழிந்தனர்! கடைசியில் பிரமாண்டமான பொதுக் கூட்டத்தில், கருணாநிதியின் பிறந்தநாள் விழாவை 5வது முறையாக கோலாகலமாக கொண்டாடி அனைவரும் மகிழ்ச்சி கடலில் மிதந்தனர்.

''அன்புமிக்க என்.டி.ஆர்., பேராற்றல் மிக்க உபேந்திரா, திராவிட கட்சியின் பொதுச் செயலாளர் மானமிகு வீரமணி, தோழமை கட்சியான 'மார்க்சிஸ்ட்', 'கம்யூனிஸ்ட்' கட்சிகளின் தலைவர்களான டபிள்யூ.ஆர்.வரதராஜன், ப.மாணிக்கம் போன்றோரும் இன்னும் பலரும் கருணாநிதியின் புகழ்பாடினர்.

''தமிழ் மக்களுக்காக, தமிழ் இனத்துக்காக நீங்கள் அனுபவித்த வேதனைகள் ஏராளம்(?)... தமிழர்களின் எதிர்காலம் உங்கள் கையில்தான் இருக்கிறது'' என்றார், பா.மாணிக்கம். 'கலைஞரை விட்டால் தமிழருக்கு அரசியலில் இனமான ஏற்றத்திற்கு இன்று யார்?'' என்றார், மானமிகு வீரமணி (அவர் ஒருவர் இருப்பதை அவரே மறந்துவிட்டார்!) 'கருணாநிதி, தேசீய முன்னணியின் மத்திய ஆட்சியை பாதுகாக்க வேண்டும். அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்'' என்றார், வரதராஜன்! 'உங்கள் சேவை தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல இந்தியாவுக்கே தேவை' என்பதை தான் அப்படி 'முற்போக்காக' சொன்னார், வரதராஜன்! 'கலைஞர் கவிதையில் கண்டெடுத்த முத்துக்கள்', 'கலைஞர் கனிவுரைகள்' என்ற கருணாநிதி புகழ்பாடும் இரண்டு புத்தங்களை கருணாநிதியே வெளியிட்டார். இதில் ஒரு புத்தகத்தை பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்து இருக்கிறது, பாண்டிச்சேரி தி.மு.க. அரசாங்கம்! கருணாநிதியின் பிறந்தநாள் விழாவை பிரான்சிலும் கொண்டாடப் போகிறது. அவ்வரசு!

இரைச்சலும் புழுதியும் அடங்கியது போல, ஒருவாறு கருணாநிதி பிறந்தநாள் விழா பெரும் அமர்க்களத்திற்கு பிறகு முடிவடைந்தது.

இவர்களை இந்த நிலைக்கு உயர்த்திய தமிழர்களின் வாழ்நிலையோ சகிக்க முடியாத அன்பு துயரத்தில் இருக்கிறது. எங்கு திரும்பினாலும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் அவர்களை பெருஞ்சுமையாய் அழுத்துகின்றன. 8 முறை சட்டமன்றத்திற்கும் 2-வது முறையாக முதல்வர் பதவிக்கும் வந்திருக்கும் கருணாநிதி, உழைப்பாளி தமிழர்களுக்கு சாதித்தது என்ன? ஒன்றுமில்லை! வாழ்க்கை முழுவதும் அரைப்பட்டினியும், அடிமையுமாக இருந்து அவர்கள் சாவதுதான் மிச்சம்! ஏழைப் பங்காளன் கருணாநிதி ஆட்சியில், தொழிலாளர்களை ஒடுக்கிய எத்தனை முதலாளிகள் தண்டிக்கப் பட்டார்கள்? [illegible] விவசாயிகளுக்கு அவமானம் இழைத்த எத்தனை நிலப்பிரபுக்கள் சிறையில் அடைக்கப் பட்டார்கள்?

மாறாக போராடிய தொழிலாளர்களையும், விவசாயிகளையும், இன்னபிற உழைக்கும் மக்களையும் போலீசை ஏவி படுகொலைதானே செய்தது? இந்த லட்சணத்தில் இவர் யாருக்கு தானைத் தலைவர்? அதிகப் பட்சம், அவரைச் சுற்றியிருக்கும் ஒரு எச்சில் கூட்டத்திற்கும், அவருடைய கட்சிக்கும் வேண்டுமானால் தானைத் தலைவராகவோ, பூனைத் தலைவராகவோ இருக்கலாம்; ஆனால் இவருடைய கொம்பூதிகள், 5 கோடி தமிழருக்கும் தலைவர், தமிழினத்தையே வாழ வைத்தவர் தலைவர் என்றல்லவா ஊளையிடுகிறார்கள்! கடைகோடி தமிழனுக்கு ஒரு மண்ணும் செய்யாமல், மாறாக கவர்ச்சி சவடால், ஏமாற்று, பித்தலாட்டம், பிரமை, விளம்பரம், முகஸ்துதி மூலம் அவர்களின் தலவராக முடிசூட்டிக் கொண்டு, ஒட்டுண்ணியாக வாழ்பவர்தான் இந்த கருணாநிதி! உழைக்கும் தமிழருக்கு தலைவனாக இருக்கும் எந்த தகுதியும் இல்லை இந்த கருணாநிதிக்கு! இவருடைய பிறந்தநாள் விழாவை உழைக்கும் மக்கள் கௌரவிக்க இவருக்கு எந்த ஒரு யோக்கியதையும் இல்லை.

● குணசேகரன்



# அரியலூர் சிமெண்ட் ஆலை நச்சுக்கழிவை எதிர்த்து இயக்கம்

அரியலூரில் இருக்கும் அரசு சிமெண்ட் ஆலை சுற்று வட்டார மக்களை அன்றாடம் சிறிதுசிறிதாக கொன்று வருகிறது. கடந்த பத்து வருடமாக செயல்பட்டு வரும் இந்த ஆலை, மாசு நீக்கப்படாத புகைக் கழிவை கக்கி சுற்றுப்புற சூழலைக் கடுமையாகப் பாதித்து வருகிறது. இதனால் நுரையீரல், இருதயம் சம்பந்தமான பல நோய்களுக்கு ஆளாகி பகுதிவாழ் மக்கள் நலிவடைகின்றனர்.

மேலும், புகைக் கழிவிலுள்ள 'கால்சியம்' குடிநீரில் படிவதால் சிறுநீரகம் மற்றும் குடல் சம்பந்தமான நோய்களால் பகுதிமக்கள் அவதிப்படுவது சர்வ சாதாரணமாகி விட்டது. தண்ணீர் மாசுபடுத்தப்படுவதாலும், சிமெண்டும், புகை கழிவும் நிலங்களில் படிவதாலும் சுற்றுவட்டார வயல்கள் கொஞ்சம் கொஞ்சமாக தங்கள் வளத்தை இழந்து கொண்டிருக்கின்றன; உணவுப் பொருட்களும் நஞ்சாகின்றன.

அரியலூர் ஆலையில் ஒன்றரை கோடி ரூபாய் மதிப்புள்ள தூசு (மாசு) கட்டுப்பாட்டு இயந்திரம் வாங்கப்பட்டும் இன்று அது செயல்படாததால் 15% சிமெண்ட் மற்றும் ரசாயனப் பொருட்கள் புகையுடன் வெளிவருகின்றன. பழுதாகியுள்ள இயந்திரத்தை சரிசெய்ய நிதி இல்லை என நாடகமாடி வருகிறது நிர்வாகம்.

ஆனால், மறுபுறம் சுண்ணாம்புக் கல் ஹாப்பருக்கு உஷ்ணக் காற்று கொண்டு வரும் திட்டம், சாம்பலை ஃபீடிங் செய்வதற்கு திட்டம், நிலக்கரியையும், சாம்பலையும் எடுத்துப் போட 'கிரெய்ன் மெஷின்' வாங்கும் திட்டம் என பல திட்டங்கள் தீட்டி (இத்திட்டங்களில் சில நடைமுறைபடுத்தப் படவே இல்லை; நடைமுறைக்கு வந்தவை செயல்படாத நிலையில் உள்ளன) கோடிக்கணக்கான ரூபாய்களை அதிகாரிகளும், காண்டிராக்டர்களும், ஒட்டுக்கட்சி பிரமுகர்களும் கொள்ளையடித்து இருக்கிறார்கள்; கொள்ளையடித்து வருகிறார்கள்.

இவற்றை அம்பலப்படுத்தி புதிய ஜனநாயக வாகர் வட்டம் 3 மாத காலமாக பிரச்சாரம் செய்து வருகின்றது. இதன் தொடர்ச்சியாக கடந்த 29-5-90 அன்று தெருமுனைப் பிரச்சாரமும் மாலை பொதுக் கூட்டமும் நடத்தப்பட்டது. தோழர் அலெக்சாண்டர் தலைமை தாங்க தோழர்கள் காளியப்பன் (ம.க.இ.க. தஞ்சை), ஜெயசீலன் (வி.வி.மு. திருவையாறு), சிவஜோதி (வி.வி.மு. புள்ளம்பாடி) ஆகியோர் உரையாற்ற, திருவையாறு வி.வி.மு. தோழர்கள் புரட்சிகர கலை நிகழ்ச்சி நடத்த, பொதுக் கூட்டம் சிறப்பாக நடந்தது. இவ்வியக்கம் மக்கள் மத்தியில் புரட்சிகர அமைப்பின் மீது நம்பிக்கையை உருவாக்கியிருக்கிறது.

பு.ஜ. வாசகர் வட்டம், அரியலூர.

படிப்பகம்

www.padippakam.com

## வி.பி.சிங் அரசு அனைத்துப் பிரச்சனைகளிலும் தோல்வி

# ஒப்பனை கலைந்தது!

**காங்கிரசுக்கு தேசிய மாற்றாக மார்தட்டிக் கொண்டு ஆட்சிக்கு வந்தது தேசிய முன்னணி அரசு. அது பதவி ஏற்ற போது எதிர்கொண்ட எரியும் பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை; மாறாக, தீவிரமாகி விட்டது. ராஜீவ் தீர்க்க முற்பட்டு தோல்வியடைந்த அதே கொள்கையைத்தான் அது தொடர்ந்து பின்பற்றுகிறது. பஞ்சாப் - காஷ்மீர் பிரச்சினைகள், ராமஜென்ம பூமி விவகாரம், விலையேற்றம் முதலான சில விஷயங்களை எடுத்துக் கொண்டு பார்க்கும்போது ராஜீவின் கொள்கைக்கும் வி.பி.சிங்கின் கொள்கைக்கும் அடிப்படையில் வேறுபாடு ஏதுமில்லை. ஆட்சிக்கு வந்த ஆறே மாதங்களில் இதை நிரூபித்துக் காட்டிவிட்டது, தேசிய முன்னணி அரசு.**

**பஞ்சாப் பிரச்சினை: தீரவில்லை; தீவிரமாகிவிட்டது!**

கடந்த ஐந்தாண்டுகளுக்கும் மேலாக பயங்கரவாதப் படுகொலைகளால் ரணகளமாகி நிற்கிறது பஞ்சாப். பாசிச இந்திரா - ஜெயில்சிங் - ராஜீவ் கும்பலால் தூண்டிவிடப்பட்ட சீக்கிய மதவெறி, பெரும் பூதமாகக் கிளம்பி அவர்களுக்கு எதிராகவே திரும்பியது.

பஞ்சாப் பிரச்சினைக்கான காரணங்களை ஆராய்ந்து தீர்ப்பதற்குப் பதில் அரசு பயங்கரவாதத்தை ஏவி அடக்குவது, ரகசிய பேரங்கள் மூலம் ஒரு துரோக ஒப்பந்தத்தைத் திணித்து பஞ்சாபை அரசியல் நீரோட்டத்திற்கு கொண்டு வருவது என்பதே ராஜீவின் கொள்கை - அணுகுமுறையாக இருந்தது. தேர்தல் வந்தது. எதிர்க்கட்சியினர் பஞ்சாப் பிரச்சினையைத் தீர்க்க மாற்று அணுகுமுறையும் திட்டங்களையும் கொண்டுள்ளதாக அறிவித்தனர். தேசிய முன்னணி வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தது.

பஞ்சாப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே எமது முதற்பணி என்று கூறிய வி.பி.சிங், தமது மந்திரி சகாக்களுடன் சேர்ந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் ஏதுமின்றி பொற்கோயிலுக்குச் சென்று பிரார்த்தனை நடத்தினார். வி.பி.சிங்கின் இந்நடவடிக்கைகளை, ரணத்திற்கு மருந்தாற்றும் செயலாக பத்திரிக்கைகள் பெருமைப்படுத்தின. பயங்கரவாதத்துக்குப் பல உயிர்களைப் பலி கொடுத்த பஞ்சாபியர்கள் புதிய நம்பிக்கை பெற்றிருப்பதாகத் தோன்றியது.

பஞ்சாப் பிரச்சினையை விவாதிக்க சர்வகட்சிக் கூட்டம், லூதியானாவில் சர்வ கட்சியினரின் நல்லெண்ணப் பேரணி, இந்திரா படுகொலையை அடுத்து நடந்த கலவரத்தில் பாதிக்கப்பட்ட சீக்கிய மக்களுக்கு நிவாரணமளிப்பது, பொற்கோயில் மீது நடத்தப்பட்ட நீல நட்சத்திர தாக்குதல் நடவடிக்கையால் ஆத்திரமடைந்து ராணுவத்தை விட்டு விலகிய சீக்கிய சிப்பாய்களுக்கு அரசுத் துறை நிறுவனங்களில் வேலை வாய்ப்பளிப்பது, சாதாரண குற்றங்களுக்காக சிறையிடப்பட்ட சீக்கியர்களை விடுதலை செய்வது முதலான சில நடவடிக்கைகள் - அறிவிப்புகளைச் செய்து சீக்கியர்களுடன் சுமுகமான உறவை ஏற்படுத்திக் கொள்ள வி.பி.சிங் அரசு முயற்சித்தது. அதன்படியே டெல்லிக்கும் தமிழ்நாட்டுக்கும் சீக்கிய இனத்தவரையே கவர்னர்களாக நியமித்தது.



பயங்கரவாதத்தால் ரணகளமாகிறது பஞ்சாப். உள்ளே: மானுடன் 'நல்லெண்ணத் தூதர்' வி.பி.சிங்.

மானுடன் பேச்சுவார்த்தை நடத்திய வி.பி.சிங் அரசு, மத்திய மந்திரி பதவி தருவதாக ஆசைகாட்டி புதிய ஒப்பந்தம் போட முயற்சித்தது. ஆனால் மான் இதை ஏற்க மறுத்து, பஞ்சாபில் பயங்கரவாத அரசு எந்திரம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்த வேண்டும்; அனந்தபூர் சாகிப் தீர்மானத்தின்படி மாநில சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். மான் பிரிவின் பின்புலமாக உள்ள தீவிரவாதிகள் 'காலிஸ்தான்' தனிநாடு தான் தமது லட்சியம் என்று மீண்டும் பிரகடனப் படுத்தினர்.

ராஜீவ் கொண்டு வந்த, எந்த நேரத்திலும் அவசரநிலை பிறப்பிக்கும் 59-வது அரசியல் சட்டத்திருத்தச் சட்டத்தைப் பதவிக்கு வந்ததும் ரத்து செய்வதில் முனைப்பு காட்டிய வி.பி.சிங், பஞ்சாபுக்கு மட்டும் ஜனநாயக உரிமையை மறுத்தார்.

பஞ்சாபில் குடியரசுத் தலைவர் ஆட்சி முடிவுக்கு வந்தபோது, பஞ்சாபுக்கு தேர்தல் அறிவிக்கப்படும் என்றே அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால் "பஞ்சாபில் மதவெறி பயங்கரவாதம் மட்டுப்படவில்லை; தேர்தல் நடத்துவதற்கான பொருத்தமான சூழ்நிலை இல்லை" என்று மீண்டும் குடியரசுத் தலைவர் ஆட்சியை நீட்டித்தது, வி.பி.சிங் அரசு.

மீண்டும் அரசு பயங்கரவாதக் கொலைகளும், சீக்கிய தீவிரவாதிகளின் எதிர்த்தாக்குதலும் பஞ்சாபில் தீவிரமாகிவிட்டன. ராஜீவ் ஆட்சியைப் போலவே இப்போதும் போலீசு இயக்குனர்தான் பஞ்சாபுக்கான கொள்கையை வகுக்கிறார். பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தான் பயிற்சியும் ஆயுத உதவியும் அளிப்பதாகக் கூறி ராஜீவ் பாணியிலேயே சாடுகிறார், வி.பி.சிங். பஞ்சாபில் மனித உரிமைகள் மீறப்படுவதைப் பற்றி சர்வதேச மனித உரிமை நிறுவனம் அம்பலப்படுத்திய போதிலும் அதை கிண்டல் செய்து அரசு பயங்கரவாதத்தை நியாயப்படுத்துகிறார்.

இப்போது அகாலிதளத்தின் இதர பிரிவுகளின் தலைவர்களான பாதல், டோரா ஆகியோருடன் பேரம் பேசி மீண்டும் ஒரு ஒப்பந்தம் போட வி.பி.சிங் அரசு முயற்சித்து வருகிறது. அரசு பயங்கரவாதத்துக்கும் மதவெறி பயங்கரவாதத்துக்கும் இடையில் சிக்கி முன்னைவிட ஐந்து மடங்கு அதிகமான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

பஞ்சாப் பிரச்சினையைத் தீர்க்கப் போவதாக வி.பி. அரசு எடுத்த சில ஆரம்ப நடவடிக்கைகள் வீண் பிரமையாகிப் போனது. அரசு பயங்கரவாதத்தை ஏவுவது, மீண்டும் ரகசிய பேரங்கள் மூலம் ஒரு துரோக ஒப்பந்தத்தைத் திணிப்பது எனும் ராஜீவின் அதே கொள்கையைத்தான் வி.பி. சிங் அரசும் மேற்கொள்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

## சொர்க்கபுரி சுடுகாடாகிறது!

கடந்த ஈராண்டுகளாக காஷ்மீர் கொந்தளிப்பாக உள்ளது. சுயநிர்ணய உரிமைக்கான மக்கள் போராட்டமும், போராளிகளின் திடீர் தாக்குதலும் அதற்கெதிராக போலீசு ராணுவத்தின் அடக்குமுறையும் தீவிரமடைந்து காஷ்மீர் மாநிலமே உள்நாட்டுப் போர் நிலைமையில் உள்ளது.

காஷ்மீரில் சுயநிர்ணய உரிமைப் போர் தீவிரமடையத் தொடங்கியதும் ராஜீவும் அவரது கூட்டணி முதல்வர் பரூக் அப்துல்லாவும் போலீசையும் ராணுவத்தையும் குவித்து அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். பிரிவினை கோரும் போராளிகளுக்கு பாகிஸ்தான் பயிற்சியும் ஆயுத உதவியும் அளித்து நாட்டைத் துண்டாட சதிசெய்வதாக ராஜீவ் கூச்சல் போட்டார்.

தேர்தல் நெருங்கியது. காஷ்மீரில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அரசு பயங்கரவாதத்தையும், பத்திரிக்கை தடைச் சட்டத்தையும், பரூக் அப்துல்லாவின் ஊழல் கொள்ளையையும் எதிர் கட்சியினர் கடுமையாகச் சாடினர். தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்தது. அடுத்த சில நாட்களிலேயே காஷ்மீர் விடுதலை முன்னணி போராளிகளால் மத்திய மந்திரி முப்தி முகமது சையதுவின் மகள் கடத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார்.

ஏற்கனவே தனிமைப்பட்டுப் போயிருந்த பரூக் அப்துல்லா கட்சியினர் பயங்கரவாதிகளின் தாக்குதலைக் கண்டு பீதியடைந்து கட்சியை விட்டே விலகினர். மாநிலத்தில் நிர்வாகம் நிலைகுலைந்து போனது. பாரதீய ஜனதாவின் நிர்பந்தம் - ஆசியுடன் அரசு பயங்கரவாத இரும்பு மனிதராக வர்ணிக்கப்படும் ஜக்மோகன் கவர்னராக நியமிக்கப்பட்டார். இதைக் காரணங்காட்டி பரூக் அப்துல்லா பதவி விலகினார்.

காஷ்மீரில் சுயநிர்ணய உரிமைப் போர் முன்னேறியது. ராணுவத்தையும் துணை ராணுவப் படைகளையும் குவித்து இரும்பு மனிதர் ஜக்மோகன் தலைமையில் அரசு பயங்கரவாதத்தை தீவிரமாக்கியது. தே.மு. அரசு. அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்யும் நிராயுதபாணியான பெருந்திரளான மக்கள் மீது காட்டு மிராண்டித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்துவதையே ராணுவம் வாடிக்கையாக்கிக் கொண்டது. தேடுதல் வேட்டை என்ற பெயரில் அப்பாவி இளைஞர்களைச் சிறையிலடைத்து சித்திரவதை செய்தனர். பெண்கள் மீது பாலியல் வன்முறையை ஏவியும் வீடு புகுந்து சூறையாடியும் ராணுவம் வெறியாட்டம் போட்டது.

'தேச நலன்' கருதி பத்திரிக்கைகளுக்கு வாய்ப்பூட்டு போட்டனர். இந்திய மற்றும் வெளிநாட்டுப் பத்திரிக்கையாளர்களை ஸ்ரீநகரிலுள்ள ஒரு ஓட்டலில் ஜனவரி 22 முதல் மூன்று நாட்களுக்கு ராணுவம் அடைத்து வைத்தது; அவர்களின் செய்திக் குறிப்புகளையும் புகைப்படச் சுருளையும் பிடுங்கி எறிந்தது. வெளிநாட்டு பத்திரிக்கையாளர்களை காஷ்மீரை விட்டு வெளியேறுமாறு உத்திரவு போடப்பட்டது.



சவ ஊர்வலத்தில் கதறி அழும் காஷ்மீர் மக்கள். உள்ளே: சுட்டுக் கொல்லப்பட்ட மௌல்வி பரூக்.

காஷ்மீர் தீவிரவாதிகளுக்குப் பயிற்சியும் ஆயுத உதவியும் அளித்து நாட்டைத் துண்டாட சதி செய்வதாக பாகிஸ்தான் மீது பழிசுமத்தி போர் வெறியூட்டப்பட்டது. எல்லையில் பதற்ற நிலை உள்ளதாகக் கூறி பட்ஜெட்டில் ராணுவச் செலவுக்காக வி.பி.சிங் அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்தது.

காஷ்மீர் இந்தியாவுக்குச் சொந்தமானது. சிம்லா ஒப்பந்தப்படி இந்தியாவும் பாகிஸ்தானும் பிரச்சினையை பேசித்தீர்க்க வேண்டும். இதில் பிரிவினைக்கே இடமில்லை. மூன்றாவது நாடு இதில் தலையிட உரிமையில்லை என்று வாதிட்டது தே.மு. அரசு. இந்திய அரசின் கபட நாடகம் உலகம் முழுவதும் அம்பலப்பட்டது. இதைச் சாதகமாக்கிக் கொண்டு பெனாசிர் அரசு அரபு நாடுகளிடமும், மேற்கத்திய ஏகாதிபத்தியங்களிடமும் ஆதரவு திரட்டுவதில் வெற்றி பெற்றது.

காஷ்மீரில் வறுமையும் வேலையின்மையும் நிலவுவதால் விரக்தியடைந்த இளைஞர்கள் பயங்கரவாதப் பாதைக்குத் தள்ளப்படுகிறார்கள்; எனவே பொருளாதாரத் திட்டங்களைக் கொண்டு வந்து வேலையின்மையை ஒழிப்பதும், இளைஞர்களை பயங்கரவாதப் பிடியிலிருந்து மீட்பதுமே எமது முதற்பணி என்று தே.மு. அரசு அறிவித்தது. பயங்கரவாதத்தை ஒழிப்பதும், மிதவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களை அரசியல் நீரோட்டத்திற்கு கொண்டு வந்து காஷ்மீரில் தேர்தல் நடத்துவதையும் தனது நோக்கமாகக் கொண்டு தே.மு. அரசு செயல்பட்டது. ஒருபுறம் ஜக்மோகன் அரசு பயங்கரவாதத்தை ஏவிய அதே நேரத்தில், காஷ்மீர் விவகாரத்துக்கான தனி அமைச்சராக நியமிக்கப்பட்ட ஜார்ஜ் பெர்ணாண்டஸ் சமரச பேச்சு வார்த்தையில் இறங்க முயற்சித்தார். இருவருக்குமிடையே நாய் சண்டை நிலவிய போதிலும் நடைமுறையில் ஜக்மோனின் காட்டாட்சியே நிலவியது.

இந்திய அரசுடன் சமரசப் பேச்சுவார்த்தைக்கு இணங்கிய காஷ்மீரின் முஸ்லிம் மத குருவான மௌல்வி பரூக் யாரோ சிலரால் கொல்லப்பட்டார். அவரது சவ ஊர்வலத்தில் பங்கேற்ற லட்சக் கணக்கான மக்கள் மீது இந்திய ராணுவம் மிருகத் தனமாகச் சுட்டது.

சவ ஊர்வலத்தில் பாக். ஆதரவு தீவிரவாதிகள் புகுந்து நாசவேலை செய்யும் நோக்குடன் ராணுவத்தின் மீது சுட்டதால் தற்காப்புக்காக துப்பாக்கிச்சூடு நடந்தது என்று ஆட்சியாளர்கள் இக்காட்டு மிராண்டித்தனத்தை நியாயப்படுத்தினர்.

அதைத் தொடர்ந்து ஜக்மோகனைப் பதவியிலிருந்து விலக்கும்படி போலிக் கம்யூனிஸ்டுகள் நிர்பந்தித்தனர். ஜக்மோகன் நீக்கப்பட்டு உளவுப்படை "ரா"வின் முன்னாள் இயக்குநரான சாக்சேனா நியமிக்கப்பட்டார். பாரதீய ஜனதாவின் நிர்பந்தம் காரணமாக எம்.பி. பதவியளித்து ஜக்மோகன் கௌரவிக்கப்பட்டார். போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த காஷ்மீர் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அரசியல் தலைவர்கள் யாருமில்லாத நிலையில் விஷ சுழற்சி போல மீண்டும் அரசு பயங்கரவாத அடக்குமுறை தொடர்கிறது.

கடைசியில் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க வி.பி.சிங் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் படுதோல்வியில் முடிந்துள்ளது. அரசு பயங்கரவாதத்தைத் தீவிரமாக்குவது, மதவெறி - தேசியவெறியூட்டி பாக். மீது போர்தொடுப்பது, துரோகிகளுடன் பேரம் பேசி பொம்மை அரசை நிறுவுவது என்கிற ராஜீவின் கொள்கையைத்தான் சாராம்சத்தில் வி.பி.சிங் அரசும் மேற்கொண்டு வருகிறது.


### மீண்டும் விலையேற்றம்

கடந்த ஐந்தாண்டுகளில் அத்தியாவசியப் பொருட்களின் விலை 40% க்கு மேல் உயர்ந்து விட்டது. நாட்டையே திவாலாக்கும் அளவுக்கு இரண்டரை லட்சம் கோடி ரூபாய்க்கு உள்நாட்டு - வெளிநாட்டுக் கடன்கள் பெருஞ்சுமையாக அழுத்துகின்றன. இன்றைய நிலையில் ரூபாயின் மதிப்பு வெறும் 12 பைசாதான்! பணவீக்கம் யானைக் காலாகப் பெருத்துவிட்டது. இப்பொருளாதாரப் புற்று நோய்க்கு இந்திரா - ராஜீவின் பரம்பரை ஆட்சியும் அவர்களது மக்கள் விரோதக் கொள்கையுமே காரணம்.

இப்பொருளாதார நெருக்கடியில் சிக்கி ராஜீவ் ஆட்சியின் மீது ஆத்திரமடைந்த மக்

படிப்பகம்

www.padippakam.com




**ராஜீவ் ஆட்சியில் அம்பாணிகள் கொழுத்தனர். இப்போது ராஜா ஆட்சியில் வாடியாக்கள் ஆதாயமடைகின்றனர்.**

களிடம், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விலைவாசியைக் குறைப்போம் என்று தேசிய முன்னணியினர் வாக்களித்தனர். கருப்புப் பணத்தை ஒழிப்போம், அரசின் அனாவசிய ஊதாரிச் செலவுகளை ரத்து செய்வோம், ஆக்க பூர்வமான திட்டமிட்ட பொருளாதாரத்தை மேற்கொண்டு பற்றாக்குறையையும் அன்னியக் கடன் சுமையையும் நீக்குவோம் என்று சூளுரைத்தனர்.

தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்தது. ஈராண்டுகளுக்கு முன்பு ரயில்வே, தபால் - தந்தி கட்டணங்களை உயர்த்தியது போதாது என்று மேலும் 33%க்கு கட்டண உயர்வு, சென்ற ஆண்டைவிட மேலும் கூடுதலாக 1959 கோடி ரூபாய்க்கு வரிவிதிப்பு, கடந்த ஆண்டைவிட ரூ.2,250 கோடி கூடுதலாக, அதாவது ரூ.15,750 கோடிக்கு இராணுவச் செலவு அதிகரிப்பு என பட்ஜெட் தயாரித்து மக்கள் மீது மேலும் பொருளாதாரச் சுமைகளை ஏற்றியது வி.பி.சிங் அரசு.

கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு பருவநிலை சாதகமாக அமைந்து விளைச்சல் பெருகியும் கூட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் தொடர்ந்து உயர்ந்து கொண்டே போகின்றன. விலைவாசியைக் குறைப்பதே தமது லட்சியமென அறிவித்த தே.மு. அரசு வரும் செப்டம்பர் மாதத்திற்குள் விலைவாசிகள் குறைந்துவிடும் என்று ஆருடம் கூறுகிறது. புள்ளிவிபர சதவிகித கணக்குகாட்டி விலையேற்றம் மிக அற்பமானது என்று நாடகமாடுகிறது.

கறுப்புப் பணத்தை ஒழிப்பதே எங்கள் லட்சியம் என்று தேர்தலின் போது சூளுரைத்த புதிய ஆட்சியாளர்கள், அதற்கெதிராக ஒரு மண்ணும் செய்யவில்லை. மாறாக, கருப்புப் பணத்தை தேசிய கடன் பத்திரங்களில் முதலீடு செய்வதில் தவறில்லை என்கின்றனர். உலக வங்கியிடம் கடன் வாங்க மாட்டோம் என்று கூறிக் கொண்டே, ஏழை நாடுகளுக்கு கூடுதலாக நிதி ஒதுக்குமாறு உலக வங்கிக் கூட்டத்தில் நிதி மந்திரி கெஞ்சுகிறார்.

அதேசமயம், அரசு ஊழியருக்கு சம்பள உயர்வு, பென்ஷன் உயர்வு, விவசாயிகளுக்கு கடன் ரத்து என்று எம்.ஜி.ஆர்., என்.டி.ஆர். பாணியில் கவர்ச்சித் திட்டங்களை வாரியிறைக்கின்றனர். சுருக்கமாகச் சொன்னால், இந்திரா - ராஜீவ் காட்டிய அதே திசையில் - மக்கள் மீது வரிச்சுமை, விலையேற்றங்களைத் திணிப்பது, ராணுவச் செலவை அதிகரித்து தெற்காசிய பிராந்தியத்தில் துணை வல்லரசாக வலம் வருவது, மீண்டும் அந்நியக் கடனை அதிகரித்து நாட்டை திவாலாக்குவது என்பதற்கு மேல் புதிதாக எதையும் புதிய ஆட்சியாளர்கள் சாதிக்கவில்லை.

### தரகு முதலாளிகளுக்கு தாராள சலுகை

நூற்றுக்கு நூறு ஏற்றுமதி அடிப்படையிலான தொழில்களுக்கு சலுகை, மானியம், கடனுதவி; அன்னிய கச்சாப் பொருட்கள், உதிரி பாகங்களை இறக்குமதி செய்து கொள்ள தடைகளை நீக்கியது; ஏகபோகத் தடைச்சட்டம், அன்னியச் செலாவணி தடைச் சட்டங்களைத் தளர்த்தியது; வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் ஆபாசத் திரைப்படங்களை இந்தியாவில் இறக்குமதி செய்யவும் முதலீடு செய்யவும் அனுமதி என்று கஜானாவைக் காலி செய்து சலுகைகளை அள்ளிக் கொடுத்து, தரகு முதலாளிகள் தமது கொள்ளையைக் கூடுதலாக்க விசுவாசமாக ராஜீவ் சேவை செய்தார். அவரது அமைச்சரவையில் வி.பி.சிங் நிதிமந்திரியாக இருந்தபோது அறிவிக்கப்பட்ட கொள்கை - திட்டங்கள் தான் இவை.



**மேகம் தொகுதி: அமிர்சிங் கொலை ஜனதா தளத்தின் ஜனநாயகம்**

ராஜீவிடம் பிளவுபட்டு தேசிய முன்னணியை நிறுவி வி.பி.சிங் ஆட்சிக்கு வந்த பிறகு, விவசாயத்துக்கு முன்னுரிமை அளிப்போம், பெரு முதலாளிகளுக்கும் ஏகபோகங்களுக்கும் சாதகமாக இல்லாமல் சிறிய, நடுத்தர தொழில்களை வளர்ப்போம், வேலை அடிப்படையிலான தொழில்களுக்கு முக்கியத்துவம் அளிப்போம் என்று அவரது அரசு அறிவித்தது. விரைவிலேயே இந்த வாக்குறுதிகள் அனைத்தும் பொய்த்துப் போனது.

விவசாயத்துக்கு மொத்த பட்ஜெட்டில் 6.75% மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது. ரூ.10,000 வரையிலான விவசாயக் கடன்களை ரத்து செய்வதாகக் கூறிய தே.மு. அரசு அப்பொறுப்பை மாநில அரசுகளின் தலையில் கட்டிவிட்டது. இதிலே நிலப்பிரபுக்கள், போண்டியான விவசாயிகள் என்று தராதரமின்றி அனைவருக்கும் இச்சலுகையை அளித்து நிலப்பிரபுக்களுக்குச் சாதகமாக நடந்து கொண்டுள்ளது. மேலும் நவீனவகை பணக்கார விவசாயிகள் - நிலப்பிரபுக்களுக்குச் சாதகமாக உரத்துக்கு மானியமாக ரூ.4,000 கோடியை ஒதுக்கியுள்ளது. இவை தவிர ஏற்றுமதி செய்யப்படும் பணப்பயிர்களுக்கு சலுகைகளும் மானியங்களும் வாரி வழங்கப்பட்டுள்ளன.

இதேபோல ஏகாதிபத்தியங்கள் - தரகுப் பெரு முதலாளிகளின் முதலீடுகளுக்கு தாராள அனுமதி, ஏகபோகத் தடைகளை நீக்குவது, ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்திக்கு கூடுதல் சலுகை - வரிக்குறைப்பு, இறக்குமதிக்கான தீர்வை குறைப்பு, தொழில் நிறுவனங்களில் பங்குதாரர்களின் லாபத்துக்கு வரிவிலக்கு, சுங்கவரி ஆயத் தீர்வை குறைப்பு என்று அடுக்கடுக்கான சலுகைகளை அள்ளிக் கொட்டியுள்ளது.

ஏகபோகங்களை அனுமதிக்க மாட்டோம்; முறைகேடான சலுகைகளை வெட்டுவோம் என்று ஆரவாரம் செய்த தே.மு. அரசு சிறுதொழில் நிறுவனங்கள் தயாரிக்கும் பொருட்களை பெரிய நிறுவனங்களும் தாராளமாக உற்பத்தி செய்ய அனுமதியளித்து ஏகபோக நிறுவனங்களுக்கு சாதகமாக நடந்து கொண்டுள்ளது. அண்மையில் தொழிலமைச்சர் அஜித்சிங் தமது அரசின் புதிய தொழிற்கொள்கையை அறிவித்தும் ''நல்ல துவக்கம்'' என்று தரகுப் பெருமுதலாளிகளும் பத்திரிக்கைகளும் வாழ்த்தி வரவேற்றன.

சுருக்கமாகச் சொன்னால், முன்பு ராஜீவ் ஆட்சியில் வி.பி.சிங் நிதிமந்திரியாக இருந்தபோது அறிவித்த தாராளவாத தொழிற் கொள்கைதான் இப்போதும் பின்பற்றப்படுகிறது. பெப்சிகோலா திட்டமும் கைத்தறி நெசவாளர்களைப் போண்டியாக்கிய ராஜீவின் புதிய ஜவுளிக் கொள்கையும் புதிய ஆட்சியில் அப்படியே தொடர்கிறது. ஆனால் ராஜீவ் ஆட்சிக்கும் ராஜா ஆட்சிக்கும் ஒரு வேறுபாடு உள்ளது. முந்தைய ஆட்சியில் தரகு முதலாளிகளில் ஒரு பிரிவினரான அம்பாணிகள் ஆதாயமடைந்தனர் என்றால், இப்போது மற்றொரு பிரிவினரான வாடியாக்கள் ஆதாயமடைகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



குஜராத்தில் பற்றி எரியும் மதவெறித் தீ!

இதில் எந்தப் பிரிவினருக்குச் சேவை செய்வது என்பதில் தான் வேறுபாடே தவிர அடிப்படை கொள்கைகளில் ராஜீவுக்கும் ராஜாவுக்கும் வேறுபாடு ஏதுமில்லை.

**பிராந்திய மேலாதிக்க வெறி மாறவில்லை**

வெளிநாட்டுக் கொள்கையிலும் நேரு - இந்திரா காலம் தொடங்கி ராஜீவ் காலம் வரை பின்பற்றப்பட்ட அதே பாதையில் தான் தே.மு. அரசும் செக்குமாடு போலச் செல்கிறது. கியூபாவின் கப்பல்களைத் தாக்கி அதன் வானொலி ஒலிபரப்பை தடை செய்த அமெரிக்காவின் அடாவடித்தனங்களை எதிர்த்து தே.மு. அரசு வாயே திறக்கவில்லை. நேபாளத்தின் மீது பாசிச ராஜீவ் கும்பல் விதித்த பொருளாதாரத் தடைகளை அகற்ற கடந்த 6 மாத காலமாக தே.மு. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பின்னர் தரகு முதலாளிகளின் வர்த்தகத்துக்கு சாதகமாகவும், இந்தியாவின் மேலாதிக்கம் தொடர்ந்து நீடிக்கும் வகையிலும் இப்போது ஒப்பந்தம் போட்டுள்ளனர். அதேபோல பாகிஸ்தானை மிரட்டிப் பணிய வைக்கும் நோக்குடன் போர்வெறியூட்டி, ராஜீவ் அரசைவிட கூடுதலாக 2,250 கோடி ரூபாயை ராணுவத்துக்குச் செலவிட்டு தெற்காசிய பிராந்திய மேலாதிக்க கொள்கையை தொடர்ந்து பின்பற்றுகிறது.

இலங்கை விவகாரத்திலும் ராஜீவ் பின்பற்றிய அதே கொள்கையைத்தான் வி.பி. சிங் அரசும் மேற்கொண்டது. ராஜீவ் கும்பலே ஒப்புக் கொண்டு நிர்ணயித்த காலக் கெடுவிற்குள் இந்திய ஆக்கிரமிப்பு ராணுவத்தை திரும்பப் பெறாமல் மூன்று மாதங்கள் தாமதப்படுத்தியது. உளவு நிறுவனங்கள் ஈழ விவகாரத்தில் தலையிடுவதை தொடர்ந்து அனுமதித்து வருகிறது. ஈழத் துரோகிகள் தமது அதிகாரத்தை நிலை நாட்டிக்கொள்ள இலங்கை அரசுக்கெதிராகப் போர் நடத்துமாறு தூண்டியது. அது முடியாதபோது கருணாநிதியை வைத்து ஈழப் போராளி அமைப்புகளுக்குள் சமாதான நாடகமாடியது. இன்று ஈழத் துரோகிகள் இந்தியாவில் தஞ்சமடைய ஏற்பாடு செய்துள்ளது.

"பெருமாள் குழுவினர் லெபனானில் ஆயுதப் பயிற்சி எடுப்பார்கள். பெருமாளை நாங்கள் தொடர்ந்து ஆதரிப்போம்." என்று உளவுப்படை "ரா" பகிரங்கமாக கூறியது. ஆனால் இந்திய ஆக்கிரமிப்புப் படை திரும்புவதற்கு முன் நட்புறவு ஒப்பந்தம் என்ற பெயரில் இலங்கையை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரும் முயற்சியில் தே.மு. அரசு தற்காலிகமாகத் தோல்வியடைந்துள்ளது. இருப்பினும் ஈழத்துரோக அமைப்புகளுக்கும் அகதிகளுக்கும் தஞ்சமளித்து மீண்டும் ஈழ விவகாரத்தில் தலையிட எத்தனிக்கிறது.

இவையெல்லாம் புதிய அரசும் பழைய அரசின் பாதையிலேயே அதே பிராந்திய விரிவாக்க துணை வல்லரசுக் கொள்கையைக் கடைபிடித்து வருவதை நிரூபித்துக் காட்டுகின்றன.



பீகாரில் தொடரும் சாதிவெறிப் படுகொலை.

**சாதி மதக் கலவரங்கள் ஓயவில்லை**

தேர்தலின்போது வட மாநிலங்களில் மத வெறிக் கலவரங்கள் பற்றி எரிந்து கணக்கற்ற உயிர்களைக் காவு கொண்டது. அந்தப் பிணங்களின் மீதேறிப் பிரதமரான வி.பி. சிங், கால இலக்கு நிர்ணயித்து அயோத்தியின் ராம ஜென்மபூமி விவகாரத்தைத் தீர்க்கப் போவதாக உறுதியளித்தார். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஓரேமணி நேரத்தில் ராம ஜென்ம பூமி விவகாரத்துக்கு தீர்வு காண்போம் என்று அறிவித்தார் உள்துறை மந்திரி முப்தி முகம்மது சையது. ஆனால் இன்று வரை எந்தத் தீர்வையும் முன்வைக்காமல், 'இணக்கமாக முடிவு எடுக்கப்படும்' 'நீதிமன்றத் தீர்ப்பை ஏற்போம்' என்று பிரச்சினையிலிருந்து நழுவிக் கொள்கிறது வி.பி. சிங் அரசு. அதன் மதச்சார்பின்மை கொள்கை, 'இடது' சாரிகள் மற்றும் பாரதீய ஜனதாவின் நிர்ப்பந்தங்களுக்கு ஏற்ப மீனுக்கு தலையும் பாம்புக்கு வாலும் காட்டுவதாகவே உள்ளது. கடந்த ஐந்து மாதங்களில் குஜராத், நவடா, ஜாம்ஷெட்பூர், கான்பூர், அலகாபாத், ஜெய்பூர் ஹசாரிபாக் என மதவெறிக் கலவரங்கள் தலைவிரித்தாடியது. வட மாநிலங்களில் தாங்கள் வலுவான மாற்று சக்தி என்பதை தேர்தல்களில் நிரூபித்துக் காட்டி தே.மு. அரசின் உயிர்நாடியைக் கையில் பிடித்துள்ள தைரியத்தில் வெளிப்படையாகவே பாரதீய ஜனதா கொக்கரிக்கிறது. அதன் துணை அமைப்பான விசுவ இந்து பரிஷத், ராம ஜென்ம பூமி விவகாரத்தைத் தொடர்ந்து இப்போது கிருஷ்ண ஜென்ம பூமி விவகாரத்தைக் கிளறிவிட்டு மதுரா, வாரணாசி, ஆக்ரா முதலான இடங்களில் மீண்டும் மத வெறிக் கலவரங்களைக் கட்டவிழ்த்து விட்டது. இன்று வட மாநிலங்களைக் கவ்வி நிற்கும் பேரபாயமாக வகுப்புக் கலவரங்கள் வளர்ந்து நாட்டையே அச்சுறுத்துகிறது.

வகுப்புக் கலவரங்கள் மட்டுமல்ல; சாதி வெறிக் கலவரங்களும் புதிய ஆட்சியில் ஓயவில்லை. குறிப்பாக, பீகார், உ.பி. மாநிலங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் கேள்

படிப்பகம்

விமுறையின்றி சாதிவெறி நிலப்பிரபுக்களால் கொன்று ஒழிக்கப்படுகின்றனர். ராஜீவ் ஆட்சியில் பீகாரில் பூமிசேனா, லோரிக் சேனா முதலான சாதி வெறி நிலப்பிரபுக்களின் குண்டர் படைகள் கொட்டமடித்தன. இன்று புதிய ஆட்சியில் சூரிய ஒளி சேனை கொட்டமடிக்கிறது. நிலப்பிரபுக்களின் சட்ட விரோத குண்டர் படையைத் தண்ட செய்ய வக்கற்ற அரசு, தாழ்த்தப்பட்ட மக்களைத் திரட்டிப் போராடிவரும் நக்சல்பாரி புரட்சியாளர்கள் மீது அடக்குமுறையை ஏவுகிறது.

**அதே திட்டங்கள்! அதே கொள்கைகள்!**

எதிர்கட்சியாய் இருக்கும்போது ஆளுங்கட்சியின் கொள்கை - திட்டங்களைச் சாடுவதும் ஆட்சிக்கு வந்த பின்னர் அதே திட்டங்களை மேலும் விரிவாக்கி அமுலாக்குவதும் ஓட்டுக் கட்சிகளிடையே நிலவும் எழுதப்படாத ஒப்பந்தமாக உள்ளது. நேற்றுவரை எம்.ஜி.ஆரின் சத்துணவுத் திட்டத்தை பிச்சைக்காரத் திட்டம் என்று சாடி வந்த கருணாநிதி, இன்று ஆட்சிக்கு வந்ததும் முட்டையுடன் சேர்த்து சத்துணவு போடும் திட்டமாக்கினார். அதேபோல ஜனதாதளம் எதிர்க்கட்சியாக இருந்தவரை, ஒரிசாவில் ராஜீவின் அணு ஆயுத ஏவுகணைத் திட்டத்தை எதிர்த்து பாதிக்கப்படும் பாலியபால் வட்டார மக்களுடன் சேர்ந்து போராடியது. தாங்கள் ஆட்சிக்கு வந்தால் திட்டத்தையே ரத்து செய்வோம் என்று சூளுரைத்தனர். ஆனால் இன்று ஆட்சிக்கு வந்த பின், தேச நலன் கருதி இத்திட்டத்தை மேற்கொள்வது அவசியமானது என்று பசப்புகின்றனர். மக்களது போராட்ட உணர்வை மழுங்கடித்து நைச்சியமான முறையில் திட்டத்தை நிறைவேற்ற காலத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

இதேபோல, சுற்றுச் சூழல் காரணங்களுக்காகவும் மக்களது வாழ்வு பறிக்கப்படுவதாலும், தேஹ்ரி அணைத் திட்டத்தையும், நர்மதா திட்டத்தையும் எதிர்த்து பாதிக்கப்படும் மக்களும் தன்னார்வக் குழுவினரும் போராடிய போது தார்மீக ஆதரவளித்த ஜனதா தளத்தினர் இன்று ஆட்சிக்கு வந்ததும் அதே திட்டங்களை வெறியோடு அமுலாக்குகின்றனர். தேஹ்ரி அணை நிலநடுக்கப் பகுதியில் கட்டப்படுவதால் பேரழிவு ஏற்படும் என்று ரஷிய நிலவியலாளர்கள் எச்சரித்தனர். ஆனால் அவர்களே இப்போது ஒப்புதல் அளித்து விட்டதாகக் கூறி, 85,000 மக்களை நிவாரணம் ஏதுமின்றி வெளியேற்றிவிட்டு அணைக்கட்டுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது தே.மு. அரசு. இதுபோலவே, பாதிக்கப்படும் ஒரு லட்சம் மக்களை நிவாரணமின்றி துரத்திவிட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பைக் கணக்கில் கொள்ளாமல் போராடுவோர் மீது அடக்குமுறையை ஏவி, நர்மதா திட்டத்தை அமுலாக்குகின்றனர். இதில் கொடுமை என்னவென்றால், மாநில முதல்வர்களே இத்திட்டத்தால் ஆதாயமடையவுள்ள பணக்கார விவசாயிகளை உசுப்பிவிட்டு மக்களைத் திரட்டி எதிர்போராட்டம் நடத்தி திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் என்று கொக்கரிக்கின்றனர். அதே சமயம் தமது குறுகிய பிராந்திய நலன்களுக்காக காவிரிநீர் பிரச்சினை, தெலுங்கு - கங்கை திட்டம் ஆகியவற்றை கிடப்பில் போட்ட ராஜீவ் கும்பலைப் போலவே புதிய ஆட்சியாளர்களும் இவற்றை ஆமை வேகத்தில் நகர்த்துகின்றனர்.

**காங்கிரசுக்கு மாற்றுத் தீர்வாகுமா?**

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது, கொள்கை அடிப்படையிலான அரசியலை வளர்க்க வேண்டும்; அரசியலில் கிரிமினல்களின் ஆதிக்கத்தை அடியோடு ஒழிக்க வேண்டும் என்று வி.பி.சிங் பிரச்சாரம் செய்தார். காங்கிரசைப் போல பெரிய கம்பெனிகளிடம் தேர்தலுக்கு நன்கொடை வாங்கமாட்டோம் என்று உறுதியளித்தார். ஆனால் அவர் அணிந்த ஜனநாயக வேடம் விரைவிலேயே அம்பலப்பட்டுப் போனது.

பாசிச ராஜீவ் போட்டியிட்ட அமேதி தொகுதியில் காங்கிரசு குண்டர்கள் தில்லுமுல்லு, மோசடி, வன்முறைகளில் இறங்கியதைப் போலவே, இப்போது அரியானா மேஹம் தொகுதியிலும் நடந்தது. அமேதியில் அரசு எந்திரம் முழுக்கவும் மோசடிக்கு உடந்தையாய் இருந்ததைப் போலவே, மேஹம் தொகுதியிலும் அதிகார வர்க்கமும் போலீசும் தேர்தல் கமிஷனும் சௌதாலாவின் வெற்றிக்கு விசுவாசமாகச் சேவை செய்தன. ஆனாலும் புதிய பரிசுத்தம் வி.பி. சிங் வாயே திறக்கவில்லை. உட்கட்சி குடுமிபிடி சண்டையில் தனது பதவியை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகே சௌதாலாவை ராஜினாமா செய்யுமாறு வேண்டிக் கொண்டார்.

இதே போல பெரிய கம்பெனிகளிடம் நன்கொடை வாங்கமாட்டோம் என்ற வாக்குறுதி வடமாநில சட்டமன்றத் தேர்தலின் போது காலாவதியாகிப் போனது. காங்கிரசின் பணபல ஆதிக்கத்தை முறியடிக்க இது அவசியமானது என்று ஜனதாதளத் தலைவர்கள் வெட்கமின்றி பெரிய கம்பெனிகளிடம் தாராள நிதி திரட்டினர்.


ஜனநாயகம் பற்றி வாய் கிழியப் பேசும் காங்கிரசுக் கட்சியில் நீண்டகாலமாக உட்கட்சித் தேர்தலோ ஜனநாயகமோ கிடையாது. ஜமீன்தார் முறை போல நேரு பரம்பரையின் தலைமையும் அதன் விருப்பத்தின் அடிப்படையிலான தலைவர்களின் நியமனமும்தான் இன்னமும் நீடிக்கிறது. கோஷ்டி சண்டையும் குடுமிபிடி தகராறுகளும் அதன் பாரம்பரிய கலாச்சாரமாக உள்ளது.

காங்கிரசைப் போலவே சாதி ஆதிக்கம், பண - படைபலம் கொண்ட தேசிய முன்னணியே சந்தர்ப்பவாதிகள், பதவி வெறியர்கள், ஊழல் பெருச்சாளிகள், கிரிமினல்களைக் கொண்ட ஒரு கதம்பக் கூட்டணி. ஆட்சிக்கு வந்தபிறகு பதவி வெறிக்கான உட்கட்சி சண்டைகள் அதில் புழுத்து நாறத் தொடங்கி விட்டது. வி.பி.சிங் கோஷ்டி, தேவிலால் கோஷ்டி, சந்திரசேகர் கோஷ்டி என்று ஒவ்வொருவரும் காலை வாரி விடுகின்றனர். பதவி வெறிக்கான இந்த நாய்ச் சண்டைகளை ஏதோ கொள்கை பூர்வமான கருத்து வேறுபாடுகளாக வி.பி. சிங் சித்தரிக்கிறார். வெவ்வேறு கோஷ்டிகளின் கருத்து மோதலால் அரசியல் கொள்கையையும் திட்டங்களையும் இன்னும் சிறப்பாக செயல்படுத்த முடியும் என்று பூசி மெழுகுகிறார். இதிலே வேடிக்கை என்னவென்றால் ஜனதா தள தற்காலிக தலைவர் தேர்தலைக்கூட ஜனநாயக முறையில் அவர்களால் நடத்த முடியவில்லை. கடைசியில் காங்கிரசைப் போலவே தேர்தல் நடத்தாமல் பொம்மையை தலைவராக நியமனம் செய்துள்ளனர்.

காங்கிரசு விசுவாசிகளை கவர்னர்களாக நியமித்து எதிர்க்கட்சி அரசுகளைக் கவிழ்ப்பது அல்லது எதிர்கட்சியைப் பிளவுபடுத்தி காங்கிரசு கூட்டணி அரசை நிறுவுவது என்ற கொள்கையை காங்கிரசுக் கட்சி நீண்டகாலமாகப் பின்பற்றி வருகிறது. கவர்னர்களை டெல்லி அரசின் ஏஜெண்டுகள் என்று சாடிவந்த தேசிய முன்னணி இன்று அதே கொள்கை வழியில் தமது விசுவாசிகளையும் கூட்டணிக் கட்சியினரையும் கவர்னர்களாக நியமிக்கிறது. கோவா, நாகாலாந்து, மிஜோரம் மாநிலங்களில் காங்கிரசு அரசுகளை கவிழ்த்துள்ளது.

தொகுப்பாகப் பார்த்தால் தே.மு. அரசு காங்கிரசுக்கு மாறானதோ வேறானதோ அல்ல. அடிப்படையில், ராஜீவின் கொள்கைக்கும் ராஜாவின் கொள்கைக்கும் வித்தியாசம் ஒன்றுமில்லை. அதன் அணுகுமுறை சூழ்ச்சியும் தந்திரமும் கொண்டதாக, ஜனநாயக முகமூடி அணிந்ததாக உள்ளதே தவிர அடிப்படையில் ராஜீவின் கொள்கையிலிருந்து வேறுபட்டதாக இல்லை. இதை ஆட்சிக்கு வந்த ஆறே மாதங்களில் தேசிய முன்னணி அரசு தெளிவாகவே நிரூபித்துக் காட்டி விட்டது.

● பாலன்.



www.padippakam.com

(தலையங்கம் தொடர்ச்சி...)

றார். சிம்சன் சிவசைலம். டி.வி.எஸ். ஆகிய பார்ப்பன முதலாளிகளுக்காக தொழிலாளர்களை அடக்கி ஒடுக்கும் கருணாநிதியின் குடும்பமே ஒரு தரகு அதிகார முதலாளியாகி உள்ளது. ஆகவேதான் ''பிரிவினை வாதத்தின் சுவடுகூட தெரியாமல் ஒழிப்பேன்'' என்று கருணாநிதி பேசுகிறார். அரசியல் - ராஜதந்திரத்தோடு மொழி. இனப் பிரச்சினைகளைக் கருணாநிதி அணுகுகிறார் என்று அவரது உடன்பிறப்புகள் இதை மழுப்புகின்றனர். ஆனால் பதவி - அதிகாரம் - சொத்துக்காக எதையும் செய்யத் துணிந்த இனத்துரோகி தான் கருணாநிதி என்று தன்னுரிமை இயக்கத்தின் மீது தாக்குதல் தொடுத்ததன் மூலம் அவர் நிரூபித்துள்ளார்.

தன்னுரிமை இயக்கம் வலுக்கும் போது கருணாநிதியைப் போலவே வீரமணியின் சாயமும் வெளுத்துப் போகும் என்பதும் நிச்சயமாகிவிட்டது. இன உரிமை பற்றி வாய் கிழியப் பேசும் வீரமணி தஞ்சையில் முதல்நாள் நடக்க இருந்த தன்னுரிமைப் பிரகடன மாநாட்டைத் தவிர்த்துவிட்டு இரண்டாம் நாள் நடக்கவிருந்த நெடுமாறன் கட்சி மாநாட்டிலேதான் கலந்து கொள்ள இருந்தார். தடையையும் மீறி மற்ற தலைவர்கள் வந்து கைதான போதும். வீரமணி வரவேயில்லை. நடிகை சௌகார் ஜானகிக்கு சினிமா வாய்ப்பு கிடைக்காதது. முட்டையில் உள்ள கொழுப்புச் சத்து ஆகியவைப் பற்றி எழுதும் புதிய 'ஆஃப்செட்' ''விடுதலை''யில் தஞ்சை மாநாடு தடை - கைதுகள் பற்றி ஒரு வரி. ஒரு வார்த்தைகூடக் கிடையாது. பெரியார் சொத்துக்களை வைத்துப் பிழைப்பு நடத்தும் வீரமணிக்கு தமிழர் தன்னுரிமை என்பதெல்லாம் அணிகளைத் தக்க வைத்துக் கொள்ள அடிக்கும் சவடால்தான் என்பதை நிரூபித்தும் விட்டார்.

ஆங்கிலேயக் காலனியவாதிகளின் துப்பாக்கி முனையிலே உருவாக்கப்பட்டது தான் இந்திய நாடு. இங்கே தரகு அதிகார முதலாளிகள். நிலப்பிரபுக்களின் நலன்களுக்காக அனைத்து சிறுதேசிய இனங்களும். மொழி. பண்பாடு. பொருளாதாரம். அரசியல் மற்றும் இன ரீதியில் அடக்கி ஒடுக்கப்படுகின்றன. ஆகவே பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமைக்குப் போராடுவது நியாயமானது. அவசியமானதுதான். எனவேதான் பல பத்தாண்டுகளாக திராவிட இயக்கத்தினால் ஏமாற்றப்பட்ட போதும் உரிமை வேட்கையுடன் போராட முன்வருகிறார்கள். தமிழ் இளைஞர்கள். இவர்கள் இப்போது நூற்றுக்கணக்கில் உள்ள சிறுசிறு தமிழ் தேசிய இனக் குழுக்களில் திரண்டுள்ளனர். ஆனால் இந்தக் குழுக்கள் தன்னுரிமையைப் பெறமுடியுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

ஏனெனில் இந்தக் குழுக்களில் பலவும். அவசர நிலைக்காலத்தில் மன்னிப்பு எழுதிக் கொடுத்த பெருஞ்சித்திரனார். கருணாநிதியின் கடைக்கண் பார்வைக்குக் காத்திருக்கும் சாலை இளந்திரையன். முப்பதாண்டுகளில் எட்டு கட்சிகள் தாவி - பாசிச இந்திரா. எம்.ஜி.ஆருடன் கூடிக் குலாவி இன உரிமையை எதிர்த்த நெடுமாறன் போன்ற பிழைப்புவாதிகளால் தலைமை தாங்கப்படுகின்றன; அல்லது பாசிச பிரபாகரன் போன்ற வெளிச்சக்திகளின் தயவை நம்பியுள்ளன அல்லது தமிழ் இன மக்கள் போராட்டத்தில் நம்பிக்கையின்றி தனிநபர் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுகின்றன. மேலும் தமிழர் தன்னுரிமை யாருக்காக. எந்த எதிரிக்கு எதிராக என்பதில் ஒற்றுமையற்ற இந்தக் குழுக்கள் இணைந்து போராடுவதோ. தொலைநோக்கோ இந்தக் குழுக்களுக்குக் கிடையாது.

மார்க்சியப் பொதுவுடமைக் கட்சி என்ற குழு இன்று தன்னுரிமைக்கு முன்னுரிமை என்று பேசுகிறது. முன்பு அது ஐக்கியப்பட்டிருந்த போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகள் கடுமையாக எதிர்த்த போதும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையைத் தனது திட்டத்தில் சேர்த்துக் கொண்டு போராடியது மார்க்சிய - லெனினியக் கட்சி மட்டுமே. பாட்டாளி வர்க்கத் தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சியின் ஒரு அங்கமாக தன்னுரிமை அது கொண்டுள்ளது. இந்தக் கட்சிதான் தேசிய இனங்களின் விடுதலை. தன்னுரிமையை வென்று தரமுடியும் என்பதை லெனின் - ஸ்டாலினது தலைமையிலான சோவியத் ருஷ்யாவும். மாவோ தலைமையிலான சீனமும் நிரூபித்துள்ளது. ஆகவே தமிழர் தன்னுரிமையில் நம்பிக்கையுடைய தமிழ் இளைஞர்கள் மார்க்சிய - லெனினிய இயக்கத்தில் இணைந்து போராடுவதன் மூலமே தனது லட்சியத்தை நிச்சயம் அடைய முடியும். ●



## போலிகளின் வக்கிரம்

போலிக் கம்யூனிஸ்ட்டுகளின் தலைமை அகில இந்திய அளவில். வேலையின்மை எதிர்ப்பு பிரச்சார இயக்கம் நடத்தியது! தமிழகத்தில் இப்பிரச்சார பயணம் எப்படி நடந்தது என்பதை அக்கட்சியின் அதிகாரப்பூர்வ ஏடான தீக்கதிர் சொல்வதை அப்படியே கீழே தருகிறோம். அப்பிரச்சார பயணத்தைப் பார்ப்பவர்கள் யாரும் அது ஒரு கொள்கைக்கான. கோரிக்கைகான பிரச்சார இயக்கம் என்பதாக தவறியும் கருதிவிடக் கூடாது என்பதற்காக திட்டமிட்டு கேளிக்கை கொண்டாட்ட அரட்டையாக நடத்தியது! ஏற்கனவே இப்படித்தான். பாசிச ராஜீவின் ஆட்சியில். வேலை வாய்ப்பை அடிப்படை உரிமையாக்கக் கோரி பாராளுமன்றத்தில் அவர்களே கொண்டுவந்த மசோதா விவாதத்திற்கு வந்தபோது அவர்கள் பாராளுமன்றத்திற்கு வரவில்லை. போதிய கோரம் இல்லாமல் அம்மசோதா விவாதத்திற்கே எடுத்துக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பட்டது. போலிக் கம்யூனிஸ்டுகள் தான் கொண்ட கொள்கையின் மீது வைத்திருக்கும் விசுவாசம் இதுதான்!

**இராமேஸ்வரம் - சென்னை - பிரச்சாரப் பயணக் குழுவுக்கு, வாத்திய இசை முழங்க தஞ்சைத் தரணிதந்த வரவேற்பு! நாட்டியக் குதிரைகளில் தலைவர்கள் பவனி!**

**தஞ்சாவூர், ஜூன் 3.**

'சோழ வளநாடு சோறுடைத்து' என்று பண்டைத் தமிழ் இலக்கியங்களில் புகழப்பட்டு 'தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கி. தற்போது காவிரி நீர்ப் பிரச்சினை காரணமாக விவசாயம் வெகுவாக பாதிக்கப்பட்டு கிராமப்புற மக்கள் கதிகலங்கிநிற்கும் தஞ்சைத் தரணி. வேலையின்மை எதிர்ப்புப் பிரச்சார பயணக் குழுத் தலைவர்களை நெஞ்சார வரவேற்று உபசரித்து தமக்கே உரிய பாரம்பரியச் சிறப்பினை நிலைநாட்டியது...

இளங்கோவன். தங்கராஜ். ஜீவானந்தம். ரெங்கநாத் ஆகியோர் மோட்டார் சைக்கிளில் 'பைலட்'டுகளாக முன்னே செல்ல. ஊர் எல்லைகளில் இருந்து. கிளாரினட் இசைக்குழுவின் பாண்டு வாத்தியத்திற்கு ஏற்ப நடனம் ஆடக்கூடிய நாட்டியக் குதிரைகளில் தலைவர்கள் பவனிவர. அதிர்வேட்டு முழக்கங்கள். ஆரவார கோஷங்கள் ஒன்றுக்கொன்று போட்டி போட. கோலகல வரவேற்பை திருவோணம். ஊரணிபுரம். நம்பிவயல் ஆகிய இடங்களில் பயணக்குழு பெற்றது. ...தலைவர்களுக்கு ரூபாய் நோட்டு மாலைகள் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

...அதிர்வேட்டுகள் முழங்க. தப்பு அடித்து கொம்பு ஊதி அளித்த இந்த வரவேற்பிற்கு...

சரவெடிகள் வெடித்துச் சிதற. கொட்டு மேளத்துடன் தலைவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

— 4.6.90 தீக்கதிர்

● ○ ●

படிப்பகம்

www.padippakam.com

# எச்சரிக்கை!
# போலீஸ் வெறியர்கள்





படிப்பகம்

www.padippakam.com

# விசாரணைக் கைதிகளை பகிரங்கமாக சித்திரவதை செய்வதன் மூலம் போலீசு பயங்கரவாதம் நிறுவனமயமாகிறது! எதிர்க்கத் துணியாவிட்டால் உயிர் வாழ்வதற்கும் உரிமை இழப்போம்!



செத்த மிருகத்தைக் கூட இப்படி இழுத்துச் செல்வதற்கு சராசரி மனிதனுக்கு மனம் பதைக்கும்! ஆனால் பிணத்தை அல்ல! நம்மைப் போல் நினைவும் கனவும் உள்ள உயிருள்ள மனிதனை இழுத்துச் செல்கிறது, போலீசு!

உ.பி. மாநிலம் லக்னோ நகர் அருகில் சாக்பார் ரயில் நிலையத்தில் இவரை திருடன் என்ற சந்தேகத்தின் பேரில் பிடித்ததாக கூறுகிறது ரயில்வே போலீசு! விசாரணை இல்லை! நிரூபணம் இல்லை! சந்தேகத்தையே தீர்ப்பாக்கிப் பல பேருக்கு முன்னிலையில் தாறுமாறாக அடித்து அவரது கால்களை முறித்தது. போலீசு நிலையத்தில் பொய் வழக்கு ஜோடிக்கும் சதிக்காக அவரை ரிக்ஷாவில் கொண்டு செல்கிறது. ரிக்ஷாவிலிருந்து போலீசு நிலைய வாசற்படிக்கும் நகர முடியாத அளவுக்கு அவரது கால்கள் முறிந்து தொங்கின! பிணத்தை இழுத்துச் செல்வதைப் போல் அவரை போலீசு நிலையத்தினுள் இழுத்துச் செல்கிறது. இதை பொதுமக்கள் பார்ப்பது பற்றியோ, பத்திரிக்கைகள் புகைப்படம் எடுப்பது பற்றியோ கவலைப்படவில்லை போலீசு!

இவர் ஒரு அப்பாவியாக இருக்கலாம். அல்லது நகரத்திற்கு புதிய நபராக இருக்கலாம். அல்லது உண்மையிலேயே ஒரு திருடனாகக் கூட இருக்கலாம்! குற்றவாளியாக இருந்தால் ஆதாரங்கள் மூலம் சட்டத்தின் கையில் ஒப்படைக்க வேண்டியதுதானே போலீசின் வேலை?

ஆனால் நாளும் நாம் பார்ப்தென்ன? சந்தேகப்படும் நபரை விசாரிப்பது என்ற பெயரில் பொது இடத்தில் ரௌடித் தனத்தில் இறங்குவதே போலீசுதானே! சகட்டுமேனிக்கு பாதசாரிகளை அடிப்பது. மொத்தமாக வாரிப் போட்டுக் கொண்டு சென்று மிரட்டுவது என்ற திட்டமிட்டு பொதுமக்களை நடுங்க வைக்கிறது! ஒருமுறை அல்ல, ஓராயிரம் முறை இது நிரூபிக்கப்பட்டுள்ளது! இதற்காக எந்த போலீசுகாரன் இதுவரை தண்டிக்கப்பட்டு இருக்கிறான்?

உதாரணத்திற்க இதே உ.பி. மாநிலத்தில் ஓராண்டுக்கு முன்னால் ரயிலில் டிக்கெட் இல்லாமல் பயணம் செய்தார் என்று ரயில்வே பிளாட்பார பெஞ்சில் ஒருவரை 15 நாளும் விலங்கிட்டு பூட்டி வைத்திருந்தது ரயில்வே போலீசு.

ஒரு கைதியை குற்றுயிராக்கி மருத்துவமனைக்கு அழைத்து செல்வதாக ரிக்ஷாவில் காலுக்கடியில் மிதியடியாக போட்டுக் கொண்டு சென்றது, பீகார் போலீசு!

பத்திரிக்கைகள் போலீசு அக்கிரமங்களை புகைப்படங்களுடன் வெளியிட்டன. தமக்குத் தெரியாமல் அப்படி நடந்துவிட்டதாக பம்மாத்து செய்து உடனடியாக விசாரணைக்கு உத்தரவிட்டன, அம்மாநில அரசாங்கங்கள்! ஆனால் எல்லாம் வெறும் கண் துடைப்புதான்! சம்பந்தப்பட்ட போலீசுக்காரன்கள் இன்னும் தண்டிக்கப்படவே இல்லை! அரசாங்கங்கள் கொடுக்கும் அந்த ஊக்கம்தான் அதிகார திமிராக இந்த போலீசுக்காரன்கள் உடம்பிலும் ஓடுகிறது!

இதுநாள் வரையில் போலீசு நிலைய 'லாக்கப்'பில் நடந்த சித்திரவதைகள் தான் போலீசின் குரூர வக்கிரத்திற்கு சாட்சியங்களாக இருந்தன. விசாரணைக் கைதிகளிடம் அவர்கள் செய்யாத குற்றங்களை ஒப்புக் கொள்ள வைக்கவும், போராடும் அரசியல் கைதிகளை ஒடுக்கவும், சக கைதிகளுக்கு, பாடம் புகட்டவும் கீழ்த்தரமான சித்திரவதைகளை கையாள்கிறது. போலீசு! அவ்வாறான போலீசுகாரன்களுக்கு அரசாங்கங்கள் பட்டம் பதவிகள் கொடுத்து கொழுப்பேற்றுகின்றன!

சிறைக் கொட்டடிக்குள் தங்களது குரூர வக்கிரங்களை வழியவிட்ட போலீசுகாரன்களின் அதிகாரத் திமிர் இப்போது சட்ட பூர்வமாக வீதியிலும் வழிகிறது. போலீசு என்றாலே அப்பாவிகளுக்கு சர்வநாடியும் ஒடுங்கிவிடும் அளவுக்கு வன்முறையை பகிங்கரமாக ஏவுகிறது. மறுபுறம் தேசத் துரோகிகள், பொருளாதார கிரிமினல்களிடம் வாலை ஆட்டுகிறது! உதாரணத்திற்கு, தேசத்தின் மிகப் பெரும் ஊழலான போபர்ஸ் பீரங்கி பேரத்தில் வின்சதா, இந்துஜா கும்பல் குற்றம் சாட்டப் பட்டனர். குவைத்திலும், லண்டனிலும் உல்லாசமாக இருக்கும் இத்திருடர்களை சகலபாதுகாப்பு உத்திரவாதம் கொடுத்து விசாரணைக்கு கௌரவமாக கூப்பிடுகிறது அரசு. அதில் பெருந்திருடனான இந்துஜா இதுநாள் வரையில் விசாரணைக்கே வரவில்லை.

இந்துஜாவும் விசாரணைக் கைதிதான். இங்கு செத்த மிருகம்போல் இழுத்துச் செல்லப்படும் நபரும் விசாரணைக் கைதிதான். சட்டம் எல்லாருக்கும் பொதுவானதா? போலீசு மக்களின் நண்பனா?

● பச்சையப்பன்.

படிப்பகம்

www.padippakam.com

# பார்ப்பன முதலாளியும் 'சூத்திர' அரசும் கூட்டு!

நிர்வாகத்தில் தொழிலாளர் பங்கேற்கும் வகையிலே அரசியல் சட்டம் நிறைவேற்றப் போவதாகக் கூறிக் கொண்டிருக்கிறது. ஜனதாத்தள அரசாங்கம். ஆனால் பெரும்பான்மைத் தொழிலாளர்கள் தாம் விரும்பும் ஒரு தொழிற்சங்கத்தை அமைத்துக் கொள்ளும் அடிப்படை உரிமை கூட பல தொழில் நிறுவனங்களில் மறுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட அடாவடித்தனத்திற்கு முன்னோடியாகத் திகழ்கிறது, தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய தரகு அதிகார முதலாளித்துவ குடும்பத்தினரின் டி.வி.எஸ். நிறுவனம்.

டி.வி.எஸ். நிறுவனங்களில் சாதி, குலம், கோத்திரம் பார்த்துத்தான் வேலைக்கே சேர்த்துக் கொள்ளுகிறார்கள். அல்லது மூத்த - விசுவாசிகள், கருங்காலிகள் சிபாரிசு செய்ய வேண்டும். அதேபோல டி.வி.எஸ். தொழில் நிறுவனங்கள் எதுவானாலும் முதலாளிகளாகப் பார்த்து உருவாக்கிக் கொண்ட கைக்கூலி - 'ஆஸ்தான' - தொழிற்சங்கம்தான். கருங்காலிகளின் அகில இந்தியத் தலைவன் - காங்கிரசு ஐ.என்.டி.யு.சி. ஆயுள்த் தலைவன் ஜி.ராமானுஜத்தின் பினாமிகள் தான் எப்போதும் டி.வி.எஸ். நிறுவனங்களின் தொழிற்சங்கத் தலைவர்களாக இருக்கமுடியும்.

1948-ல் இருந்தே அத்தொழிலாளர்கள் தமக்கென்று ஒரு சொந்தமான, சுதந்திரமான தொழிற்சங்கம் அமைக்கும் முயற்சிகள் எதுவானாலும் ஆள்பலம், பணபலம், அரசியல் - அதிகார பலம் கொண்டு ஒடுக்கி வருகிறார்கள்.

தொழிலாளருக்குத் துரோகம் செய்து, காட்டிக் கொடுத்துக் கருங்காலித்தனம் செய்வதில் ஐ.என்.டி.யு.சி.க்கு அடுத்தது தி.மு.க.வின் தொழிலாளர் முன்னேற்ற சங்கம்தான். அது சில சமயங்களில், சந்தர்ப்பத்திற்கேற்ப தொழிலாளர் பக்கம் நின்று போராடுவதும் உண்டு. அப்படிப்பட்ட தொ.மு.ச.வை அமைத்துக் கொள்வதைக் கூட டி.வி.எஸ். குடும்பம் சகித்துக் கொள்ளவில்லை.


ஓசூர் டி.வி.எஸ். சுசுகியில் தொ.மு.ச. அமைத்துக் கொண்டு அங்கீகாரம் பெறுவதற்காக அத்தொழிலாளர்கள் போராடினார்கள். டி.வி.எஸ். நிறுவனம் தனக்குக் கைவந்த அடக்குமுறைகளை ஏவி அதை முறியடிப்பதில் வெற்றி பெற்று விட்டது. சங்க முன்னணியாளர்களையும், போர்க்குணமிக்க தொழிலாளர்களையும் வேலை நீக்கம் செய்வது, குண்டர்களையும் போலீசையும் விட்டு அடித்து நொறுக்குவது, சட்ட விரோதக் கதவடைப்பின் மூலம் தொழிலாளர்களைப் பட்டினி போட்டுப் பழிவாங்குவது. இவ்வளவையும் எதிர்கொண்டு தொடர்ந்து போராடி வருகிறார்கள் டி.வி.எஸ். குடும்பத்தின் வேறு சில தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்கள்.

கொள்ளை லாபத்தை மேலும் அதிகரிக்கும் நோக்கத்தோடு 1987-ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் முறையை நுழைத்து 48 பேரை வேலைநீக்கம் செய்ததை எதிர்த்து சதர்ன் ரோடுவேஸ் தொழிலாளர் சங்கம் தோன்றியது. போலீசு - உளவாளிகளை வைத்து, உளவு வேலை பார்த்து சங்கம் அமைக்க முயன்ற தொழிலாளர்களில் 22 பேரை, பெங்களூர் கிளையில் வேலைநீக்கம் செய்தது, நிர்வாகம். அதை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் மீது போலீசு, குண்டர்களை ஏவித் தாக்குதல் நடத்தியது. மேலும் 49 பேரை வேலைநீக்கம் செய்து போராட்டத்தை முறியடித்தது.

அதன்பிறகு கருங்காலி சங்கத்தினர்களையும், தொழிலாளர் சங்கத்தினரையும், பாரபட்சமாக நடத்தத் துவங்கியது, நிர்வாகம். அதாவது கருங்காலி சங்கத்தினருக்கு மட்டுமே விழா முன்பணம், சீருடை போன்றவை தரப்பட்டன. 1988-ஆம் ஆண்டு ஊதிய ஒப்பந்தம் காலாவதியானது; ஆனால் பெரும்பான்மை சங்கத்தை அங்கீகரிக்க மறுத்து கருங்காலி சங்கத்துடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்டது. அந்தச் சங்கத்தில் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே ஊதிய உயர்வு; அதாவது ஒரே தகுதியில் இருந்து, ஒரே பணிபுரியும் கருங்காலி சங்க உறுப்பினர்களுக்கு மட்டும் மூன்று மடங்கு சம்பளம் தரப்படுகிறது. கர்நாடகா அரசின் தொழிலாளர் நல(!) அதிகாரிகள் இதற்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்து 'நீதி'மன்றம் போவதைத் தடுக்கிறார்கள்.

இதையெல்லாம் எதிர்த்து தொழிலகத்தில் யாரும் யாரோடும் பேசுவதில்லை. பிரார்த்தனைக் கூட்டங்களைப் புறக்கணிப்பது போன்ற காந்தீயப் போராட்டங்களைத்தான் தொழிலாளர்கள் நடத்தினார்கள். அதைக்கூட டி.வி.எஸ். குடும்பத்தினரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஓட்டுநர், எழுத்தர் வேலைக்குக்கூட ஒப்பந்த ஊழியர்களை வைத்தும், தொலை தூரங்களுக்கு இடமாற்றங்கள் செய்தும் பழிவாங்கியது. அடுத்து சதர்ன் ரோடுவேசின் வேறு கிளைகளிலும், சுந்தரம் மோட்டார்ஸ், சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் ஆகிய நிறுவனங்களிலும் சங்கங்கள் துவங்கினார்கள். பொதுமக்களுக்கு இலவச சேவை; ஊழியர்களுக்குக் கஞ்சித் தொட்டி போன்ற சாதாரண எதிர்ப்புகளுக்காக அந்நிறுவனங்களிலும் வேலைநீக்கங்கள் செய்து பழிவாங்கியது, நிர்வாகம்.

டி.வி.எஸ். நிறுவனத்தை எதிர்த்து நிற்க வேண்டுமானால் அதன் வெவ்வேறு நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்கள் ஐக்கியப்பட்டுப் போராட வேண்டுமென்று உணர்ந்து மேற்கண்ட மூன்று சங்கங்களும் ஒரு கூட்டமைப்பில் இணைந்தன. மே தினத்திலிருந்து சென்னை பனகல் பூங்கா முன்பு உண்ணாவிரதப் போராட்டம் துவங்கினர். காங்கிரசு கும்பலின் வேறு உண்ணாவிரதக் கூத்துக்காக டி.வி.எஸ். தொழிலாளர்களை அங்கிருந்து விரட்டியது போலீசு. மீண்டும் உண்ணாவிரதம் இருந்து கோட்டை நோக்கி ஊர்வலம் போனார்கள் தொழிலாளர்கள். அனைத்துச் சங்கங்களின் ஆதரவை நாடினர். போலிக் கம்யூனிஸ்டுகளின் சங்கங்கள் கண்டு கொள்ளவில்லை. சென்னைத் தொழிலாளர்களின் ஆதரவை இழந்துவரும் பிழைப்புவாதி குசேலர் மற்றும் சில சிறு சங்



SOUTHERN ROADWAYS LIMITED

SOUTHERN ROADWAYS LIMITED

படிப்பகம்

www.padippakam.com

கங்களும் தன்னார்வக்குழுக்களும் ஆதரவு தரவே ஆங்காங்கே விளக்கக் கூட்டங்கள் நடத்தினர்.

சென்னை பீட்டர்சு சாலையில் உள்ள டி.வி.எஸ். கம்பெனி முன்பு உண்ணாவிரதம் இருந்த தொழிலாளர்களின் பந்தலைச் சூறையாடி 60 பேரை இழுத்துப் போனது, போலீசு. பார்ப்பன எதிர்ப்பு சூத்திர ஆட்சியெனச் சொல்லிக் கொள்ளும் கருணாநிதி அரசாங்கமோ இரட்டிப்பு விசுவாசத்துடன் பார்ப்பனத் தரகு முதலாளிகளுக்கு ஊழியஞ் செய்வதுதானே வழக்கமாக உள்ளது. அந்த முறையியேலே இந்த முறையும் தொழிலாளர் இயக்கத்தை அடக்கி ஒடுக்குவதில் டி.வி.எஸ். முதலாளிகளுடன் கைகோர்த்து நிற்கிறது. இந்த இலட்சணத்தில் மே தினம் கொண்டாடி, மே தின நினைவுத் தூண் எழுப்பும் கருணாநிதியின் மோசடிக்கு முழு ஆதரவு தருகின்றன போலிக் கம்யூனிஸ்டுகள்.

கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக டி.வி.எஸ். நிறுவனங்களில் பெரும்பான்மைத் தொழிலாளர்கள் தமது சொந்தத் தொழிற்சங்கம் எதையும் நிறுவிக் கொள்வதற்கான முயற்சி அடாவடித்தனமாக மறுக்கப்படுகிறது. இதற்கு டி.வி.எஸ். முதலாளிகள், அரசு, கருங்காலித் தொழிற்சங்கங்களின் கள்ளக்கூட்டு மட்டும் காரணமல்ல. இரண்டு போலிக் கம்யூனிஸ்டுக் கட்சிகளும், பிழைப்புவாத குசேலரும் டி.வி.எஸ். முதலாளிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது போல அங்கே சங்கம் அமைப்பதே கிடையாது. தொழிலாளர்களாக நம்பிக்கை வைத்து இவர்களது தலைமையைத் தேர்ந்தெடுத்தாலும் மலட்டுத்தனமான போராட்டங்கள் நடத்தி துரோகமிழைத்து விட்டு ஓடிவிடுவார்கள்.

இந்நிலையில் வேறுவழியின்றி டிராட்ஸ்கிய மற்றும் தன்னார்வக் குழுக்களின் தலைமையை இப்போது நாடிப் போயிருக்கிறார்கள் டி.வி.எஸ். தொழிலாளர்கள். இந்தத் தலைமையும், டி.வி.எஸ். முதலாளிகளுக்குப் பழக்கமான, அவர்கள் எளிதில் முறியடிக்கக்கூடிய அதே முறைகளில் தொழிலாளர்களை இட்டுச் செல்கிறது. ஆகவே, டி.வி.எஸ். முதலாளிகளின் சூழ்ச்சி - தந்திரம் - வக்கிரம், அதிகார பண பலத்தை முறியடிக்க வேண்டுமானால் முற்றிலும் புதிய பல உத்திகளைத் தொழிலாளர்கள் கற்றுக் கொள்ளவும் கடைப்பிடிக்கவும் வேண்டும்.

✱ இரகசிய, அரை இரகசிய முறைகளில் தொழிலாளர்களின் பலத்தைத் திரட்ட வேண்டும். ✱ போலீசு - குண்டர்களின் தாக்குதலை எதிர்த்து முறியடிப்பதற்கான தற்காப்புத் தயாரிப்புகளைச் செய்யவேண்டும். ✱ சட்டபூர்வ வழிகளை மட்டும் நம்பியிருக்கக் கூடாது. ✱ முதலாளி - நிர்வாகத்துக்கு அதிர்ச்சியூட்டும் குறுகிய கால, திடீர் போராட்ட வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும். ✱ தொழிற்சங்கவாதக் கண்ணோட்டத்தைக் கைவிட்டு புரட்சிகர அரசியலைப் பயில வேண்டும். ✱ சமரச, சந்தர்ப்பவாதத் தலைமையை நிராகரித்துவிட்டு புரட்சிகர அமைப்புத் தலைமையின் கீழ் அணிதிரள வேண்டும்.

● கரீம்.

## ஒரு லட்சம் பேரை விபச்சாரிகளாக்கி ஓராயிரம் பேரை மீட்டார்கள்...

# சமுதாயத் திருப்பமா?

"எத்தர்களால் ஏமாற்றப்பட்ட தமிழ்நாட்டுச் சகோதரிகள் "பம்பாய் பசாரில்" வாடகைப் பொருட்களாக ஆக்கப்பட்ட கொடுமை தவிர்க்க இந்தியாவிலேயே முதல் முயற்சியாக எண்ணூறுக்கு மேற்பட்ட சகோதரிகளை நமது காவல் துறையினர் தமிழகத்திற்கு மீட்டு வந்துள்ள நிகழ்ச்சி; ஒரு யுகத்தான சமுதாயத் திருப்பமன்றோ!"

- இவ்வாறு தனது பிறந்த நாள் செய்தியில் பீற்றிக் கொண்டிருப்பவர் வேறு யாருமல்ல; கருணாநிதி தான்!

இந்த 'சமுதாயத் திருப்பம்' பற்றி கருணாநிதி விடுத்துள்ள செய்தியில் மிகப் பெரிய பித்தலாட்டம் ஒன்றுள்ளது. ஏதோ தமிழ்நாட்டுப் போலீஸ்காரர்கள்தான் பம்பாயில் விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்த தமிழ் பெண்களை மீட்டு வந்தது போல புளுகியுள்ளார். உண்மையில் தமிழ் பெண்களை மீட்க முயற்சி எடுத்தது வினோத் குப்தா என்பவரின் தலைமையில் பம்பாயில் இயங்கி கொண்டிருக்கும் 'சாவ்தான்' என்ற நிறுவனமே. தமிழ்பெண்களை மீட்கும் திட்டத்தற்கு பம்பாய் நகர போலீஸ் கமிஷனரின் உதவியைப் பெற்றதும் சாவ்தான் தான்!

விபச்சாரத் தொழிலில் இந்தியாவிலேயே முதலிடம் வகிப்பது பம்பாய்; இலட்சக்கணக்கான பெண்கள் ஈடுபடுத்தப்பட்டு கோடிக்கணக்கில் பணம் புரளும் தொழில் இது; அப்படியானால், பம்பாய் போலீஸ் கமிஷனருக்கு மாதம் ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய் மாமூல் போகும் என கணக்கிட்டுக் கொள்ளலாம்; அந்த கமிஷனரின் உதவியையே சாவ்தான் நிறுவனம் பெற முடிந்ததென்றால் அதற்குக் காரணம் அதற்கு மக்களிடையே இருக்கும் செல்வாக்குதான். அதுடன் தமிழ்பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த கிராமத்தைச் சுற்றி வாழும் தமிழ் இளைஞர்களின் உதவியையும் சாவ்தான் நிறுவனம் திரட்டியிருந்தது. நிலவறைகளிலும், குதிர்களிலும், சுரங்கப் பாதைகளிலும் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஆயிரக் கணக்கான பெண்களை சாவ்தான் நிறுவனம் மீட்டது.

அவ்வாறு மீட்கப்பட்ட பெண்களை அழைத்துச் சென்று மறுவாழ்வு கொடுக்குமாறு மட்டும் தான் சாவ்தான் நிறுவனம் தமிழக அரசைக் கோரியிருக்கிறது. அந்த அழைப்பின் பேரில் சென்று மீட்கப்பட்ட ஏறத்தாழ 1000 பெண்களை அழைத்து வந்த வேலையைத் தான் தமிழக போலீஸ் செய்தது. உண்மை இப்படியிருக்க தமிழக போலீசின் சாதனை என்று கருணாநிதி மெச்சுவது இமாலயப் புரட்டல்லவா? பார்த்தீனியம் போல விபச்சாரம் பெருகுவதற்கு ஒரு முக்கிய காரணம் போலீஸ் தான். அப்படியிருக்க விபச்சாரத்திலிருந்து பெண்களை போலீஸ் மீட்டது என்று கருணாநிதி கூறுவது பித்தலாட்டத்திலும் பித்தலாட்டமல்லவா?

மீட்கப்பட்ட விபச்சாரிகள்; பறிக்கப்பட்ட வாழ்க்கை கிடைக்குமா?



படிப்பகம்

www.padippakam.com

பம்பாய் - பாண்டுப் ஏரியாவிலுள்ள 'சோனாப்பூர்' என்ற ஒரு கிராமத்து விபச்சார விடுதியிலிருந்து மீட்கப்பட்டவர்கள் தான் இந்த 1000 தமிழ்நாட்டுப் பெண்களும் ஏராளமான பிற மாநிலப் பெண்களும் அங்கே இருந்திருக்கிறார்கள். பம்பாயைச் சுற்றியுள்ள ஒரு கிராமத்தில் மட்டும் இவ்வளவு பெண்கள் என்றால் பம்பாய் மற்றும் புறநகர்ப் பகுதி ஒட்டு மொத்தமும் சேர்ந்து எத்தனை இலட்சம் பெண்கள் இந்த சித்தரவதை கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள் என்று கணக்கிட்டுக் கொள்ளலாம். அவர்களில் பத்தாயிரக் கணக்கானோர் தமிழ் பெண்ணாக இருக்க வாய்ப்புண்டு. அப்படியிருக்க அவர்களில் ஓர் ஆயிரம் பேரை தமிழ்நாட்டுக்கு கொண்டு வந்து விட்டு மகத்தான சமுதாய திருப்பம் என்று சவடால் அடிக்கிறார் கருணாநிதி.

பத்தாயிரக்கணக்கான தமிழ் பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடக் காரணம் என்ன? தமிழ்நாட்டில் உழைத்து கௌரவமாக வாழ முடியாத நிலையில் வேறு வழியின்றி விபச்சாரத்திற்கு தள்ளப்பட்டதுதானே காரணம். 27 ஆண்டுகாலமாக நடந்து வரும் திராவிடக் கட்சிகளின் ஆட்சிதானே இதற்குக் காரணம்? நமது தமிழ்ச் சகோதரிகளை விபச்சாரத்திற்கு தள்ளிய குற்றவாளிகள் கருணாநிதியும் எம்.ஜி.யாரும் தானே! இது தான் திராவிட பாரம்பரியம் போலும்! ஆனால் தமிழ்ப் பெண்களை மீட்டெடுத்தது ஓர் ஆரியரே! (கழகங்களின் கண்ணோட்டத்தில்)

மீட்கப்பட்டு சிறப்பு ரயிலில் கொண்டு வரப்பட்ட தமிழ்ப்பெண்களை சமூக நலத் துறை அமைச்சர் சுப்புலட்சுமி வரவேற்றாராம்! பல்லிளிக்க போட்டோ எடுத்தவுடன், பத்திரிக்கைகளில் செய்திவர உறுதிப்படுத்திக் கொண்டுவிட்டு அவர் சென்று விட்டார். அவ்வளவுதான். வேறு ஒன்றும் செய்யவில்லை. எல்லாவற்றைக் காட்டிலும் பெண்களுக்கு மிகவும் அவமானகரமானது - சித்திரவதையானது அவர்கள் விபச்சாரத்திற்கு ஆளாக்கப்படுவது தான். இந்த விசயத்திலும் கூட விளம்பரம் தேடிக் கொள்ளும் சுப்புலட்சுமிகள் 'அக்கா'க்களை (10,15 பெண்களை அடக்கி விபச்சாரத் தொழில் நடத்தும் பெண்கள்) விட கொடியவர்களே!

மீட்கப்பட்ட அப்பெண்கள் கருணாநிதி அரசால் எவ்வாறு நடத்தப்பட்டனர் என்று ஜூனியர் விகடனே அம்பலப்படுத்தியது. சென்னை அருகில் புழல் என்ற ஊரிலுள்ள அரசு இல்லத்தில் ஏதோ மாட்டுக் கொட்டகையில் அடைப்பதைப் போல அவர்களைத் தங்க வைத்தனர். அங்கு வந்து ஏறத்தாழ ஒருநாள் கழிந்தும் கூட அவர்களுக்கு உணவு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. அதன் பிறகு தரப்பட்ட சாப்பாட்டில் புழுக்கள் நெளிந்தன. நோய்வாய்ப்பட்ட பெண்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்காததால் அவர்களின் நிலைமை மோசமாயிற்று. மீட்கப்பட்ட அப்பெண்களை எவ்வாறு நடத்துவது என்று அதிகாரிகளுக்கு தெளிவான உத்திரவு ஏதும் தரப்படவில்லை. காரணம், ஜூன் 1,2,3 தேதிகளில் பிறந்த நாள் விழாவில் கருணாநிதி மூழ்கித் திளைத்ததுதான்! ஆனால், ஜூன் 2ந் தேதியன்று பத்திரிக்கைகளில் இப்பெண்களை மீட்டது பற்றி வெட்கமின்றி விளம்பரப்படுத்திக் கொண்டார். கருணாநிதி.

இதுவரை அவர்கள் மறுவாழ்விற்கு எவ்வித திட்டத்தையும் மேற்கொள்ளவில்லை கருணாநிதி அரசு. அவரவர் மாவட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்ட இப்பெண்களை அதிகாரிகள் சரிவர நடத்தவில்லை. ஒவ்வொரு துறை அதிகாரிகளும் அடுத்தவர் மீது பொறுப்பு - பழியைப் போட்டு விட்டு ஒதுங்கிக் கொண்டனர். முறையான உணவு, மருத்துவ வசதி என்று செய்யாமல் காத்து கிடக்க வைத்து இறுதியாக வீட்டில் கொண்டு போய் விட்டுள்ளனர். இதனால் விரக்தியுற்ற பெண்கள் இதைவிட பம்பாய் வாழ்க்கையே மேல்; மீண்டும் திரும்பிப் போய் விடலாம் என்று வெளிப்படையாகவே சொல்லியுள்ளனர்.

சொந்த ஊரில் அவர்களின் வாழ்க்கை எப்படி இருக்கும்? ஊரில் உள்ளவர்கள் எல்லாம் இவர்களை கீழ்த்தரமாகவும் பரிதாபகரமாகவும் பார்த்து, கேவலமாக நடத்துவார்கள். உள்ளவருக்கே வேலை இல்லாத நிலையில் இவர்கள் பாடு இன்னும் திண்டாட்டமாக இருக்கும். இந்த நிலையில் பெற்றோர்கள், உறவினர்கள் கூட இவர்களை சுமையாக கருதி நடத்துவார்கள். இதனால் வெறுப்பின் எல்லைக்கு தள்ளப்பட்டு 'பம்பாய் வாழ்க்கையே மேல்' என்ற எண்ணத்திற்கு ஆளாகி பலர் பம்பாய்க்கே திரும்பி போய் விடலாம். சிலர் கிராமத்திலேயே விபச்சாரம் செய்ய தள்ளப்படலாம்.

முன்பொரு தடவை கொத்தடிமைகளை மீட்டு வந்து அவர்களின் வாழ்விற்கு எவ்வித மாற்றுத் திட்டமும் ஏற்பாடும் செய்யாத நிலையில் பட்டினி கிடந்து சாவதை விட கொத்தடிமைகளாக இருந்து வாழ்வதே மேல் என்று அவர்கள் மீண்டும் விரும்பிப் போய் கொத்தடிமைகளாக சேர்ந்துவிட்டனர். அதைப் போலத்தான் இந்தப் பெண்களின் கதியும் ஆகும். மொத்தத்தில் வோட்டுப் பொறுக்கும் அரசியல் வேசித்தனத்தில் அடுத்தவர்களை விட கவர்ச்சியாகத் தெரிய கருணாநிதி செய்து கொண்ட ஒரு ஒப்பனை தான் தமிழ்ப் பெண்கள் மீட்டெடுப்பு நாடகமாகும்!

● சுப்பு.



## கருணாநிதியின் விபச்சாரக் கொள்கை!

இந்தியாவிலேயே முதன்முறையாக சிவப்பு விளக்குப் பகுதியிலிருந்து தமிழ்ச் சகோதரிகளை மீட்டதாகப் பெருமைப்பட்டுக் கொள்கிறார் கருணாநிதி. எந்தக் கருணாநிதி?

விபச்சாரியிடம் சென்றுவிட்டு, பின் நீ நடந்து கொண்ட விதம் சரியில்லை; எனவே பணத்தை திருப்பித் தா என கழுத்தில் துண்டைப் போட்டு வசூலிக்கப் போன அந்தக் கருணாநிதி தான்! (பார்க்க: கண்ணதாசன் எழுதிய 'வனவாசம்').

'நான் முற்றும் துறந்த முனிவனுமல்ல; பானுமதி படிதாண்டா பத்தினியுமல்ல' என பகிரங்கமாக மேடையில் அறிவித்த அண்ணாவின் அன்புத் தம்பியான அந்தக் கருணாநிதி தான்!

'காசு கொடுக்கிறேன்; முக்கால் உடம்பு, முழு உடம்பு தெரிகிற மாதிரி போஸ் கொடு' என தமிழ்நாட்டுச் சகோதரிகளிடம் பேரம் பேசி ஆபாசப்படம் எடுத்து 'குங்குமம்', 'வண்ணத்திரை'களின் அட்டைகளில் போட்டு ஆஸ்தி சேர்க்கும் அதே கருணாநிதி தான்!

மலத்தை மொய்க்கின்ற ஈக்கள் மாதிரி கருணாநிதியைச் சுற்றியுள்ள பிழைப்புவாத கூட்டம் வேண்டுமானால் சமுதாயப் புரட்சி, சரித்திர சாதனை என துதிப்பாடலாம்; கருணாநிதியையும் கழகத்தையும் பற்றி புரிந்து கொண்டுள்ள தமிழக மக்கள் இந்த விளம்பர பம்மாத்தைக் கண்டு காரித் துப்பவே செய்கிறார்கள். காரணம் இருக்கிறது.

விபச்சாரத் தொழிலில் பம்பாய்க்கு அடுத்தபடி இந்தியாவிலேயே இரண்டாவது இடம் வகிப்பது தமிழ்நாட்டில் உள்ள சேலம் நகரமாகும். இரவு நேரங்களில் சேலத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில், இரட்டை மாட்டு வண்டியில் ஒரு ஆணும் பெண்ணும் ஆபாச சினிமா பாடல்களுக்கேற்ப ஆடவும் உடலுறவுக் காட்சியை அப்படியே நடித்துக் காட்டவும் அந்த வண்டி ஊருக்குள் பவனி வருமாம். அதிகாரிகள், போலீசுகள், வோட்டுப் பொறுக்கிக் கட்சித் தலைவர்களின் ஆசியோடும் பாதுகாப்போடும் தான் இவை அனைத்தும் நடைபெற்று வருகின்றன.

தரகுப் பெரு முதலாளிகளின் மில்களால், புதிய ஜவுளிக் கொள்கையால் கைத்தறி நெசவுத் தொழில் வேகமாக செத்து வருகிறது; இதனால் வேலையிழந்து பட்டினிச் சாவுக்குத் தள்ளப்படும் கைத்தறி நெசவாளர் வீட்டு பெண்கள் தான் பெரும்பாலும் சேலத்தின் விபச்சாரச் சந்தைக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள். சேலத்தில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் விபச்சாரத் தொழில் போலீஸ், கிரிமினல் கும்பல்கள், வோட்டுப் பொறுக்கிகளின் கூட்டோடு நாளும் பெருகி வருகின்றது; இன்னும் பெண்களைக் கடத்திச் சென்று வெளிமாநில விபச்சாரச் சந்தைகளில் விற்கும் கும்பல்களும் தமிழ்நாட்டில் தடையின்றி செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில், தமிழ்ச் சகோதரிகளை விபச்சாரத் தொழிலில் இன்று மீட்க முடியாத போலீஸ் மந்திரி கருணாநிதி, எங்கோ பம்பாய்க்கு அருகிலுள்ள ஒரு கிராமத்திலிருந்து தமிழ்ச் சகோதரிகளை மீட்டு வந்து விட்டதாக விளம்பரப்படுத்திக் கொள்வது எவ்வளவு பெரிய அயோக்கியத்தனம்!

படிப்பகம்

www.padippakam.com

# பி.பி.சி. நிருபரை கடத்திய ஜனதாதள அரசின் ஜனநாயக வேடம் கலைந்தது!



இந்திய அரசின் ஜனநாயகப் பாசாங்குகளை அம்பலப்படுத்தும் சம்பவம் ஒன்று காஷ்மீரில் நடந்துள்ளது. பிரிட்டிஷ் ஒலிபரப்பு நிறுவனம் ராய்ட்டர் செய்தி நிறுவனம் கல்கத்தாவில் இருந்து வரும் தி டெலிகிரா∴ப், பம்பாயில் இருந்துவரும் தி டெய்லி ஆகியவற்றின் காஷ்மீர் நிருபர் யூசுப் ஜமீல். கடந்த ஜூன் 2-ந் தேதி காலை ஏழு மணிக்கு அவரது சிரீநகர் வீடு அலுவலகத்தில் இருந்து இந்திய இராணுவம் கடத்திக் கொண்டு போய்விட்டது.

உடனே திரண்ட பத்திரிக்கையாளர்கள் யூசுப் ஜமீல் சட்டவிரோதமாகக் கைது செய்யப்பட்டதையும்; பத்திரிக்கையாளர்கள் துன்புறுத்தப்படுவதையும், அறிவிக்கப்படாத பத்திரிக்கைத் தணிக்கையையும் எதிர்த்து ஊர்வலம் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அன்றே புதுடில்லி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். "யூசுப் ஜமீல் மீது புகார் எதுவும் கிடையாது. ஆகவே இராணுவமோ போலீசோ அவரைக் கைது செய்யவே இல்லை. இராணுவம் போலீசுக்கு உதவுவதற்காகத்தான் உள்ளது; எனவே அது கைது செய்யவில்லை. இராணுவ உடுப்பிலே வந்த பயங்கரவாதிகள் தான் கடத்திக் கொண்டு போய் விட்டார்கள். காஷ்மீர் முழுவதும் பொது எச்சரிக்கை அறிவித்து, கேந்திரமான பகுதிகளைச் சுற்றிவளைத்து வீடு வீடாகத் தேடுகிறோம்" என்று உச்ச நீதிமன்றததிலேயே புளுகினார் அரசு வக்கீல். சிரீநகரிலும் இதேபோல ஒரு அதிகார பூர்வ அரசுக் குறிப்பு வெளியிடப்பட்டது.

ஆனால் நடந்தது இதுதான். சிரீநகர், குரு, கன்னாபால் ஆகிய இராணுவ முகாம்களுக்கு இழுத்துப் போகப்பட்ட யூசுப் ஜமீல், கைகளையும், கண்களையும் கட்டிப்போட்டு இராணுவ அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டார். பாகிஸ்தான் எல்லையில் பிடிபட்ட ஒரு உளவாளி ஜமீலின் பெயரைச் சொன்னதாகவும், பாகிஸ்தானுக்குப் போய் வரும் ஜமீலின் பத்திரிக்கை நண்பர் ஜ∴பர் மேரா பற்றியும் விசாரித்தனர். 29 மணி நேரத்துக்குப் பிறகு சிரீநகர் திரும்பிய யூசுப் ஜமீல் இதைப் பத்திரிக்கையாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

"தவறான தகவல் அடிப்படையில, தவறான அடையாளம் வைத்து யூசுப் ஜமீலை இராணுவத்தினர் கைது செய்து விட்டனர். உண்மை அறிந்ததும் விடுவித்தனர்" என்று மேலும் புளுகினார் மத்திய போலீசு துணை மந்திரி. நீதிமன்ற விசாரணை நடத்தி தவறு செய்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்போம் என்றார். ஐ.நா. சாசனத்தில் கையொப்பமிட்டுள்ள படி சிவிலியன்களுக்கு, குறிப்பாக பத்திரிக்கையாளர்களுக்கு எதிராக இராணுவத்தை ஏவியதே தவறாகும். எனவேதான், உச்ச நீதிமன்றத்தில் அரசு வக்கீல் இராணுவத்தின் பங்கை மறுத்தார். ஆனால் மத்திய போலீசு செயலாளர், "காஷ்மீரில் மட்டும் தேடவும், பறிமுதல் செய்யவும், கைது செய்யவும் இராணுவத்துக்கு சிறப்பு அதிகாரம் வழங்கப் பட்டிருக்கிறது" என்று ஒப்புக் கொண்டுள்ளார்.

"யூசுப் ஜமீல், பயங்கரவாதிகளால் கடத்தப்பட்டுள்ளார்; அவரைத் தேடும் பணி தீவிரமாக நடக்கிறது" என்று வானொலி, வானொளி, இராணுவ - போலீசு செய்தி சாதனங்களில் இந்தத் தகவல்கள் பறந்த போதும் அவரைப் பிடித்து வைத்திருந்த இராணுவம் மூச்சுவிடவில்லை. பத்திரிக்கையாளர்கள் துணிச்சலோடு போராடியிராவிட்டால், உச்ச நீதி மன்றம் வரை போய் அம்பலப்படுத்தியிராவிட்டால் - காஷ்மீர் எல்லையில் ஊடுருவ முயன்ற பாக். உளவாளி சுட்டுக் கொல்லப்பட்டார்; போலீசுடன் நடந்த மோதலில் பயங்கர்வாதி சாவு என்கிற பெயரில் ஜமீலின் பிணம் கூடக் கிடைத்திருக்காது - மரணப் பட்டியலில் அவர் பெயர் வந்திருக்கும்.

# சட்டங்களும் சவடால்களும்

பெரும் ஆர்ப்பாட்டம், ஆரவாரத்துக்கிடையே இரண்டு அரசியல் சட்டத் திருத்தங்களை இந்தமாதம் நிறைவேற்றியிருக்கிறது ஜனதா தளம் - தேசிய முன்னணி அரசு. ஒன்று தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்கள் கமிசனுக்கு அரசியல் சட்டத் தகுதி வழங்குவது. மற்றொன்று நிலச்சீர்திருத்தங்களை அரசியல் நிர்ணய சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்ப்பது.

இந்த இரு திருத்தங்களுக்கும் நாடாளுமன்றத்தில் எதிர்ப்பே கிடையாது. சர்வகட்சியினரும் வரவேற்று ஆதரித்து நிறைவேற்றியதில் பங்கு - உரிமை பாராட்டிக் கொண்டன. சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பலவீனமான ஏழை - எளிய மக்களின் முன்னேற்றத்துக்காக சரித்திர முக்கியத்துமுடைய சாதனை படைத்து விட்டதாக ஜனதாதள அரசு பீற்றிக் கொள்கிறது.

கடந்த காலத்தில் பல்வேறு கட்சிகளின் கீழிருந்த அரசுகள் இந்த மாதிரியான சட்டங்களை அமுலாக்கிய அளவு, இப்போதும் இந்த சட்டத் திருந்தங்களை நிறைவேற்றுவதில் அவர்கள் காட்டிய அக்கறையும் நோக்கங்களுமே அனைத்துக் கட்சிகளின் யோக்கிதைகளை அம்பலப்படுத்தி விட்டன. தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்களுக்கு எதிரான கிரிமினல் குற்றங்கள் பன்மடங்கு அதிகரித்துக் கொண்டே போகின்றனவே தவிர, ஏற்கனவே உள்ள சட்டங்களால் குறையவே இல்லை. நிப்பிரபுக்களுடனும், அரசு காண்டிராக்டர்கள் - முதலாளிகளுடனும் கூட்டுச் சேர்ந்து கொண்டு அரசியல் தலைவர்களும் அதிகாரிகளுமே அச்சட்டங்களை முறியடித்து வருகிறார்கள். ஏற்கனவே உள்ள நிலச்சீர்திருத்தச் சட்டங்களின் படி பல லட்சம் ஏக்கர் உபரி நிலங்களைக் கையகப்படுத்தி விநியோகித்திருக்க முடியும். ஆனால் சட்ட ஓட்டைகள், விதிவிலக்குகளைக் காட்டியும், நாய் - பூனை மீது கூட சொத்துக்களை எழுதி வைத்தும் நிலமுதலைகள் தப்பித்துக் கொள்கின்றன. சில நூறு ஏக்கர் நிலங்களே மீட்கப்பட்டுள்ளன.

இப்போதும் இந்த ஓட்டுக் கட்சிகளுக்கு ஏழை - எளிய மக்கள் மீது எவ்வளவு கரிசனையுள்ளது பாருங்கள்! சபையின் மொத்த உறுப்பினர்களில் பாதிப் பேருக்கு மேல் வந்திருந்து, அதிலே மூன்றில் இரண்டு பங்கினர் வாக்களித்தால் தான் அரசியல் சட்டத்திருத்த மசோதா நிறைவேற முடியும். மசோதாக்கள் விவாதத்துக்கும், வாக்கெடுப்புக்கும் வந்த இரண்டு நாட்களிலும் போ∴பார்ஸ் பீரங்கி கோப்புகளைக் கேட்டு ரௌடித்தனம் செய்து சட்டத் திருத்தங்கள் நிறைவேறாமல் தடுத்து வந்தது காங்கிரசு. "இரு கரங்கூப்பிக் கெஞ்சுகிறேன், ஏழை எளிய மக்களுக்கான சட்டங்களை நிறைவேற்ற உதவுங்கள்!" என்று நாடகமாடினார் வி.பி.சிங். இதிலே உண்மையான அக்கறை இருந்தால் ஜனதாக் கட்சிகளும், போலிக் கம்யூனிஸ்டுக் கூட்டணிக் கட்சிகளும் முழு அளவில் சபைக்கு வந்திருந்தாலே போதும். நிறைவேற்றியிருக்க முடியும்.

தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள் கமிசனுக்கு அரசியல் சட்டத் தகுதி தருவதன் மூலம், அந்தக் கமிசனுக்குச் சில நிர்வாக அதிகாரங்கள் தரப்படும். கமிசன் தலைவருக்கு காபினட் மந்திரி தகுதியும், துணைத் தலைவருக்கு துணை மந்திரி தகுதியும் கிடைக்கும். தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு எதிரான கொடுமைகள் பற்றிய புகார்களை நேரடியாக விசாரித்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் தரப்படும். நிலச் சீர்திருத்தங்களை அரசியல் நிர்ணயச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்ப்பதன் மூலம், அவற்றின் மீது வழக்குப் போடமுடியாது. இதே போல தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்களிக்கும் சட்டத் திருத்தமும் கொண்டு வரப்போகிறார்கள்.

இந்தச் சட்டத்திருத்தங்கள் நிறைவேறிய அதே நாளில், நாடாளுமன்ற வாக்குறுதிகளைப் பரிசீலிக்கும் கமிட்டியின் 36-வது அறிக்கை வந்தது. "இந்திய அரசு அமைச்சகங்கள், மற்றும் பல்வேறு துறைகளுக்கும் திரும்பத் திரும்ப பலமுறை குறித்துரை செய்தும், சிபாரிசுகள், வழிகாட்டுதல்கள், தூண்டுதல்கள் செய்தும் அவர்கள் கொடுக்கும் வாக்குறுதிகளை அற்ப அளவும், ஆமைவேகத்திலுமே நிறைவேற்றுகிறார்கள். வாக்குறுதிகள் பரிசீலனைக் கமிட்டிக்குப் பொய்த் தகவல்கள் கொடுத்து ஏமாற்றுகிறார்கள். பலகேள்விகளுக்கும் நழுவிக் கொள்ளும் போக்கிலேயே பதில்கள் தருகிறார்கள். அவர்களே கொடுத்த வாக்குறுதிகளை அலட்சியப்படுத்தி விடுகிறார்கள்" சீர்திருத்தச் சட்டங்களின் யோக்கியதைகளை நிரூபிப்பதற்கு வேறு வாக்குமூலம் எதற்கு?

படிப்பகம்

www.padippakam.com

### மார்க்சிய - லெனினிய ஆசான்கள் மீது:

# தி.க.வின் வக்கிரம்!

'மார்க்சீயமா, பெரியாரியமா' என்ற ஒடுகாலிகளின் 'கேடயம்' வெளியீட்டுக்கு 'உண்மை' ஏடு பதில் வெளியிட்டு வருகிறது. இப்போது இந்த விவாதத்துக்குள்ளே புகுந்து அலசுவது எமது நோக்கமல்ல. 'கேடய'த்திற்குப் பதில் சொல்லும் சாக்கில் மார்க்சிய - லெனினிய ஆசான்களான மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் ஆகியோர் மீது அவதூறுகளை வாரி வீசியுள்ளது 'உண்மை'. (பார்க்க: மே 1-15, 1990 இதழ்). இவற்றைச் சந்திப்பதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

'கேடய'த்துக்கு அறிவு நாணயம் இல்லை என்று குற்றம் சாட்டியுள்ளது 'உண்மை'. பெரியாரது வர்க்கப் பின்னணிதான் அவரது கொள்கைக்கு அடிப்படை என்று தனது கட்டுரையின் இறுதியில் விளக்கம் கொடுத்த 'கேடயம்' (மார்க்சீயமா, பெரியாரியமா - பக்66) " அவர் (பெரியார்) மிகப் பெரிய பார்ப்பனரல்லாத தனவந்த குடும்பத்தில் பிறந்தார். மிகப்பெரிய தனவந்தராகவே இறுதிவரையில் வாழ்ந்தார்" என்று எழுதியுள்ளது.

பெரியாா தனவுநதராக வாழவில்லை. காசு பணம் சேர்த்தார்; ஆனால் இயக்கத்துக்காகச் சேர்த்தார். 'கேடயம்' குறிப்பிட விரும்புவதைப் போல அவர் ஆடம்பரமாக வாழவில்லை.

'கேடயம்' இவ்வாறு எழுதியதை வைத்து 'உண்மை' ஏடு அவதூறுகளில் இறங்கியுள்ளது. "பெரியார் தனவந்தராகவே இறுதி வரையில் வாழ்ந்தாரா? லெனின், ஏங்கல்ஸ் ஏழ்மையில் உழன்றார்களா?" என்று கேட்கிறது 'உண்மை'.

'கேடயம்' பெரியாரைப் பற்றி பொய்யை எழுதியுள்ளது. அதற்கு என்ன விளக்கம் கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுக்க வேண்டும் 'உண்மை'. மாறாக, வக்கிரங்கள் நிரம்பிய அவதூறுகளை வீசியுள்ளது. 'உண்மை'க்கு அறிவு நாணயம் உண்டா என்ற கேள்வியை இக்கட்டுரை மூலம் எழுப்புகிறோம்.

★ ☆ ★

● மார்க்ஸின் துணைவியார் ஜென்னி வீட்டில் கிறிஸ்துமஸ் மரம் போன்ற அலங்காரங்களுடன் குதூகலமாகப் பண்டிகை கொண்டாடினார். மதம் ஒரு அபின் என்று கூறிய மார்க்ஸ் தன் வீட்டிலேயே அதனைத் தடை செய்ய முடியவில்லை என்பது 'உண்மை'யின் விமரிசனம்.

ஜென்னி மற்றும் வீட்டில் இருந்த பெண்களான ஹெலன் டெமூத், லென் ஹென் போன்றவர்கள் சடங்குகள் இல்லாத விழாவாகத்தான் கிறிஸ்தும்ஸைக் கொண்டாடினார்கள். வறுமை இருந்தபோதும் ஆடம்பரமாக, குதூகலமாகக் கொண்டாடினார்கள் என்று பொருள்படும்படி 'உண்மை' எழுதியுள்ளது. குழந்தைகளுக்குச் சில புது உடைகள், பரிசுகள் மட்டுமே அவர்கள் வாங்க முடிந்தது என்று நினைவுக் குறிப்புகளில் ஓரிடத்தில் குறிப்பிடப்படுகிறது. இதுதவிர, குதூகலமாகக் கொண்டாடினார்கள் என்று சொல்வதற்கு வேறுஎந்தத் தடயங்களும் இல்லை

● வறுமையான நிலைமையிலும் மார்க்ஸ் குடிப்பதை, புகைபிடிப்பதை நிறுத்தவில்லை. இது அடுத்த அவதூறு. 'உண்மை'யின் நோக்கம் அவர் குடிகாரர் என்று சொல்ல வேண்டும் என்பதுதான். குடிப்பது வேறு, குடிகாரர் என்பது வேறு. இங்கிலாந்து, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து போன்ற குளிர் பிரதேச நாடுகளில் உடலைச் சூடுபடுத்தி வைத்துக் கொள்ள குடிப்பார்கள். அது போல மார்க்ஸ் குடித்தார். மார்க்ஸ் பகல்பூராவும் படித்துவிட்டு இரவு முழுவதும் கண் விழித்து 'மூலதனம்' நூலையும், பல்வேறு ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதினார். குடிகாரராக மார்க்ஸ் இருந்திருப்பாரானால் நிதான புத்தியோடு அவரால் ஒரு வரிகூட எழுதியிருக்க முடியாது.

● "ரொட்டித்துண்டு கிடைக்காத போதும் மார்க்ஸ் தன் பாலுணர்வுத் தேவைகளைச் சமூகப் பொறுப்பின்றி நிறைவு செய்து அடுக்கடுக்காகக் குழந்தைகளுக்குத் தந்தை ஆகிக் கொண்டிருக்கிறார்" என்று 'உண்மை' அவதூறு எழுதுகிறது.

மார்க்ஸ் - ஜென்னி உறவைக் கேவலப்படுத்துவதற்காக இவ்வளவு வக்கிரமாக எழுதுகிறது 'உண்மை'. 3, 5 பெண்டாட்டிகளை வைத்துக் கொண்டிருப்பது, விபச்சாரிகளின் வீடே கதியாகக் கிடப்பது, 70 வயதுக்குப் பிறகும் வேறு பெண்டாட்டிகள் உள்ள போதே புதிதாகத் திருமணம் செய்து கொள்வது - இது 'திராவிடப் பாரம்பரியம்' பேசுபவர்களின் வாழ்க்கை.

காமவெறியன் என்று 'உண்மை' சித்தரிக்கிறதே அந்த மார்க்ஸின் வாழ்க்கை பற்றி உண்மை விவரங்களைக் கொடுக்கட்டும். ஏழு ஆண்டுகள் பொறுத்திருந்த பிறகே மார்க்ஸ் - ஜென்னி திருமணம் நிறைவேறியது. ஜென்னி இறக்கும்வரை மார்க்ஸ் அவர் மீது கொண்டிருந்த அன்பு அளவற்றது; இயல்பானது. அப்படிப்பட்ட குடும்ப வாழ்க்கையில் தான் குழந்தைகள் பெற்றார்கள்

● 'குடும்ப உறுப்பினர்கள் ஏற்கெனவே இருந்த சமூகரீதியான அமைப்புக்குள்ளேயே (மார்க்சுக்கு) துணை புரிந்தார்கள்' என்று 'உண்மை' எழுதுகிறது. இதிலும் எவ்வளவு வக்கிரம்!

அவர் டாக்டர் பட்டம் பெற்றவர். பல்கலைக்கழகங்களில் பெரிய பேராசிரியராக, ஆய்வாளராக வேலை செய்து வாழ்ந்திருக்க முடியும். பெரிய பணக்கார வாழ்வு வாழ்ந்திருக்க முடியும். ஆனால் அவர் இயக்கத்தை முதன்மையாகக் கருதினார்; அதைக் கட்டுவதற்குப் பெரிதும் உழைத்தார்; அந்த நேரம்போக மீதம் பொருளாதார, சமூக ஆய்வில் நேரத்தைச் செலவிட்டார்; அதுவும் போக மீதம்தான் பொருள் ஈட்டுவதற்காகப் பத்திரிக்கைகளுக்கு எழுதினார். பத்திரிக்கைகளின் தராதரம், விஷயங்களை ஏற்கும் நேர்மை ஆகியவற்றைச் சோதித்த பிறகுதான் வெளியிடக் கொடுத்தார். அதுவும் இயக்க அவசியத்தைக் கருத்தில் கொண்டுதான் கட்டுரைகள் எழுதினார்.

மற்றவர்களில் ஏங்கெல்ஸ்தான் அதிகம் உதவினார். அவரும் பரம்பரைச் சொத்துக்களை விட்டுவிட்டு ஓடிவரவே விரும்பினார். தன் சொத்து இருந்தால் மார்க்சுக்கு நிரந்தரமாக உதவலாமே என்று அவரும் சிந்தித்ததில்லை; மார்க்ஸ் அவ்வாறு கோரவும் இல்லை. எனவே 'உண்மை' சொல்வது போன்ற உதவிகளை அவர் பெற்றதில்லை.

● "ஏங்கெல்ஸ் தனது பணக்கார வாழ்வு நிலையிலிருந்து கொண்டே வர்க்கப் போராட்டத் தலைவராக விளங்கியது தெரிகிறது. இங்கிலாந்தில் மான்செஸ்டரில் 'முதலாளி' ஏங்கெல்ஸ் தமது சகமுதலாளிகளின் வியாபார வாழ்க்கையில் பங்கேற்றது மட்டுமல்லாமல் அவர்களின் உல்லாச களியாட்டங்களில், விருந்துகளில், கேளிக்கைகளில் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்..." - இது ஏங்கெல்ஸ் பற்றிய 'உண்மை'யின் அவதூறு. ஏங்கெல்ஸின் இளமைக் காலத்தையும், 1845க்குப் பிறகு மார்க்ஸுடன் சேர்ந்து வாழ ஆரம்பித்த ஏங்கெல்ஸ் பாட்டாளி வர்க்க விடுதலை லட்சியத்துக்காக வாழ்க்கையை அர்ப்பணித்த கட்டத்தையும் ஒன்றாகக் குழப்புகிறது 'உண்மை'.

ஏங்கெல்ஸின் வாழ்க்கைப் பின்னணி முதலாளி வர்க்கப் பின்னணியாகும். திராவிட இயக்கத் தலைவர்களைப் போல அவர் இரட்டை வாழ்க்கை வாழவில்லை; இரட்டைவேடம் போடவில்லை. சொந்த வாழ்க்கை வேறு, சமூக வாழ்க்கை வேறாக அவர் வாழவில்லை. இளமைப் பருவத்தில் முதலாளித்துவ சாகசங்களில் ஈடுபட்டு வந்தார். ஆனால் அதிலிருந்து வெகுவேகமாக வெளியே வந்தார். தொழிலாளர்கள் படும் துயரங்கள், முதலாளிகளின் சுரண்டல் - ஒடுக்குமுறையைப் பார்த்து அனுபவித்த அவர் அதிலிருந்து வெளிவர முதலிலிருந்தே போராடினார். இத்தகைய சுய பரிசீலனைதான் அவரை சிறந்த கம்யூனிஸ்ட்டாக்கியது. அவரே தன் 'இளமைக்கால கடிதங்கள்' ஒன்றில் எழுதினார்

"ஒரு கம்யூனிஸ்டாகவும் இருந்து கொண்டு வெளித்தோற்றத்தில் ஒரு முதலாளியாக நடந்து கொள்வது; எதுவுமே எழுதாமல் அலைந்து திரிந்து வியாபாரம் செய்யும் ஒரு மிருகமாக இருப்பது; ஆனால் தீவிரக் கம்யூனிஸ்டு பிரச்சாரம் செய்வது; அதே சமயம் அலைந்து திரிந்து வியாபாரம் செய்வதோடு உற்பத்தியையும் கவனிப்பது நடக்குமா. நடக்கவே நடக்காது. சுருங்கக்கூறினால், நான் ஈஸ்டரின் போது வெளியேற வேண்டும். இதற்கும் மேலாக இந்த உப்புச்சப்பில்லாத, முழுக்க முழுக்க கிறித்தவ மதத்தில் தீவிர ஈடுபாடு கொண்டுள்ள பிரஷ்யக் குடும்பத்துடன் நடத்தும் வாழ்க்கையை இனி பொறுப்பதில்லை. தொடர்ந்தால் முடிவில் நானும் ஒரு ஜெர்மானிய அற்பவாதியாகி (ஃபிலிஸ்டைன்) கம்யூனிசத்தில் அற்

படிப்பகம்

www.padippakam.com

பவாதத்தை அறிமுகப்படுத்த ஆரம்பிப்பேன்...''

இது ஏங்கெல்ஸ் செய்த சுய பரிசீலனை. என்றும் முதலாளியாக இருப்பதற்காக இதை அவர் செய்யவில்லை; அதிலிருந்து வெளியேறிவிட வேண்டும். ஒரு கம்யூனிஸ்டாக வாழவேண்டும் என்பதற்காகச் சுயபரிசீலனை செய்கிறார். பெரியார் சொத்துக்கு அடித்துக் கொள்ளும் திராவிடர் கழகத் தலைவர்களுக்கு இதெல்லாம் எங்கே தெரியப் போகிறது?

இது மட்டுமல்ல. 'ஏங்கெல்சின் பொழுதுபோக்குகளை. களியாட்டங்களைப் பற்றி மார்க்ஸ் கண்டித்தது கிடையாது; ஜென்னி கிறிஸ்துமஸ் கொண்டாடியது பற்றி அவர் தடைபோட்டது கிடையாது' என்று அடுக்கடுக்காக மார்க்சைக் குற்றம் சாட்டுகிறது 'உண்மை'.

தொழிலாளியும் படிப்பாளியுமான பெபல் என்ற தோழரைத் தவிர மற்றவர்களிடத்தில் அதிகம் விமரிசனங்களை மார்க்ஸ் வைத்தார் என்று நினைவுக்குறிப்புக்களில் எழுதுகிறார்கள். ஏங்கெல்ஸ் குதிரை வீரசாகச விளையாட்டுக்களில் கலந்துகொண்ட போது விமரிசனம் வைத்திருக்கிறார். தவிர, குடும்ப வாழ்க்கையை எப்படி நடத்துவது என்று மார்க்சுக்கும் ஜென்னிக்கும் பலமுறை விவாதங்கள், சண்டைகள் வந்திருக்கின்றன. பிரபுத்துவக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து. எளிய மார்க்சை உயிருக்குயிராய்க் காதலித்து. அந்த கடினமான வாழ்க்கைக்கும் லட்சியத்துக்கும் ஏற்ப ஜென்னி தன்னை வார்த்தெடுத்துக் கொண்டதற்கு மார்க்சின் விமரிசனங்களும், ஆலோசனைகளும், அன்பைப் பொழிந்த கடிதங்களுமே காரணமாக இருந்தன. அதேபோல மார்க்சின் தோழமை நட்பு பெருமளவு ஏங்கெல்சை வார்ப்பு செய்தது என்பதும் மறக்க முடியாதது.

●அடுத்து. லெனினைப் பற்றி எழுதுகிறது 'உண்மை'. ''(சைபீரியாவில்) லெனின் தனியான ஒரு வீட்டில் வாழ்ந்தார். பனிச்சறுக்கு, வேட்டையாடல் போன்ற களியாட்டங்களில் லெனின் தமது ஓய்வு நேரத்தைக் கழித்தார். தேவைப்படும் புத்தகங்களை வரவழைத்துப் படித்தார். அவருடைய நண்பர்கள் அவரைச் சந்திக்க முடிந்தது...''

''... உண்மையில் இன்று தமிழ்நாட்டில் பெரும்பாலான கிராமங்களில் உள்ள 'நிலப்பிரபு'க்கள் வாழமுடியாத உயர் வாழ்க்கையைத்தான் லெனின் சைபீரியாவில் 'தண்டனைக் காலத்தில்' வாழ்ந்தார்...''

நாடு கடத்தப்படும் தண்டனை, சைபீரிய வாழ்க்கை ஜாலியான வாழ்க்கை; லெனின் காதல் செய்து. பின்னால் திருமணமும் செய்து கொண்டார் என்பது போல 'உண்மை' எழுதுகிறது. அறிவு நேர்மை, நாணயம் இருந்தால் 'லெனின் சைபீரியாவில்....' என்ற நூலை முழுக்கப் படித்து 'உண்மை' விமரிசிக்க வேண்டும். அந்த நூலிலிருந்து எல்லா மேற்கோள்களையும் காட்ட முடியாது. ஆனால் அவற்றை அடிப்படையாக வைத்து நாம் பதில் சொல்ல முடியும்.

> 'கேடயம் ஏடு பெரியாரைப் பற்றி பொய்யை எழுதியுள்ளது. அதற்கு பதில் சொல்லும் சாக்கில் தி.க.வின் உண்மை ஏடு மார்க்சிய -லெனினிய ஆசான்களின் மீது அவதூறை இறைத்துள்ளது.

வேட்டை, பனிச்சறுக்கு விளையாட்டுக்கள் சைபீரிய மக்களே விளையாடுவது தான். லெனின் வேட்டைக்குச் சென்று பறவை. விலங்கு கொண்டு வந்தது குறைவுதான். அதை முன்வைத்து இயற்கையை ரசித்துச் சுற்றிவிட்டு வருவதற்கே அவர் விரும்பினார். இவை தமிழ்நாட்டிலிருந்து நிறைய செலவழித்து சிம்லா சென்று பனிச்சறுக்கு ஆடுவது. ஊட்டி சென்று கோல்ஃப் ஆடுவது போன்ற பணக்கார, ஆடம்பர. கேளிக்கை ஆட்டங்கள் அல்ல.

நாடு கடத்தப்படுவது என்றால் என்ன என்பதே 'உண்மை'க்குத் தெரியாது. அரசின் ரகசிய கண்காணிப்பில்தான் அவர்கள் வாழமுடியும். ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் போய் எந்த நாளில், எந்த நேரத்துக்குள் திரும்ப வேண்டும் என்பதை அதிகாரிகள்தான் தீர்மானிப்பார்கள். 'சைபீரியாவில்...' நூலில் லெனினது கடிதங்களை அக்கறையோடு ஆழமாகப் படிப்பவர்களுக்கு மட்டுமே இந்த உண்மை புலப்படும். கருத்துக்குருட்டு 'உண்மை'க்குப் புலப்படாது. எதற்காக நாடு கடத்தினார்கள்? மக்களை நேசித்து. மக்களோடு வாழ்ந்து புரட்சி நடத்தும் இயக்கத்தவரை அவர்களிடமிருந்து பிரித்து தூரப்பகுதிகளில் புரட்சியாளர்களை வாழ வைத்தார்கள். அது சிறை போன்றது. உற்சாகத்தை உறிஞ்சிக் கொள்ளும். சிந்தனையை வரண்டு போகச் செய்யும்; பித்துப் பிடிக்கச் செய்யும்; தற்கொலைக்கு விரட்டும். லெனினது தோழர்கள் பலருக்கு இது நேர்ந்தது. இதனை மீற. இதன் மீது வெற்றி கொள்ள அசாத்திய பயிற்சி வேண்டும். அதனைத்தான் லெனின் செய்தார். வெறுமையிலிருந்து விடுபடத்தான் வேட்டையாடினார்; பனிச்சறுக்கு ஆடினார்; எங்கோ தொலைவிலிருந்த சில விவசாயக் குடும்பங்களைச் சந்தித்து வந்தார்; குழந்தைகளோடு விளையாடினார்; பத்திரிக்கை கொண்டு வரும் தோழர்களின் படகுகள் வரும் வழியை உன்னிப்பாகக் கவனித்து ஓடிவந்து பெற்றுக் கொள்ளும் அளவு பழகிக் கொண்டார்

இவற்றுக்கிடையே விளையாட்டுக்கள் ஆடி ஓய்வு எடுத்ததைத்தான் ஆடம்பரம், களியாட்டம் என்கிறது 'உண்மை'. அடுத்து ஒரு படி மேலே போய் திராவிட பாரம்பரிய முத்திரையோடு. லெனின் குருப்ஸ்கயாவை வரவழைத்து ஜாலியாக இருந்தார் என்றும் சித்தரிக்கத் துணிகிறது கேடுகெட்ட ஆபாச 'உண்மை'. குருப்ஸ்கயா லெனினுக்குக் காதலி மட்டுமல்ல. சமூகம், அரசியல் நோக்கத்தில்தான் அவர்கள் காதலே பிறந்தது. அந்த அரசியல், கட்சி வேலைகள் தொடர்ந்து நடப்பதற்காகத்தான் முதன்மையாக அவர் கடுமையான சைபீரியாவிற்கு வரவழைக்கப்பட்டார். லெனினுக்குக் காரியதரிசியாக குருப்ஸ்கயா செயல்பட்டதும், கட்சிக்காக அரசியல் செய்தியாளராக நாடு முழுக்கச் சென்று வந்ததும் உண்மையான அரசியல்வாதிகளுக்குத் தெரியும். 'உண்மை' கருதுவது போல ஜாலி தேனிலவுக்காக அவர் இங்கு வரவழைக்கப்படவில்லை.

அரசியல் கைதிகள் அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற்றுத்தான் திருமணம் செய்ய முடியும். அதுவும் அவர்கள் சொல்லும் நாட்களுக்குள் முடிக்க வேண்டும். ''எந்த உரிமைகளும் இல்லாத மக்கள்தானே நாங்கள்?'' என்று தன் தாய்க்கு எழுதிய ஒரு கடிதத்தில் லெனின் குறிப்பிடுகிறார்.

★ ☆ ★

கடைந்தெடுத்த கம்யூனிச விரோதிகளான ரீடர்ஸ் டைஜஸ்ட் ஏடோ, ஆர்.எஸ்.எஸ். இந்துமத வெறி ஏடுகளோ தொடத் துணியாத அளவுக்கு 'உண்மை' அவதூறுகளைச் செய்திருக்கிறது. இப்படித் தனது வக்கிரமான சிந்தனைகளைப் பட்டியல் போட்டுக் காட்டிக் கொண்டே மறுபக்கம் ''மேற்சொன்ன தலைவர்களின் குறைகளாக 'உண்மை' கருதவில்லை. எந்த ஒரு தலைவரின் வாழ்வுநிலையை விட, அவருடைய உழைப்பின் சமூகப் பயன்கள் என்ன என்பதுதான் முக்கியமாகும்'' (அடிக்கோடு எம்முடையது) என்று சொல்லி நழுவுகிறது 'உண்மை'.

தி.மு.க., தி.க. பாணி மேடைப் பேச்சாளர்கள் இப்படித்தான் பேசுவார்கள். 'விலாவாரியாக' ஒருத்தரைப் பற்றி ஆபாசமாகக் கதை அளப்பார்கள். ''நான் அதிகம் அப்படிப் பேச விரும்பவில்லை. இவர் மோசமானவராக இருக்கலாம். அந்த அம்மாவைப் பற்றி தமிழ்ப் பண்பாடு மீறி கண்ணியக் குறைவாகப் பேச விரும்பவில்லை. நான் தப்பித்தவறிப் பேசக் கூடியவன்தான். ஆனால் என் தலைவர் மரியாதையை, கண்ணியத்தைக் காற்றில் விடக்கூடாதல்லவா?...'' என்ற பாணியில் தன்னடக்கத்தோடு பேசுவதுபோல பேசுவார்கள்.

இவை தன்னடக்கமல்ல. இவர்களின் நயவஞ்சகமான பேச்சுப்பாணி இதுதான். 'உண்மை' இந்தப் பாணியில்தான் மார்க்சீய ஆசான்களை அவதூறு செய்திருக்கிறது. செய்வதைச் செய்துவிட்டு அது என் நோக்கம் அல்ல என்கிறது. 'நீ யோக்கியமா' என்று யாராவது திருப்பிக் கேட்டுவிடப் போகிறார்களே என்று கிலிபிடித்துப் போன 'உண்மை' தலைவர்களின் வாழ்நிலையைப் பார்ப்பது முக்கியமல்ல என்று சொல்லிவிட்டது. அப்படியானால் மார்க்சீய ஆசான்களை 'உண்மை' ஆராய்ந்தது எதற்காக? கம்யூனிஸ்டு வாழ்க்கை முறையை அமைக்கின்ற அக்கறையோடு ஆசான்களின் வாழ்க்கையிலிருக்கும் குறைநிறைகளை 'உண்மை' அலசியதா? அல்ல; கம்யூனிஸ்டுகளைப் பற்றி, கம்யூனிசத்தைப் பற்றி அவதூறுகளைப் பரப்புவதுதான் அதன் நோக்கம்.

படிப்பகம்

www.padippakam.com

## கறம்பக்குடி 'லாக்அப்' கொலை

# மக்கள் ஆவேசம்! போலீசு ஓட்டம்!



புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கறம்பக்குடி ஒரு சிறு சந்தை நகரம். இங்குள்ள காவல் நிலையம் பல கிரிமினல் நடவடிக்கைகளின் கூடாரமாக நெடுங்காலமாக இருந்து வருகிறது. கடந்த மாதம் புதுப்பட்டியில் நடந்த கோயில் திருவிழாவிற்கு கொத்தல் கோட்டை கிராமத்தைச் சேர்ந்த செல்வராசு என்ற 25 வயது இளைஞன் வந்திருந்தார். புதுப்பட்டியில் ஒரு கடையில் செல்வராசுக்கும் கடைக்காரர்களுக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக, செல்வராசு கறம்பக்குடி போலீசிடம் ஒப்படைக்கப்பட்டார். கறம்பக்குடி போலீசு செல்வராசை மூன்று நாட்களாக சட்ட விரோதமாக காவலில் வைத்து சித்திரவதை செய்து அடித்து கொன்றது. 15.5.90 மாலை இக்கொலைச் சம்பவம் நடந்தது. உடனே கறம்பக்குடி போலீசார் பிணத்தை தூக்கி கொண்டு வந்து பெரியசாமி எனும் தனியார் மருத்துவரிடம் ஊசி போட்டு காப்பாற்றும்படி கேட்டார்கள். மருத்துவர் பெரியசாமி ''பிணத்துக்கு ஊசி போட்டு எனக்கு பழக்கமில்லை'' என்றதும், மாரடைப்பால் இறந்து விட்டதாக சான்றிதழ் தரும்படி கேட்டார்கள். பெரியசாமி, போலிச் சான்றிதழ் தர மறுத்து பிணத்தை எடுத்துப் போகும்படி கூறினார். ஆனால் பிணத்தை மருத்துவமனையிலேயே போட்டுவிட்டு போலீசார் போய்விட்டார்கள்.

மருத்துவமனையில் கூடிய மக்கள் இதனைக் கண்டு ஆத்திரமடைந்து பிணத்தை எடுத்துக்கொண்டு போலீஸ் நிலையத்திற்கு முன் போட்டு நியாயம் கேட்டனர். செய்தியறிந்த ஊர் மக்களும் பெருவாரியாக போலீஸ் நிலையம் முன் கூடி கோஷமெழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

துப்பாக்கிச் சூடு நடத்துவோம் என்று மிரட்டி கறம்பக்குடி போலீசு மக்களை தாக்கவே, வெகுண்டெழுந்த மக்கள் போலீசாரையும், போலீஸ் நிலையத்தையும் தாக்கத் தொடங்கினர். மக்களின் சினத்திற்கு முன் தாக்குப் பிடிக்க முடியாமல் போலீசார் அனைவரும் ஓடி ஒளிந்தனர். மக்களின் சினம் தணியவில்லை. போலீஸ் நிலையத்தில் உள்ள பொருட்களை - கோப்புகளை சாராய பேரல்களையும், போலீசாரின் வாகனங்களையும் அருகிலிருந்த குளத்திற்குள் வீசியெறிந்தனர். தகவலறிந்து வந்த ஆயுதப் படைப் பிரிவு போலீசாரும் உயர் போலீசு அதிகாரியும் கூட மக்கள் கோபாவேசங் கண்டு ஏதாவது, சிறு தாக்குதல் தொடுத்தாலும் பெரிய விளைவை சந்திக்க வேண்டிவரும் என அடங்கிப்போனார்கள்.

உண்மை நிலை இப்படியிருக்க போலீசோ,செல்வராசு காவல் நிலையத்தில் ஒப்படைக்கும் பொழுதே சாகும் தருவாயில் தான் இருந்தார் என புளுகியது. இதை அப்படியே அனைத்து நாளேடுகளும் வாந்தியெடுத்தன.

ஆனால், ஆர்.டி.ஓ. விசாரணையிலேயே, காவல் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டுருந்த ஒரு கைதி, இரண்டு நாளாக போலீசார் செல்வராசை அடித்து துன்புறுத்தியதையும், ஆணுறுப்பில் தாக்கி சித்திரவதை செய்து கொன்றதையும் தான் பார்த்தாக சாட்சி கூறியுள்ளார். இதுவல்லாமல் மருத்துவர் பெரியசாமி, வியாபாரிகள், ஊர்மக்கள் அனைவரும் போலீசாரால் செல்வராசு கொல்லப்பட்டதற்கான சாட்சியாக வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள்.

இருந்தும் போலீசார் யாருக்கும் உரிய தண்டனை கொடுக்கப்படவில்லை. மக்களின் கோபத்தை தணிக்க தற்காலிக வேலை நீக்கம், ஊர் மாற்றம் ஆகிய நடவடிக்கைகளே அரங்கேற்றப் பட்டள்ளன. அதேசமயம் போலீசின் கொலை வெறிக்கு எதிராக வெகுண்டெழுந்து நியாயம் கேட்ட மக்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எவரையும் எந்த நேரத்திலும் விசாரணை என்ற பெயரில் கைது செய்யலாம் என்ற நிலை நீடிக்கிறது.

எனவே, * கறம்பக்குடி காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டர்கள் மற்றும் போலீசார் மீது கொலை வழக்கு பதிவு செய்! கைது செய்து சிறையிலடை!

* பொதுமக்களின் நியாமான போராட்ட உணர்வை புறக்கணிக்காதே! மக்கள் மீதுள்ள பொய் வழக்கை திரும்பப் பெறு!

* கொல்லப்பட்டவரின் குடும்பத்திற்கு நட்ட ஈடு - நிவாரணம் வழங்கு! ஆகிய கோரிக்கைகளை முன் வைத்து நகரமெங்கும் பிரசுரங்கள் விநியோகித்தும், சுவரொட்டி ஒட்டியும் திருவோனம் வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் விடுதலை முன்னணி பிரச்சாரம் மேற்கொண்டது.

சர்வகட்சி பொதுக்கூட்டம், கண்டன ஆர்ப்பாட்டம் முதலான இயக்கங்கள் எடுக்க தீர்மானித்து அனைத்து கட்சிகளையும் வி.வி.மு. அணுகி அழைப்பு விடுத்தது. ஆனால் எந்த ஓட்டுக் கட்சியினரும் இவ்வியக்கங்களுக்கு முன்வரவில்லை. பிறகு வி.வி.மு. தனித்தே 16.6.90 அன்று கண்டன பொதுக்கூட்டம் நடத்தியது. போலீசின் அராஜகங்களை எதிர்க்க எந்த கட்சியும் துணியாத பொழுது வி.வி.மு. துணிந்து நடத்திய இத்தகைய இயக்கங்களை மக்கள் வரவேற்றனர். பொதுக்கூட்டத்திற்கு பெருவாரியான மக்கள் திரண்டு வந்து ஆதரித்தனர்.

இன்று, போலீசின் கொலைவெறிக்கு எதிராக தன்னெழுச்சியாக போராடிய கறம்பக்குடி மக்கள் இனிவரும் காலங்களில் வர்க்க உணர்வு பெற்று புரட்சிகர அமைப்புகளின் பின்னே அணிதிரண்டு மக்கள் விரோத கிரிமினல் கும்பலான போலீசையே துடைத்தெறிவது திண்ணம்.

● ○ ●

## மலிவு விலை சாராயத்தை எதிர்த்து இயக்கம்

கருணாநிதியின் மலிவு விலை சாராயத்தை எதிர்த்தும், அரிசி விலையேற்றத்தை கண்டித்தும் உத்தமபாளையம் விவசாயிகள் விடுதலை முன்னணி கடந்த மாதத்தில் இயக்கம் மேற்கொண்டு 5 இடங்களில் தெருமுனைக் கூட்டமும், கலை நிகழ்ச்சியும் நடத்தியது. மேட்டுப்பட்டி, சங்கராபுரம், மல்லிங்காபுரம், கோம்பை ஆகிய ஊர்களில் நடத்தப்பட்ட தெருமுனைப் பிரச்சாரத்திற்கு பெருவாரியான மக்கள் திரண்டு வந்து ஆதரித்து மனமுவந்து நிதியுதவி செய்தனர்.

இப்பிரச்சாரத்தை தொடர்ந்து கடந்த 21.5.90-ல், பெரியார் லோயர் கேம்ப் சிற்றூரில் வி.வி.மு.-வின் கொள்கை விளக்கப் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. தோழர் பாலன் தலைமை தாங்கினார். உத்தமபாளையம் வட்ட வி.வி.மு. தோழர்களும் உசிலை வட்டத்தைச் சேர்ந்த தோழர் கே.பி.ராமசாமி. அவர்களும் உரை நிகழ்த்தினர். உத்தம பாளையம் வட்ட கலைக்குழு தோழர்களின் கலைநிகழ்ச்சி சிறந்த வரவேற்பை பெற்றது. புரட்சிகர அமைப்பின் வீச்சைக் கண்டு கிலிபிடித்த போலீசு கும்பல் வழக்கம் போலவே மக்களிடம் பீதியூட்டி விட்டுச் சென்றது.

தகவல்: வி.வி.மு. உத்தமபாளையம்.

படிப்பகம்

www.padippakam.com

பொன்மலை:

# தொழிலாளர்கள் உறுதி! நிர்வாகம் பணிந்தது!



பொன்மலை ரயில்வே பணிமனையில் நடந்துவரும் வட்டிச் சுரண்டல் கொடுமையையும், தொழிலாளர்களின் தற்கொலைக்குக் காரணமாக இருந்து வரும் வட்டிச் சுரண்டல் பேர்வழியான அலெக்சாண்டரையும் அம்பலப்படுத்தி நிர்வாகத்தை இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படியும் வலியுறுத்தி ரயில்வே ஒர்க்கர்ஸ் யூனியன் (RWU) தொடர்ந்து பல இயக்கம் எடுத்து வருகிறது. நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் அதன் மெத்தனப் போக்கை கண்டித்து 25.5.90 அன்று ஆலை வாயிலில் கூட்டம் நடத்தப்பட்டது.

கூட்டத்திற்கு (RWU) வின் தலைவர் தோழர் நேசஇருதயம் தலைமை ஏற்றார். RWU-வின் அமைப்புச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் தேவராஜன் (போலிகளான CPM கட்சியிலும், தொழிற் சங்கமான CITU தலைமையில் உள்ள DREU தொழிற்சங்கத்திலும் செயலாற்றியவர்), தான் முன்பு செயல்பட்ட அமைப்பில் இருந்து ஏன் வெளியேறினேன் என்பதை விரிவாக கூறி போலிகளை தோலுரித்தார். சிறப்புரையாற்றிய தோழர் முருகானந்தம் (பொதுச் செயலாளர் RWU) வட்டிச் சுரண்டலுக்கு எதிராக நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லையெனில் தொழிலாளர்கள் இதில் நேரடியாக தலையிட வேண்டிவரும் என எச்சரித்தார்.

24.5.90 அன்று ஆலையில் ஒரு பிரிவில் வேலை செய்து கொண்டிருந்த பெண் ஊழியர் ஒருவரை சதர்ன் ரயில்வே மஸ்தூர் யூனியனைச் சேர்ந்த கேரேஜ் மற்றும் வேகன் கிளை உதவி தலைவர் டி.செல்லதுரை குடிபோதையில் கையைப் பிடித்து இழுத்து தவறாக நடக்க முயற்சித்த செய்தி தெரியவந்தது. இந்த வெறிச் செயலைக் கண்டித்தும், உடனடி நடவடிக்கை எடுக்குமாறு நிர்வாகத்தை வலியுறுத்தியும் தோழர்கள் கூட்டத்தில் பேசினர். 40 ஆண்டு காலமாக எந்த



தொழிற்சங்கமும் கண்டிராத அளவில் சுமார் 1000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பெண் ஊழியரிடம் தவறாக நடக்க முயற்சித்த டி.செல்லதுரை மீது நடவடிக்கை எடுக்கும்படி நிர்வாகத்தை நிர்பந்திக்க தொழிலாளர்களை அணிதிரளுமாறு கேட்டு ஆலையெங்கும் RWU 31.5.90 அன்று பிரசுரம் ஒட்டியது. அதைத் தொடர்ந்து சம்பவம் நடந்த பெயிண்ட் ஷாப் பிரிவு தொழிலாளர்கள் முதல்கட்டமாக காப்பி - தேநீர் புறக்கணிப்பு இயக்கம் நடத்தினர். பிறகு தொழிலாளர்கள், RWU தலைவர் தோழர் நேச இருதயம் தலைமையில் கூடி அதிகாரிகளிடம் உடனடியாக நடவடிக்கையெடுக்க வேண்டும் என நிர்ப்பந்தித்தனர். அன்றே சம்பந்தப்பட்ட நபர் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டார். இவருக்கு துணையாக இருந்த மூவர்மீது 'சார்ஜ் ஷீட்' கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மே நாளில் தொடங்கப்பட்டு, பொன்மலை ரயில்வே தொழிலாளர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் RWU-வின் வெற்றியின் முதல்படி இது. பொன்மலை தொழிலாளர்கள ரயில்வே துறையில புதிய சகாப்தம் படைப்பதை இனியாராலும் தடுக்க இயலாது.

தகவல்: ரயில்வே ஒர்க்கர்ஸ் யூனியன், பொன்மலை.


படியுங்கள்!

இந்தியாவின் 'காஷ்மீர் யுத்தம்'

எக்னாமிக் அண்டு பொலிடிக்கல் வீக்ளி ஏட்டிலிருந்து

பிரபல பத்திரிக்கையாளர்களும் மனித உரிமைக் கழகத்தினரும் காஷ்மீருக்கு நேரில் சென்று யதார்த்த நிலைமைகளைத் தொகுத்தளிக்கும் அறிக்கை.

— 'புதிய ஜனநாயகம்' வெளியீடு —

விலை ரூ.3.50 124 பக்கங்கள்

நூலை அஞ்சலில் பெற விரும்புவோர் ரூ.4.10 பைசா மதிப்புடைய அஞ்சல் தலைகளை அனுப்புக.


★ இந்தியக் கொலைவெறி ராணுவமே காஷ்மீரிலிருந்து வெளியேறு!

★ காஷ்மீர் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போர் வெல்க!

# ம.க.இ.க.வின் அரங்கக் கூட்டங்கள்

காஷ்மீர் ரத்த வெள்ளத்தில் ஆழ்த்தப்படுகிறது. ஈழத்தில் கொலை வெறியாட்டம் நடத்திய இந்திய ராணுவம் இப்போது காஷ்மீரை சுடுகாடாக்கி வருகிறது. ஆனால் இந்திய அரசும் அனைத்து ஓட்டுக்கட்சிகளும் ''காஷ்மீரில் போராடுபவர்கள் முஸ்லீம் மத வெறியர்கள்; அவர்கள் இந்துக்களை கொல்கிறார்கள்; மாநிலத்தை விட்டு விரட்டுகிறார்கள். இது முழுக்க முழுக்க பாகிஸ்தானின் தூண்டுதலினால் நடத்தப்படுவது; காஷ்மீரை பாகிஸ்தானுடன் இணைக்கும் சதி. இதை இந்திய அரசு முறியடிக்க வேண்டும். தீவிரவாதிகளை ஈவிரக்கமின்றி அடக்கி ஒழிக்க வேண்டும் என கூப்பாடு போடுகிறார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் காஷ்மீரின் உண்மை வரலாற்றை விளக்கியும், காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்தும், காஷ்மீர் மக்கள் மீது இந்திய அரசு தொடுத்து வரும் இராணுவ அடக்குமுறையையும், பொய்ப் பிரச்சாரத்தையும் திரை கிழித்தும் தமிழகமெங்கும் அரங்கக் கூட்டங்களை மக்கள் கலை இலக்கிய கழகம் நடத்துகிறது.

15.6.90 அன்று திருச்சியிலும், 16.6.90 அன்று மதுரை மற்றும் கடலூரிலும், 18.6.90 அன்று தஞ்சை மற்றும் வேலூரிலும், 25.6.90 அன்று சென்னையிலும் நடைபெற உள்ளது.

அன்பார்ந்த உழைக்கும் மக்களே! அணிதிரண்டு வாருங்கள்! காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவு தாருங்கள்!

— இவண்,
ம.க.இ.க. தமிழ்நாடு.



படிப்பகம்

www.padippakam.com




● ஒருமுறை புதிய ஜனநாயகத்தில் நடிகர் பாண்டியன் - நடிகை சுதா கற்பழிப்பு விவகாரம் பற்றி எழுதி நடிகர் பாண்டியனை குற்றவாளி என்று கூறினீர்கள். ஆனால் கோர்ட் தீர்ப்பு அவரை நிரபராதி என்றும், நடிகை சுதாவின் வாக்குமூலம் ஒன்றுக்கொன்று முரண்பட்டுப் போயுள்ளது என்று நீதிபதி தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். உண்மையான விவரம் தெரியாமல் அவரை எடுத்த எடுப்பில் குற்றவாளி என்று சொல்ல உங்களுக்கு எந்த ஆதாரம் கிடைத்தது?

— சி.சங்கர், நடிகர் பாண்டியன் ரசிகர், உளுந்தூர்பேட்டை.

○ பொதுவாகவே, கற்பழிப்புக்கு எதிரான சட்டங்களும், போலீசும், நீதித் துறையும் பாதிக்கப்படும் பெண்களை மேலும் இழிவுபடுத்துவதாகவும், குற்றவாளிகளைத் தப்புவிப்பதாகவும் உள்ளதைப் பல வழக்குகள் காட்டுகின்றன. நாட்டிலேயே அதிக அளவு கற்பழிப்புக் குற்றங்களில் ஈடுபடும் போலீசுக்காரர்களில் இதுவரை யாருமே தண்டிக்கப் பட்டதில்லை. கறுப்புப் பணத்திலே மிதக்கும் நடிகர் பாண்டியன் போன்றவர்கள் சட்டம், போலீசு, நீதித் துறையை விலைபேசி வாங்குவதும் கடினமான காரியமில்லை. அப்பாவிப் பெண்களுக்கு ஆசைகாட்டி, கற்பழித்து, நிர்வாணப் புகைப்படமெடுத்து, மிரட்டி 'ஃபுளூபிலிம்' (ஆபாச சினிமா) எடுத்ததாகக் கைது செய்யப்பட்ட நடிகர் சுமன் வழக்கு என்ன ஆனது?

சுதாவைப் போன்ற ஆயிரக்கணக்கான துணை நடிகைகள்; இங்கே சினிமா கறுப்புப் பண கிரிமினல்கள், அரசியல்வாதிகள், போலீசுக்காரர்களின் பிடியிலே சிக்கி அவதிப்படுகிறார்கள், பாலியல் வன்முறைக்கும், விபச்சாரத்துக்கும் பலி ஆகிறார்கள். இதையே பலமாக வைத்து கற்பழிப்புப் புகார் வந்ததும் பாண்டியன் கும்பல் பிரச்சாரம் செய்தது. போலீசு, அரசியல் தலைமையைச் சேர்ந்தவர்களின் பாதுகாப்பைத் தேடிக் கொண்டது; விபச்சாரி - மலையாளி என்ற பிரச்சாரத்தோடு நடிகர் சங்கத் தலைவரும், திராவிட நடிகர்களும் பாண்டியன் சார்பாகத் திரண்டனர். ஊர்வலம் நடத்தக் கூட முயன்று, அரசு உறுதிமொழி பெற்றனர். வழக்கு பதிவானவுடன் ஆளும் தி.மு.க. பிரச்சார அணியிலே சேர்ந்தார் பாண்டியன். இந்தப் பின்னணியை எல்லாம் விட்டுவிட்டு 'நீதிமன்ற'த் தீர்ப்பை ஏற்க முடியுமா?

● 'உழுபவர்க்கே நிலம் சொந்தம்' என்கிற முழக்கம் இந்தியச் சூழலுக்கு ஏற்புடைய முழக்கம் அல்ல என்று தோழர் அ.மார்க்ஸ் பட்டுக்கோட்டையில் நடைபெற்ற கூட்டமொன்றில் குறிப்பிட்டார். இந்தக் கருத்து எந்த வகையில் சரி அல்லது தவறு என்பதை விளக்க முடியுமா?

— விஷ்ணுவர்த்தன், பட்டுக்கோட்டை.

○ பேராசிரியர் அ.மார்க்ஸ் இந்த முடிவுக்கு வந்ததற்கு அடிப்படையான ஆய்வுகளைப் படிக்கும் வாய்ப்பு இன்னும் கிட்டவில்லை. அந்த ஆய்வுகளைப் படித்துப் பரிசீலிக்காமல முடிவான கருத்து எதையும் கூற இயலாது. இந்த முழக்கத்தை முன்வைத்து இயங்கும் நமது தோழமை அமைப்பான விவசாயிகள் விடுதலை முன்னணியின் கொள்கை அறிக்கையையும் அதற்கு அடிப்படையான விவசாயத் திட்டத்தையும் படித்திருக்கிறோம். அவை "உழுபவர்க்கே நிலம் சொந்தம்" என்கிற பொதுவான முழக்கத்தை வைக்கும் போதே, அதை எல்லா இடங்கள், எல்லா நிலைமைகளுக்குமான வறட்டுச் சூத்திரமாகக் கருதவில்லை. குறிப்பான நிலைமைகளுக்கேற்ட குறிப்பான இடங்களுக்கேற்ப விவசாயப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான சில வழிகாட்டுதல்களைத் தருகின்றன. பொதுவில் அவை சரியானவையாக இருக்கிற அதே சமயம் இயக்கத்தின் போக்கிலும், அனுபவங்கள், விமர்சனங்களைப் பெற்று செழுமைப்படுத்தக் கூடியவை என்று நம்புகிறோம்.

● காவிரி நீரால் தஞ்சை வளமாக உள்ளது என்பது நன்றாகத் தெரியும். தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் தஞ்சையில் உள்ள மூப்பனார் - வாண்டையார் உள்ளிட்ட பெரும் நிலப்பிரபுகளுக்கு இந்திய ஆட்சி அதிகாரத்தில் செல்வாக்கு சிறிதளவு செல்வாக்கு, இருந்திருந்தால் கர்நாடகா காவிரி பிரச்சனையை உடனே தீர்த்து இருப்பார்கள் அல்லவா? இதைப் போலவே பெரியாறு நிலப்பிரபுக்களுக்கும் செல்வாக்கு இல்லை. எனவே, நிலப்பிரபுத்துவத்திற்கு இந்திய ஆட்சி அதிகாரத்தில் என்ன செல்வாக்கு இருக்கிறது? (இந்தக் கேள்வியைத் தெளிவாகப் புரிந்து கொள்ள தி.க. வெளியீடான "வஞ்சிக்கப்படும் விவசாயம்" பக். 64-65 ஐப் பார்க்கவும்).

○ இந்திய ஆட்சி அதிகாரத்தில் நிலப்பிரபுத்துவத்திற்கு செல்வாக்கு இல்லை என்றால், திராவிடர் கழகம் அறிவித்துக் கொண்டுள்ள இலட்சியம் - கொள்கைகளுக்கே அடிப்படையும் அவசியமும் இல்லாமல் போயிருக்கும். தி.க. எதிர்ப்பதாகக் கூறும் பார்ப்பனீயத்தின் சமுதாய அடிப்படையே நிலப்பிரபுத்துவம்தான். ஆனால் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு விவசாயகளின் புரட்சியில் இருந்து திராவிட நிலப்பிரபுக்களைக் காப்பதற்காக தி.க. சில வெற்றுவாதங்களை வைத்து வருகிறது. அவற்றில் ஒன்றுதான் இது.

தமிழகத்தில் மூப்பனார் - வாண்டையார் ஆதிக்கம் - செல்வாக்கு இருப்பதைப் போலவே கர்நாடகாவிலும், கேரளாவிலும் நிலப்பிரபுத்துவ சக்திகள் இருக்கிறார்கள். இப்படி வெவ்வேறு மாநிலங்களில் உள்ள நிலப்பிரபுக்களுக்கிடையே முரண்பாடுகளும் இருக்கின்றன. அவர்களின் ஒப்பீட்டு ரீதியிலான அரசியல் செல்வாக்கைப் பொருத்து நதிநீர்ப் பங்கீடு, கடன் - மானிய ஒதுக்கீடுகளை

**"ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவத்தின் உச்ச கட்டம், சாகும் தறுவாயில் உள்ள, சிதைவுறும் முதலாளித்துவம்" என்று லெனின் கூறினார். ஆனால் அது உடனடியாகவோ, மிக விரைவிலோ வீழ்ந்துவிடும், அழிந்துவிடும் என்று கணிக்கவில்லை.**

ஏற்றத் தாழ்வாகப் பெறுகிறார்கள். பஞ்சாப் பிரச்சினைக்கான அடிப்படைகளில் ஒன்றாக இந்த விவகாரம் இருக்கிறது. நிலப்பிரபுக்களில் வெவ்வேறு பிரிவினர் இவ்வாறு முரண்படுவதும், அவர்களுக்கிடையே, அரசியல் செல்வாக்கு, பங்கீடு, ஒதுக்கீடுகளில் ஏற்றத் தாழ்வு நிலவுவதும் இந்திய ஆட்சி அதிகாரத்தில் நிலப்பிரபுத்துவத்திற்கு செல்வாக்கு இல்லை என்று ஆகாது. இதேபோலத் தான் இந்திய ஆளும் வர்க்கத்தின் இன்னொரு பிரிவான தரகு அதிகார முதலாளிகளிடையேயும் முரண்பாடும் ஏற்றதாழ்வான அரசியல் செல்வாக்கும், பங்கீடு - ஒதுக்கீடும் உள்ளது. ஆகவே, இவற்றை வைத்து ஆளும் வர்க்கங்களின் அரசியல் அதிகாரத்தின் தன்மையை முடிவு செய்யக் கூடாது.

● "ஏகாதிபத்தியத்தை இறக்கும் தறுவாயில் உள்ள முதலாளித்துவம்" என லெனின் அழைத்தார். "ஏனெனில் ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் முரண்பாடுகளை அவற்றின் கடைசி எல்லைகளுக்கு, உச்ச நிலைகளுக்குக் கொண்டு வருகிறது. அதைத் தொடர்ந்து புரட்சி ஆரம்பிக்கிறது" என்று ஸ்டாலின் கூறினார்.

ஆனால் மேற்கூறிய ஸ்டாலின் கூற்றினை ஒவ்வாமல் உலக நிகழ்ச்சிகளின் போக்கு மாறி வருகிறதே இதற்கு என்ன காரணம்? ஜப்பான், மேற்கு ஜெர்மனி, பிரான்சு, பிரிட்டன், அமெரிக்கா போன்ற ஏகாதிபத்தி நாடுகளில் புரட்சியின் சாத்தியப்பாடு தெளிவில்லாமலும் ஆனால் இடது தீவிரவாதம் (ஜப்பான், மேற்கு ஜெர்மனி) அதிகம் வளர்ந்துள்ளதே. இது குறித்து சரியான விளக்கம் கூறவும்.

— சு.சுந்தர வடிவேலு, சாந்தப்பட்டு.

○ "ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவத்தின் உச்ச கட்டம். சாகும் தறுவாயில் உள்ள, சிதைவுறும் முதலாளித்துவம்" என்று லெனின் கூறினார். ஆனால் அது உடனடியாகவோ, மிக விரைவிலோ வீழ்ந்துவிடும், அழிந்துவிடும் என்று கணிக்கவில்லை. இது ஏகாதிபத்தியம் மற்றும் சோசலிசப் புரட்சியின் சகாப்தம் என்று வரை

படிப்பகம்

www.padippakam.com

யறுத்தார். ஆனால் இது எவ்வளவு காலம் நீடிக்கும் என்று கூற வில்லை. ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சியும் சோசலிசத்தின் இறுதி வெற்றியும் எப்போது நிறைவுறும் என்று காலக் கெடு எதையும் அவர் நிச்சயிக்கவில்லை. குட்டி முதலாளித்துவ 'இடது' சந்தர்ப்பவாதிகள் தான் தமது அகநிலை ஆசை கண்ணோட்டத்தினால் அப்படிக் கற்பித்துக் கொண்டார்கள். ''ஏகாதிப்பத்தியத்தின் முற்று முழுதான வீழ்ச்சியும், சோசலிசத்தின் உலகு தழுவிய வெற்றியும் என்ற மாவோ சகாப்தம் தோன்றிவிட்டது'' என்று கூட சீனாவின் துரோகி லின்பியாவோவும் அவரது சர்வதேசக் கூட்டாளிகளும் பிதற்றினர்.

''ஏகாதிபத்தியம் என்பது இறக்கும் தறுவாயில் உள்ள, சிதைவுறும் முதலாளித்துவம்'' என்று லெனின் கூறுவது பின்வரும் பொருளில் தான்: கட்டுப்பாடற்ற, சுதந்திரமான போட்டி மற்றும் ஏறுமுகமாயிருந்த முதலாளித்துவமும், முதலாளித்துவ புரட்சியும் என்ற சகாப்தம் முடிவுக்கு வந்துவிட்டது. நிதி மூலதன, ஏகபோக ஆதிக்கம் மற்றும் இறங்குமுகமாகிவிட்ட முதலாளித்துவமும் சோசலிசப் புரட்சியும் என்ற புதிய சகாப்தம் துவங்கிவிட்டது. பாட்டாளி வர்க்கத் தலைமையிலான புரட்சி நிகழ்ச்சி நிரலுக்கு வந்து விட்டது. ஏகாதிபத்தியங்கள் நடத்தும் நாடு பிடிக்கும் யுத்தங்களின் கொடூரங்களையும், அவற்றின் பின் விளைவுகளையும் தொழிலாளர்கள் நேரிடையாகக் காண்கிறார்கள். இதன் மூலம் அவர்கள் ஏகாதிபத்தியத்தின் உண்மைச் சொரூபத்தையம் அறியும் படியும், புரட்சிகர உணர்வைப் பெறும்படியுமான நிலைமையை ஏகாதிபத்தியமே உருவாக்கி விடுகிறது. ஏகாதிபத்தியத்தின் கீழ் அடிமைப்பட்டுள்ள காலனிய, அரைக் காலனிய, சார்பு நாடுகளின் மக்களை உலகப் போர்களில் இழுத்துவிடுவதன் மூலம் அவர்களும் விடுதலை உணர்வு பெறவும் ஆயுதமேந்திப் போரிடவும் வழிவகுக்கிறது. ஏகாதிபத்தியப் போர்களின் விளைவாக அடிமைநாடுகள் மற்றும் தோல்வியுற்ற நாடுகள் மட்டுமல்ல, வெற்றி பெற்ற நாடுகளும் பொருளாதார நெருக்கடிகளில் சிக்கிக் கொள்கின்றன. உழைக்கும் மக்கள் சகிக்க முடியாத அளவுக்கு வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்கின்றன. உலகநாடுகளைக் கூறு போடுவதற்காக ஏகாதிபத்தியங்களிடையே நடக்கும் பேரங்கள், ஒப்பந்தங்கள் கண்டும் அவர்கள் அருவெறுப்படைகிறார்கள். இவ்வாறு ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சிக்கும், உழைக்கும் மக்கள் புரட்சிக்கும் அடிப்படையான ஒரு புரட்சிகர நெருக்கடியை அகவயமாகவும் புறவயமாகவும் ஏகாதிபத்தியமே உருவாக்குகிறது.

ஏகாதிபத்தியம் என்பது சிதைவுறும். இறுதித்தறுவாயில் உள்ள முதலாளித்துவம் என்று கூறும்போது அதன் பொருளாதாரம் முற்று முழுதான தேக்கநிலையை அடைந்து வளர்ச்சிக்கே இடமில்லாமல் போய்விடும்; ஏகாதிபத்தியப் பொருளாதாரம் அப்படியே தலைகுப்புற. நிலைகுலைந்து வீழ்ந்துவிடும் என்று லெனின் கருதவில்லை.

**இந்திய ஆட்சி அதிகாரத்தில் நிலப்பிரபுத்துவத்திற்கு செல்வாக்கு இல்லை என்றால், திராவிடர் கழகம் அறிவித்துக் கொண்டுள்ள இலட்சியம் - கொள்கைகளுக்கே அடிப்படையும் அவசியமும் இல்லாமல் போயிருக்கும்.**

''சிதைவுறும் இந்தப் போக்கு முதலாளித்துவத்தின் துரித வளர்ச்சியைக் தடுத்து ஒதுக்கிவிடுகிறது என்று நம்புவது தவறாகி விடும். அப்படி நடப்பதில்லை. ஏகாதிபத்திய சகாப்தத்தில் தொழிலின் சில பிரிவுகள், சில பிரிவு முதலாளிகள், சில நாடுகள் கூடுதலான அல்லது குறைந்த அளவுக்கு இப்போது ஒன்றாகவும், பிறகு வேறொன்றாகவும் இந்தப் போக்குகளை வெளிப்படுத்துகிறார்கள். ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது முன்பைவிட மிக மிக அதிவேகமாக முதலாளித்துவம் வளர்கிறது; ஆனால் இந்த வளர்ச்சி பொதுவிலும் மேலும் மேலும் அதிக அளவிலும் ஏற்ற தாழ்வாக மாறுவது மட்டுமல்ல; குறிப்பாக, அதிகபட்ச மூலதனச் செல்வநாடுகள் (பிரிட்டன்) சிதைவுறுவதில் இந்த ஏற்றத்தாழ்வு தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது'' (லெனின், தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் தொகுதி:1. பக்.728)

ஆகவே, ஏகாதிபத்தியப் போர்களுககு இட்டுச் செல்லும் வெறித்தனமான கொள்ளைகள் அதிகரிப்பதிலும் புரட்சிகர நெருக்கடியிலும் தான் முதலாளித்துவ சிதைவுக்கான அடிப்படை இருக்கிறது. இவைதான் சமுதாயப் புரட்சிக்குத் தளம் அமைக்கின்றன

ஏகாதிபத்தியத்தினால் உருவாகும் இந்தப் புரட்சிகர நெருக்கடிக்கு பொருத்தமாக அந்நாடுகளில் சோசலிசப் புரட்சி வெடிக்கவில்லை. ஏகாதிபத்தியத் தோற்றத்துடன், பாட்டாளி வர்க்க இயக்கத்துக்குள் சீர்திருத்தவாதம் வளர்வதுதான் இதற்கான காரணம் என்கிறார் லெனின். ஏகாதிபத்தியங்களின் காலனி ஆதிக்கம் அந்நாடுகளின் தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் பெருக வசதி ஏற்படுத்துகிறது. ஏகாதிபத்தியக் கொள்ளையின் ஒரு பகுதியைக் கொண்டு தொழிலாளர்களிடையே ஒரு பிரிவினரை மேட்டுக்குடி செல்லப்பிள்ளைகளாக்கியும், தொழிற்சங்கத் தலைவர்களுக்கு கையூட்டு அளித்தும் சீர்திருத்தவாதத்தை வளர்க்கிறார்கள். அதேசமயம் ஏகாதிபத்திய உலகக் கட்டமைப்பின் பலவீனமான கண்ணிகளான பின்தங்கிய நாடுகளில் புரட்சி வெடிக்கும் என்றார், லெனின். அதுபோலவே நடந்தது. உலகின் பல நாடுகளின் புரட்சி வென்றது.

ஏகாதிபத்திய நாடுகளின் சட்டபூர்வத் தொழிலாளர் இயக்கமோ சீர்திருத்தவாத சகதிக்குள் மூழ்கிக் கிடக்கிறது. ஏகாதிபத்தியங்கள் நடத்தும் அழிவுப் போர்களும், கொள்ளைகளும், நெருக்கடிகளும் அந்நாடுகளின் குட்டி முதலாளித்துவ அறிவு ஜீவிகளிடையே இயல்பாகவே வெஞ்சினத்தைத் தோற்றுவிக்கின்றன. புரட்சிகர இயக்கத்தையும் தொழிலாளர் இயக்கத்தையும் ஒன்றிணைப்பதில் நம்பிக்கை இழந்துவிட்ட அறிவுஜீவிகள், அதற்கான ஆற்றலோ - வாய்ப்போ இல்லாத அந்த அறிவுஜீவிகள் தமது வெஞ்சினத்தின் தன்னியல்பை வழிபடும் பயங்கரவாதத்துக்குள் தஞ்சமடைகிறார்கள். எனவேதான் அந்நாடுகளில் பயங்கரவாதச் செயல்களையே அரசியல் போராட்ட வழிமுறையாகக் கொண்ட இடது தீவிரவாதக் குழுக்கள் தோன்றுகின்றன.

**நடிகர் பாண்டியன் போன்றவர்கள் சட்டம், போலீசு, நீதித் துறையை விலைபேசி வாங்குவதும் கடினமான காரியமில்லை. அபலைப் பெண்களுக்கு ஆசைகாட்டி, கற்பழித்து, நிர்வாணப் புகைப்படமெடுத்து, மிரட்டி 'ஃபுளூபிலிம்' (ஆபாச சினிமா) எடுத்தத்தாகக் கைது செய்யப்பட்ட நடிகர் சுமன் வழக்கு என்ன ஆனது?**

முன்னாள் சோசலிச நாடுகளில் மீண்டும் முதலாளித்துவம் நிலைநாட்டப்பட்டு விட்டது. ஏகாதிபத்தியங்களிடையே ஒருவகை சமரசமும், கூட்டும், சமாதானமும் நிலவுகிறது. இருந்தபோதும் இதன் வெளித்தோற்றம், தற்காலிகமானதுதான். ஏகாதிபத்தியங்களிடையே ஏற்றதாழ்வான, விட்டுவிட்டுத் தாவும் வளர்ச்சியும், நிதி மூலதன, ஏகபோக ஆதிக்கமும் - இவை காரணமாகப் போட்டியும் கொள்ளை வெறியும் நிரந்தரமானவை. எனவே ஏகாதிபத்தியப் போர்களும் புரட்சிகர நெருக்கடிகளும் தவிர்க்க முடியாதவை. அவை ஏகாதிபத்தியம் பற்றிய லெனினியக் கோட்பாடுகளை மீண்டும் நிரூபித்து உறுதிப்படுத்தும்.

● *திருச்சி நேரு சிலை தகர்ப்பு சம்பவத்தையொட்டி செய்தி வெளியிட்டதில் புதிய ஜனநாயகத்தின் நிலைப்பாட்டில் போலீசு - காங்கிரசு சதியென்றும், பிறகு தமிழரசன் குழுவின் வேலையென்று நடப்பு தினசரி பத்திரிக்கையின் செய்தியாகவும் இருப்பது ஒன்றுக்கொன்று முரண்பாடுடையதுதானே?*

— இரா.கதிரவன், நல்லம்பள்ளி.

○ திருச்சி நேரு சிலை தகர்ப்புக்குக் காரணமானவர்களைப் பிடிக்க முயலுவதற்குப் பதிலாக அடுத்தடுத்து இரண்டு போலீசு நாய்களைக் கொண்டு வந்து, அவற்றை வலுக்கட்டாயமாக மக்கள் கலை இலக்கியக் கழக 'அலுவலக'த்தின் மீது ஏவிவிட்டார்கள் போலீசுக்காரர்கள். ம.க.இ.க. மீது அவதூறு பரப்பி, அத்தோழர்களைத் தாக்கி, அவர்கள் மீது பொய் வழக்குப் போட முயன்றார்கள்.

தமிழகத்தில், குறிப்பாக திருச்சி நகரில் மிகப் பெரிய அளவுக்குத் தேர்தல் புறக்கணிப்பு இயக்கம் நடத்திக் கொண்டிருந்தது ம.க.இ.க.தான். நேருசிலை தகர்ப்பை வைத்து ம.க.இ.க. தோழர்களைக் கைது செய்து, அதன் பணிகளை முடக்கி, தீவிரவாதப் பீதி கிளப்பி ஆதாயம் தேட காங்கிரசு முயன்றது. இந்த அடிப்படையிலும் மக்கள் மத்தியில் விசாரணை செய்து அறிந்து கொண்ட செய்திகளையும் வைத்து திருச்சி நேரு சிலை தகர்ப்பு போலீசு - காங்கிரசு சதியென்று எழுதினோம். மேலும் அரியலூர் ரயில் பாலம், குடமுருட்டி பாலம், கொடைக்கானல் வானொலி நிலையம் ஆகிய குண்டு வைப்புகளுக்குத் தமிழரசன் குழு உரிமை பாராட்டிக் கொண்டது. ஆனால் அக்குழுவின் ஒரு தோழமை ஏடு. ''திருச்சிசிலை தகர்ப்பும், தஞ்சை அசோகச் சின்னத் தகர்ப்பும் காங்கிரசு கைகூலிகள் செய்த காரியங்கள்'' என்று எழுதியுள்ளது. ●


படிப்பகம்

www.padippakam.com
R.N. 42648/85

Regd.No.TN/MS(S) 344



பாரம்பரிய தெருகூத்து கலையின் மீது ஈடு பாடு கொண்ட இவர், தன்னுடைய விவசாய தொழிலின் ஊடே 'தோட்டட்டா' கலையை கடுமையான சிரமங்களுக்கு மத்தியில் தேடி பயின்றார்! அதோடு கூடவே, தனது இளமை காலத்தில் சுதந்திரப் போராட்டத்தி லும் ஊக்கமாக பங்கெடுத்தார்! மகாபாரதத் தில் அர்ஜுனன் பாத்திரத்தின் சிறப்புகளை விளக்குவதில் சிறப்பான கட்டியங்காரராக அறியப்பட்டார். எந்த எதிர்பார்ப்பும் இல் லாமல் தம்மைப்போன்ற விவசாயிகளுக் கும் கிராமிய இளைஞர்களுக்கும் இக்க லையை பல காலம் கற்றுக் கொடுத்தார். கடைசியில் தனது வருமானத்துக்கு வழியில் லாமல் கவனிப்பார் இல்லாமல் நகரத்திற்கு வந்து காவலாளியாக வேலை செய்தார். அவ்வேலையும் போய்விடவே வேறுவழி யின்றி பிச்சையெடுத்து பிழைக்கிறார்!

ஆளுங்கட்சி தலைவர்களுக்கும் அதி கார வர்க்கத்திற்கும் உறவினராய் விசுவாசி யாய் இருந்தால் அறிவு சூன்யங்களுக்குக் கூட அதிகார பதவிகள்! இந்த அவமா னத்தை இன்னும் நாம் எத்தனை நாள் தான் சகித்து வாழ்வது?

# இருண்ட இந்தியா

இந்த அம்மணியை உங்களுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை! இவர்பெயர் பபுல் ஜெயகர்; நுனி நாக்கில் ஆங்கிலம் பேசும் அதிகாரவர்க்க மேட்டுக்குடியினரின் கலை ரசனை அரட்டைக்கு கர்த்தா! இறந்த இந்திரா காந்தியின் குடும்பத்தோழி! பாசிச ராஜீவ் அரசின் கலாச்சார ஆலோசகர்! ராஜீவ் அரசின் உள்வட்டத்தில் அதிகார தாழ்வாரத்தில் வளைய வந்தவர். ராஜீவ் அரசால் உலகம் முழுவதும் நடத்தப்பட்ட ஐந்து நட்சத்திர கலைவிழாக்களின் சூத்திர தாரி! இந்திய அரசின் கலாச்சார துறை பிரதி நிதியாக ஆண்டு முழுக்க உலகம் முழுவதும் பறந்தவர். இவ்வளவுக்கும் இவர் இந்திய கலைகளின் எந்த துறையிலும் தேர்ச்சிப் பெற்றவர் அல்ல! கலையின் வளர்ச்சிக்கோ, அதன் ஆராய்ச்சிக்கோ அறிவு இல்லாதவர்.

ராஜீவ் அரசு கடந்த தேர்தலில் மண்ணைக் கவ்வும் என்று தெரிந்தவுடன் தேசீய முன்னணிக்கு தாவி அதன் தலைவர் களுக்கு விசுவாசியானார்!

ராஜீவ் அரசிடம் பெற்ற டெல்லி சப்தர்ஜங் சாலை உல்லாச பங்களாவை இன்றளவும் பயன்படுத்துகிறார். இவருடைய பதவிக்கு, இவரைப் போலவே கலை இலக்கியத்தில் எந்த அறிவும் இல்லாத ஐ.ஏ.எஸ். அதிகாரி கள் - மனைவிகள், தலைவர்களுக்கு நெருக் கமானவர்களை நியமித்திருக்கிறது வி.பி. சிங் அரசு?

86 வயதான இந்த முதியவர் சென் னப்ப ஹங்காடி கர்நாடக மாநிலத்தின் தார் வாட் என்ற நகரத்தில் பேருந்து நிறுத்தங்க ளில் பிச்சை எடுக்கிறார்! கிராமிய கலையின் விற்பன்னரான இவர் கர்நாடக அரசின் 'ஜனதா அகடமி' விருது பெற்றவர். கிரா மிய மரபு கலையான 'தோட்டட்டா' என்ற தெருகூத்து பாணியிலான தொன்மையான கலைக்கு உயிர் கொடுத்தவர். பெல்காம் மாவட்டத்தில் குக்கிராமத்தில் விறகு வெட் டிக்கு மகனாக பிறந்தார். சிறுவயதிலேயே



படிப்பகம்